296

296/63



நாடு புகழும் ஜி.டி.நாயுடு

DWM93
N63
106799

அரு. சோமசந்தரன் B.A.B.T.

நாடு புகழும் ஜி. டி. நாயுடு

MADRAS RECORD OFFICE
MADRAS

அரு. சோமசுந்தரன். பி.ஏ., பி.டி.,

அருணா பப்ளிகேஷன்ஸ்
தியாகராய நகரம் :: சென்னை - 17.

முதற் பதிப்பு மே, 63.

106799

விலை 1-75

DWM93
X163

அச்சிட்டோர் :
குமுதம் அச்சகம்,
76, எல்லிஸ்ரோடு,
சென்னை - 2.

முன்னுரை

தமிழ்நாட்டில் உருப்பெற்றுள்ள முழுநீள வாழ்க்கை
வரலாறுகள் மிகக் குறைவாகவே உள்ளன. காரணம்
நமது சிந்தனை இன்னும் நாவல் உலகத்தைவிட்டுத் திரும்
பாததே ஆகும். பிறநாட்டுப் பெரியோர்களின் வாழ்க்கை
வரலாறுகளைப் படிப்பதிலும் கேட்பதிலும் நாம் காட்டு
ன்ற அளவு ஆர்வத்தை நம் நாட்டுச் சான்றோர்கள்பால்
ாம் திருப்புவதில்லை. ஏனென்றால் நமது உள்ளம் அய
லார்க்கு அடிமைப்பட்டு அடிமைப்பட்டுத் தேய்ந்துவிட்
டது. அது தெளிவடைய இன்னும் எத்தனை நூற்றாண்டு
கள் ஆகுமோ தெரியவில்லை. அதற்குள் நமது தனித்
தன்மையே மறைந்தாலும் மறையக்கூடும். எனினும் அந்த
நிலை ஏற்படாமல் தடுப்பதும் காப்பதும் தமிழறிஞர்தம்
கடமை. தூற்றும் பழக்கத்தை நிறுத்திப் பிறரைப் போற்
றும் பழக்கத்தை மேற்கொள்ள வேண்டுவது பொதுமக்கள்
தம் கடமை.

நம் நாட்டுப் பெரியோர்களில் முன்னணியில் வைத்து
எண்ணத்தக்க பெருமை உடையவர் திரு. ஜி. டி. நாயுடு
ஆவார். சிறந்த விஞ்ஞானியாகவும், உயர்ந்த தொழில்
ல்லுநராகவும் விளங்கும் அச் செயல் வீரரைப்பற்றி நமது
க்கள் செவி வழியாகச் செய்தி அறிவார்களே ஒழிய நூல்
ழியாகப் படித்து முறைப்படி அறியமாட்டார்கள்.
தக் குறையைப் போக்க விரைந்த எனக்கு நாயுடுவின்
வலகப் பணியாளர்கள் நற்றுணை புரிந்தனர். வேண்
உண்மைகளைச் சேகரித்துக் கொடுத்தனர். அவர்களது
துழைப்பாகிய நீர் பாய்ந்ததால்தான் எனது முயற்சி
கிய முல்லை மலர்ந்திருக்கிறது. அதன் மணத்தை நுகரும்

பொறுப்பு மாணவர்கள் கையில்! தமிழ் மக்கள் நெஞ்சில்! நாட்டு மக்கள் காட்டுகின்ற ஆர்வமும் ஆதரவும்தான் இது போன்ற பல வாழ்க்கை வரலாற்று நூல்கள் முகிழ்ப்பதற்கு வழிவகுக்கும். கண்டனவற்றைப் படித்துக் கருத்தைச் சிதறவிடாமல், வாழ்க்கை வரலாறுகளைப் படித்துத் தமிழ் மக்கள் வாழும் நெறி காண வேண்டும் என்பதே என் அவா!

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய பேராசிரியர் திரு. அ. மு. பரமசிவானந்தம் பிள்ளை எம்.ஏ; எம்.லிட்; அவர்களுக்கும், இதனை எழிலுற வெளியிட்டுதவிய அருணா பதிப்பக உரிமையாளர் திரு. கி. கரு. ராம. சாமிநாதன் செட்டியார் அவர்களுக்கும் எனது அன்பு கலந்த நன்றி உரியதாகும். சீரிய எண்ணத்தால் வடித்த இச்சிறு நூலைச் சிலம்பணிந்த தமிழ்த்தாயின் பொன்னடிகளுக்குச் சூட்டுகிறேன்!

அன்புசால்,

அரு. சோமசுந்தரன்

பச்சையப்பன் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர்,

திரு. அ. மு. பரமசிவானந்தம் பிள்ளை, M.A., M.Lit.

அணிந்துரை

நல்ல மலர்கள் முட்களுக்கிடையில் மலர்கின்றன. விலைமதிக்க முடியாத மணிகள் மண்ணுக்குள் இருந்து எடுக்கப் பெறுகின்றன. சிறந்த முத்துக்கள் ஆழ்கடல் அடித்தளத்திலிருந்து கொண்டுவரப் பெறுகின்றன. அப்படியே 'அறிவார் யார் நல்லார் பிறக்கும் குடி?' என்ற மொழிக்கேற்ப நல்லவர்கள் எங்கோ முன்பின் அறியா மூலை முடுக்குகளில் பிறந்து, வளர்ந்து, உலகம் வாழ வழி காட்டுகிறார்கள். அத்தகைய நல்லவருள்—வல்லவருள்—அறிவறிந்தவருள் இன்றும் வாழ்ந்து வழிகாட்டியாக இலங்கும் திரு. ஜி. டி. நாயுடு என்னும் கோவை துரைசாமி நாயுடு அவர்களும் வைத்து எண்ணத்தக்கவர்கள்.

எங்கோ பிறந்து, எத்தனையோ இடர்களைக் கடந்து எதற்கும் சளைக்காத உள்ளத்துடன் வருவதை ஏற்று, வராததற்கு வருந்தாது, "உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?" என்ற உணர்விலே, உழைப்பார் யாரும் முன்னேற்றமடைவர் என்ற உண்மைக்கு எடுத்துக் காட்டாக விளங்குபவர் ஜி. டி. நாயுடு அவர்கள். அவர்தம் அறிவாற்றலைத் தமிழ்நாடும் பாரதமும் மட்டுமின்றி உலகம் முழுதுமே புகழ்கின்றது. அத்தகைய செயல் வீரரைப்பற்றி நாட்டு மக்கள் அறிந்துகொள்ள அவாவுகின்றனர். எனினும் அவர் வாழ்வை வகைப்படுத்திக் காட்டும்

வரலாற்று நூல் இதுவரையில்லை. இக்குறையைப் போக்கவே கவிஞர் அரு. சோமசுந்தரர் அவர்கள் முயன்றுள் ளார். இவர்தம் பணி சிறக்க என வாழ்த்துகிறேன்.

அறிஞர் சோமசுந்தரனார் அவர்கள் உள்ளத்தால் தமிழ்ப் பணி புரிபவர்கள். இவர்கள் முன்னும் பல நூல்கள் எழுதியுள்ளனர். இவர் நடை எளிமையும் தெளிவும் கொண்டது. இந்நூலின் பதினாறு பகுதிகளிலும் இவர் நாயுடுவின் வரலாற்றை வகுத்து விளக்கியுள்ளார். இது வரையில் பலரும் அறியாத சில வாழ்வின் நிகழ்ச்சிகளை எல்லாம் இவர் காட்டும்போது நாம் வியக்கிறோம். இந்நூல் திரு. நாயுடு அவர்களின் செயல் திறனையும், நுண்ணறிவை யும், பிற நல்லியல்புகளையும் உலகுக்கு நன்கு எடுத்துக் காட்டுகின்றது. இந்நூலாசிரியர்தம் முயற்சி சிறந்த போற்றக்கூடிய ஒன்றாகும். தமிழ்நாடு இந்நூலை ஏற்றுக் கொள்வதோடு இவர்வழி இன்னும் பல நூல்களை எதிர் நோக்கி நிற்கின்றது. அன்னைத் தமிழுக்கு ஆசிரியர்தம் ஆக்கப்பணி தழைப்பதாக! ஜி. டி. நாயுடு வரலாற்றின் வழி நாடு விழிப்புறுமாக!

அ. மு. பரமசிவானந்தம்.

உள்ளுறை

எண்	பொருள்	பக்கம்
1.	இளமைப் பருவம்	5
2.	சுவையான நிகழ்ச்சிகள்	10
3.	தொழில் முயற்சி	15
4.	உழைப்பும் உயர்வும்	22
5.	அயல்நாட்டு யாத்திரை-I	30
6.	அயல்நாட்டு யாத்திரை-II	35
7.	ரேசண்ட் பிளேடு	41
8.	பிற கண்டுபிடிப்புக்கள்	47
9.	அயல்நாட்டு யாத்திரை-III	50
10.	தொழிற்சாலைகள்	55
11.	கல்விப் பணி	62
12.	விவசாய விந்தைகள்	73
13.	சித்த வைத்தியர்	80
14.	சொற்பொழிவுகள்	86
15.	உயர்ந்த பண்புகள்	101
16.	பாராட்டுக்கள்	108

1. இளமைப் பருவம்

முன்னுரை

துள்ளித் திரியும் பருவத்தே துடுக்கடக்கிப் பள்ளிக்குச் செல்லாமல் பெற்றோர்க்கும் மற்றோர்க்கும் தொல்லைகள் கொடுத்த பிள்ளைகள் பலர். ஆயினும், காலப் போக்கில் அவர்கள் உலகத்தின் கருத்தையே தம் பக்கம் திருப்பியிருக்கின்றனர். இங்கிலாந்து நாட்டின் கடைவீதி களில் இளமைக் காலத்தில் கலகம் உண்டாக்கிய இராபர்ட் கிளைவ், அறிவு வளர்ந்த காலத்தில் ஆங்கிலப் பேரரசையே இந்திய மண்ணில் நிலைகொள்ளச் செய்திருக்கிறார் என்பது வரலாறு காட்டும் பாடம்! இங்கிலாந்து மண்ணிலே ஓர் இராபர்ட் கிளைவ் தோன்றியது போலத் தமிழகத்தின் ஒரு மூலையிலே ஒரு தவப்புதல்வர் தோன்றியிருக்கிறார். அவர் பள்ளி வாழ்க்கையைப் பலகாலும் வெறுத்தவர்; துள்ளித் திரிந்ததனால் ஊராரால் துரத்தியடிக்கப்பட்டவர். அவரை அன்பாக அணைத்தவர்கள் இல்லை; ஆனாலும், அன்பு நெஞ்சம் கொண்டவர். அவருக்கு யாரும் கல்வி கற்பித்தது கிடையாது; ஆனாலும், இன்று அவர் ஆயிரக்கணக்கான இளைஞர்க்குத் தொழிற்கல்வி கற்பிக்கிறார். அவர் ஒரு காலத்தில் வேலை வாய்ப்புகளைத் தேடி ஓடினார்; ஆனால், இன்று அவர் வேலை தேடித்தரும் நிலையமாக விளங்குகிறார்.

தொழில் துறையில் இந்தியா மேலை நாடுகளுக்கு ஒப்பாக முன்னேற வேண்டும் என்ற தணியாத ஆர்வத்தால் தளராத வயதிலும் உழைக்கிறார். அந்த உயர்ந்த மனிதர் தாம் இன்று நாடு புகழ நிற்கும் ஜி. டி. நாயுடு ஆவார். அவரைப் புகழ்பவர்கள் மிகப் பலர்; ஆனால், புரிந்துகொண்டவர்கள் மிகச் சிலர். புனிதமான இதயம் படைத்த அந்தப் பெருமகனுடைய வாழ்க்கை வளரும் உள்ளங்களுக்கு வழி காட்ட வல்லது; தொழில் துறையில் பின்தங்கியிருக்கும் நமக்குத் துணைநிற்க வல்லது. நுண்ணறிவு படைத்த அவர், நாட்டுப் பணியாற்ற ஓடி வருகிறார். நீட்டும் அந்த நேசக்கரங்களைப் பற்றி அணைத்துப் பயன்படுத்திக் கொள்வோமேயானால், 'நம் நாடும் உலகோடு சமமாக நின்று, தலை தூக்கி நிலைபெற்று வளமாக வாழும்' என்று கூறவும் வேண்டுமோ?

பிறப்பு

கோவை மாவட்டத்தில் கலங்கல் என்றொரு சிற்றூர் உண்டு. அங்கு, 'கோபால்சாமி நாயுடு' என்றோர் உழவர் இருந்தார். அவருக்கு ஒரு வீடும், தோட்டமும், சிறிதளவு புன்செய் நிலமும் உரிமைச் சொத்தாக இருந்தன. புன்செய் நிலத்தில் புகையிலையும் பருத்தியும் பயிராகி வந்தன. அவர் சிறிதளவு பஞ்சு வாணிகமும் செய்து வந்தார். அவர் மனைவியார், கணவரின் கருத்தறிந்து ஒழுகும் பண்பினர்; சிக்கனமாகக் குடும்பம் நடத்தி ஊர் புகழும் உத்தமியாய்த் திகழ்ந்தவர். அந்த மனமொத்த பெற்றோர்க்குச் செல்வப் புதல்வராய் 1893ஆம் ஆண்டில் பிறந்தார் நமது ஜி. டி. நாயுடு என வழங்கும் துரைசாமி நாயுடு. ஆனால், பாவம்! ஒரு வயதுக் குழந்தையாகத் தாயின் மடியிலே தவழ்ந்து விளையாடியபொழுது தாயைப் பறிகொடுத்தார் துரைசாமி! தாயில்லாக் குழந்தையான அவரைத் தாய்மாமனுை

இராமசாமி என்பவர் எடுத்துச் சென்று, தமது சொந்த ஊரான இலட்சுமிநாயக்கன்பாளையத்தில் வளர்த்து வந்தார்.

பள்ளி வாழ்க்கை

அந்நாளில் இலட்சுமிநாயக்கன்பாளையத்தில் ஒரு சிறு திண்ணைப் பள்ளிக்கூடம் இருந்தது. சிறுவனாக வளர்ந்த துரைசாமி, வீட்டில் குறும்புத்தனம் புரிவதும், வெளியில் குழப்பங்கள் உண்டாக்குவதுமே தொழிலாகக்கொண்டிருந் தார். அவரது தொல்லை பொறுக்க முடியாமற் போகவே, அவரைத் திண்ணைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பினார் அவர் தாய்மாமன்! ஆனால், பள்ளியிலும் அதே கதை தான்! துரைசாமியைப் பொறுத்தவரை இடம் மாறியதே ஒழியத் தொழில் மாறவில்லை. வீட்டில் செய்த அதே வேலையை இப்பொழுது பள்ளியில் செய்யத் தொடங்கினார். குழந்தைகளிடம் நிறையக் குறும்பு செய்தார்; ஆனால், ஆசிரியரின் பிரம்புக்குமுன் அடிபணிந்தார். ஆசிரியருக்குப் பணியாவிட்டாலும் பிரம்புக்குப் பணிய வேண்டிய பொற் காலம் அந்தக் காலம்! பயத்தோடு மூன்றாண்டுகள் பல்லைக் கடித்துக்கொண்டு பள்ளிக்குச் சென்று வந்தார். தமிழும் கணக்கும் ஓரளவு கற்றுக்கொண்டார்.

மூன்றாண்டுகள் கழிந்தன. திண்ணைப் பள்ளிக்கு எங்ஙனம் முற்றுப்புள்ளி வைப்பது என்பதிலேயே அவருடைய சிந்தனை சென்றது. ஒரு நாள் ஆசிரியர் அவரை ஒரு பாட்டை மனப்பாடம் செய்யச் சொன்னார். அவ்வளவு தான்! துரைசாமிக்குக் கோபம் வந்துவிட்டது! திண்ணை யில் பரப்பியிருந்த மணலைக் கைநிறைய அள்ளினார்; ஆசிரியர் கண்களில் வீசினார்; ஒரே ஓட்டமாகப் பள்ளியை விட்டு ஓடி மறைந்தார். அன்றோடு அவருடைய பள்ளி வாழ்க்கை ஒருவகையாக முடிவடைந்தது.

தோட்ட வாழ்க்கை

துரைசாமியால் விளையும் தொல்லைகளைக் கண்டு பொறுமையிழந்த தாய்மாமன், மறுநாளே அவனைத்தேடிப் பிடித்து, அவன் தந்தையாரிடம் ஒப்படைத்தார். பிறந்த ஊரான கலங்கலுக்குத் திரும்பிய துரைசாமி, இப்பொழுது தந்தையின் பிடியிலே அகப்பட்டுக் கொண்டான். மகனின் திருவிளையாடல்களைப் பற்றி நன்கு அறிந்திருந்த கோபால் சாமி, அவனைத் தனது தோட்ட வீட்டிலேயே சிறை வைத் தார். அந்தத் தோட்டமோ, ஊரைவிட்டுச் சிறிது ஒதுங்கி யிருந்தது. மண்வெட்டுவதும், மாடு மேய்ப்பதும், களை யெடுப்பதும், காவல் காப்பதும் துரைசாமியின் அன்றாட வேலைகள்! துரைசாமிக்குக் காவலாக ஒரு வேலையாள் நியமிக்கப்பட்டான். நான்கு சுவர்களுக்கு மத்தியில் கட்டுண்ட துரைசாமி, ஓய்வு நேரங்களில் நல்ல தமிழ் நூல்களைப் பயின்று வந்தான். வேளா வேளைக்கு ஊரிலிருந்து வரும் உணவை உண்பதும், வயல்வெளியில் உழைப்பதும், நிம்மதியாக உறங்குவதுமாக அவனுடைய வாழ்க்கை கழிந்தது.

வைக்கோல் வண்டி

இப்படியே ஓராண்டுக் காலம் ஓடியது. தீபாவளித் திருநாள் நெருங்கியது. அந்தத் திருநாளைத் தம் மகனோடு இருந்து கொண்டாடக் கருதிய கோபால்சாமி, துரை சாமியை அழைத்துவரத் தோட்டத்திற்கு ஆளனுப்பினார். அந்த ஆளுடன் ஊர்நோக்கி உற்சாகமாக வந்துகொண் டிருந்தான் துரைசாமி. அப்பொழுது சாலையில் ஒரு வைக் கோல் வண்டி சென்றுகொண்டிருந்தது. தாங்கமுடியாத பாரத்தால் மாடுகள் இரண்டும் தளர்நடை இடுவதைக் கண்டு அவனது மனம் பொறுக்கவில்லை. தோட்ட வாழ்க்

கையிலிருந்து தான் விடுதலை பெற்றதுபோல, சுமக்கமுடியாத பாரத்திலிருந்த அந்த வாயில்லாப் பிராணிகளும் விடுதலை பெறல்வேண்டும் என்று விரும்பினான்; உடனே சட்டைப்பையிலிருந்த தீப்பெட்டியை எடுத்தான்; ஒரு தீக்குச்சியைக் கொளுத்தி வைக்கோல்மீது வைத்தான். அவ்வளவுதான்! வைக்கோல் பற்றி எரிந்தது! மாடுகள் தப்பி ஓடின! செய்தி அறிந்த தந்தையார் பெரிதும் மனம் நொந்தார்; எண்ணிய எண்ணத்தை மாற்றிக்கொண்டு, பையனை மீண்டும் தோட்ட வீட்டுக்கே அனுப்பினார். பையனோ தீபாவளித் திருநாளைப் பாதையிலேயே கொண்டாடிய மகிழ்ச்சியோடு தோட்டத்திற்குத் திரும்பினான். அன்று முதல் ஒன்பது ஆண்டுக்காலம் தோட்டமே கதியெனக் கிடந்தான் துரைசாமி!

2. சுவையான நிகழ்ச்சிகள்

எருமைச் சவாரி

துரைசாமிக்கு வயது பதினெட்டு ஆகியது. தோட்ட வாழ்க்கை முடிந்தது. தந்தையாருடன் தொழிலில் ஈடுபட்டான்; என்றாலும், குறும்புத்தனம் சிறிதும் போக வில்லை. ஒரு நாள் அவ்வூர் மணியக்காரர் வெளியூர் செல்ல வேண்டி இருந்தது. அவர் திரும்பி வரும்வரை துரைசாமி அவ்வேலையைப் பார்த்து வருவான் என்று மேலதிகாரிக்கு எழுதிவிட்டுச் சென்றார். துரைசாமியும் கருத்தோடு அப் புதிய வேலையைக் கவனித்து வந்தான்.

ஒரு நாள் காலை தாசில்தார், ரெவினியூ இன்ஸ்பெக்டர், சேவகர் ஆகியோர் கலங்கல் கிராமத்தை நோக்கி வந்து கொண்டிருந்தனர். துரைசாமி தன் எருமையைத் தோட் டத்திலிருந்து வீட்டிற்குக் கொண்டுவந்து, பால் கறந்து, பிறகு வழக்கம் போல அதன்மீது ஏறி அமர்ந்து, தோட்டத் திற்குப் போய்க்கொண்டிருந்தான். இந்த அரிய காட்சி யைத் தாசில்தார் முதலியோர் வழியில் கண்டனர். அவர் கள் கலங்கல் கிராமத்தை அடைந்து புதிய மணியக்காரரை அழைத்துவர ஆளனுப்பினர். அவர்களுக்கு முன் வந்து நின்றான் துரைசாமி! 'எருமைச் சவாரி செய்யும் இவனா மணியக்காரர்?' என்று திகைத்தார் தாசில்தார். ஆனால்,

துரைசாமியோ எருமைச் சவாரியைப் பற்றிப் பெருமை யாகப் பேசத் தொடங்கினுன்.

வாக்குத் தவரு வாய்மை

துரைசாமி ஒருநாள் தன் நண்பன் ஒருவனைத் துரத்திச் சென்ருன்; துரத்திச் சென்ற வேகத்தில் அவனது வீட்டில் தொங்கிக்கொண்டிருந்த சங்கிலிச் சிக்கலில் அகப்பட்டுக் கொண்டான். கால்கள் சங்கிலித் தொடரில் பின்னிக் கொண்டன. விடுபட முடியாமல் விழித்தான்; தன்னை மீட்கும்படி நண்பனை வேண்டினுன். அவனே, "நீ இரண் டாண்டுகள் என்னைத் துன்புறுத்தக் கூடாது. நான் உன் னைத் துன்புறுத்தினுல் நீ பொறுத்துக் கொள்ளல் வேண்டும். இந்த இரண்டு விதிகளுக்கும் உடன்பட்டால் உதவி செய் வேன்," என்ருன். வேறு வழியில்லாமல் துரைசாமி அவற் றிற்கு ஒப்புக்கொண்டான். நண்பன் அவனை விடுவித் தான். ஒப்பந்தப்படி அந்த இரண்டாண்டுக் காலமும் துரைசாமி அவனிடம் அடக்கமாக நடந்துகொண்டான்.

தமிழ்நாட்டு ஷெல்லி

மேல்நாட்டுக் கவிஞரான ஷெல்லியைப் பற்றி ஒரு கதை சொல்வார்கள். காகிதக் கப்பல்கள் செய்து, அவற்றை ஆற்று நீரில் மிதக்கவிட்டு வேடிக்கை பார்ப்பதில் அவருக்கு அலாதி இன்பம்! ஒரு தடவை அவர், கப்பல் செய்வதற் காகத் தம் மனைவியிடம், "ஒரு துண்டுக் காகிதம் இருந்தால் கொடு" என்று கேட்டார். அதற்கு, "இல்லை" என்று பதில் வந்தது. உடனே அவர் அந்த அம்மாளின் கையி லிருந்த சிறு பையைப் பிடுங்கி, அதிலிருந்த நூறுபவுன் நோட்டு ஒன்றை எடுத்து, கப்பலாகச் செய்து, நீரில் மிதக்க விட்டாராம்!

அதைப் போலவே துரைசாமியின் வாழ்க்கையிலும் ஒரு நிகழ்ச்சி நடந்தது. ஒரு நாள் அவர், தம் நண்பர்கள் பட்டம் விடுவதைப் பார்த்தார். உடனே அவருக்குப் பட்டம் விடவேண்டும் என்ற ஆசை பிறந்தது. ஆனல், கையில் பட்டம் இல்லை. என்ன செய்வது? சற்று நேரம் சிந்தித்தார்; சுற்றுமுற்றும் பார்த்தார். ஒரு பையன் வெறும் பட்டம் மட்டும் கையில் வைத்துக்கொண்டிருந்தது தெரிந்தது. உடனே அதை அவனிடமிருந்து பறித்தார். இனிப் பறக்கவிட நூல் வேண்டுமே, என்ன செய்வது ? கண்கள் சுழன்றன. அருகில் ஒரு பட்டறை இருந்தது. அங்கே பொற்கொல்லர் ஒருவர் ஆபரணம் செய்வதற்காகத் தங்கத்தைக் கம்பியாக இழுத்துக்கொண்டிருப்பதைப் பார்த்தார். உடனே துரைசாமி அவரிடம் ஓடினர்; அந்தத் தங்கக் கம்பியைப் பிடுங்கிப் பட்டத்தைக் கட்டினர்; பறக்க விட்டார். பிறகு சிறிது நேரத்தில் இரண்டையும் உரியவர்களிடம் திருப்பிக் கொடுத்துவிட்டுப் பெருமிதத்தோடு வீடு திரும்பினர்.

வலி நிவாரணி

ஒரு நாள் துரைசாமி ஊரைச் சுற்றி வந்துகொண்டிருந்த பொழுது ஒரு காலிப்புட்டி அவர் கண்ணில் பட்டது. அது 'பார்க் டேவிஸ்' என்னும் அமெரிக்கக் கம்பெனியார் தயாரிக்கும் 'வலி நிவாரணி' (Pain Killer) என்னும் தைலப் புட்டியாகும். துரைசாமி அந்தப் புட்டியை எடுத்துப் பத்திரமாக வைத்திருந்தார். மறுநாள் அவ்வூருக்கு வந்த ரெவினியூ இன்ஸ்பெக்டர் மூலம் அம்மருந்து பற்றிய விவரங்களைக் கேட்டறிந்தார். அப்பொழுது அவ்வூரில் பலர் தலைவலி, முதுகுவலி முதலியவற்ருல் வருந்திக் கொண்டிருந்தனர். எனவே துரைசாமி, ரெவினியூ இன்ஸ்

பெக்டரின் உதவியுடன் அந்த அமெரிக்கக் கம்பெனிக்குக் கடிதம் எழுதி, 'வலி நிவாரணி' மருந்தை வரவழைத்தார்; சிறிது இலாபத்திற்கு விற்ருர். மேலும் கடிகாரங்கள், ஆர் மோனியப் பெட்டிகள் முதலியவற்றையும் வாங்கி விற்று வந்தார். இவற்றின் மூலம் அவருக்கு ரூ. 800 வரை வரு வாய் கிடைத்தது.

ஊதிய உயர்வு

தோட்டங்களில் வேலைபார்க்கும் ஏழைக் குடியானவர் களுக்கு மூன்றணுவும், பெண்களுக்கு இரண்டணுவும் நாட் கூலியாக நிலக்கிழார்கள் கொடுத்து வந்தனர். அது போதாது என்பது துரைசாமியின் கட்சி! எனவே, தம்மைச் சேர்ந்த இளைஞர்களை ஒரு குழுவாகத் திரட்டினர்; அந்தக் குழுவுக்குத் தலைமை தாங்கி நிலக்கிழார்களிடம் அழைத்துச் சென்று, குடியானவர் சார்பில் வாதாடினர். அவரது முயற்சி பயனளித்தது; குடியானவர்களின் ஊதியம் உயர்த் தப்பட்டது.

திருமணத்தில் குறும்பு

இருபது வயதாகியும் துரைசாமியை விட்டுக் குறும்புத் தனம் அகலவில்லை. அவருக்குத் திருமணம் செய்து அவரை அடக்க விரும்பினர் தந்தையார். செல்லம்மாள் என்னும் அழகிய நங்கையைத் துரைசாமிக்குப் பேசி முடித்தார். திரு மணத்திற்கு நாள் குறித்தாயிற்று; முகூர்த்த வேளையும் நெருங்கிற்று. மணமகள் கழுத்தில் தாலி கட்ட மணமகனை அழைத்தார்கள். ஆனல், மணமகனைக் காணேம்! ஆம்; திருமண நேரத்திலும் திருவிளையாடல் புரிந்தார் துரைசாமி! வந்திருந்தோர் அனைவரும் அவரைத் தேடினர். கடைசியாகத்

தோட்டவீட்டில் ஒளிந்துகொண்டிருந்த அவரைக் கண்டு பிடித்து, இழுத்து வந்து, மணமேடையில் உட்காரவைத்தனர். திருமணம் முடிந்தது. இங்ஙனம் தீராத விளையாட்டுப்பிள்ளையாகத் திரிந்த அதே துரைசாமிதான் இன்று ஓயாத உழைப்பாளியாக, உயர்ந்த தொழில் அதிபராக, உலகம் புகழும் விஞ்ஞானியாக விளங்குகிறார்!

3. தொழில் முயற்சி

மோட்டார் சைக்கிள்

தோட்டத்தை நோக்கி ஒரு நாள் துரைசாமி போய்க்கொண்டிருந்தபொழுது 'பட்...பட்...' டென்று ஒரு வகையான ஒலி கேட்டது. துரைசாமி அந்த ஒலி வரும் திசையை நோக்கினார். ஆங்கிலேயர் ஒருவர் மோட்டார் சைக்கிளில் சாலைவழியே வந்துகொண்டிருப்பது தெரிந்தது. 'லங்காஷயர்' என்னும் பெயருள்ள அந்த ஆங்கிலேயர் ஓர் அரசாங்க அலுவலர்; நிலங்களை அளந்து ஒழுங்கு படுத்தும் துறையில் ஓர் அதிகாரி. அவர் சில இடங்களைச் சுற்றிப் பார்த்துவிட்டு வந்துகொண்டிருந்தார்.

துரைசாமிக்கு அருகில் வந்ததும் அந்த மோட்டார் சைக்கிள் பழுதாகிவிட்டது. உடனே லங்காஷயர் கீழே இறங்கினார்; இஞ்சினைப் பழுது பார்க்கத் தொடங்கினார். அப்பொழுது அவருக்குச் சிறிது மண்ணெண்ணெயும் துணியும் தேவைப்பட்டன. துரைசாமியிடம், 'அவை இரண்டும் கொண்டு வந்து தரமுடியுமா?' என்று கேட்டார். எல்லாவற்றையும் கூர்மையாகக் கவனித்துக்கொண்டிருந்த துரைசாமி, மகிழ்ச்சியோடு வீட்டிற்கு ஓடிப்போய், அவற்றை எடுத்துக் கொண்டுவந்து கொடுத்தார். லங்காஷயர் நன்றியறிதலோடு பெற்றுக்கொண்டார்.

சிறிது நேரத்தில் இயந்திரம் பழுது பார்க்கப்பட்டது. துரைசாமிக்கு வணக்கம் செலுத்திவிட்டுச் சென்றார் அந்த ஆங்கிலேயர். இந்த நிகழ்ச்சி துரைசாமியின் மனத்தில் ஆழமாகப் பதிந்து விட்டது. அவர் பிற்காலத்தில் பெரும் பொறியியல் வல்லுநராக வருவதற்கு இந்தச் சிறு நிகழ்ச்சிதான் வித்தூன்றியது என்றால் மிகையாகாது.

கோவைக்கு வருதல்

இருபது வயதுவரை கலங்கலையும், இலட்சுமிநாயக் கன்பாளையத்தையும் தவிர வேறு இடங்களுக்குச் சென்று அறியாதவர் துரைசாமி. வயல் வெளிகளையும், தோட்டம் துரவுகளையுமே பார்த்துப் பார்த்து அலுத்துப்போன அவருள்ளம் மாறுதலை விரும்பியது. மோட்டார் சைக் கிளின் வருகை அவரது உற்சாகத்தைத் தூண்டிவிட்டது. உந்துவண்டி, புகைவண்டி முதலிய புதுமைகளைப் பற்றி அவர் கேள்விப்பட்டதே இல்லை. ஆகவே, எப்படியும் அருகிலுள்ள கோவைக்குச் செல்வது என்று முடிவு கட்டினார்.

ஒரு நாள் யாருக்கும் சொல்லாமல் கோவைக்குப் புறப் பட்டு விட்டார்; ஏறத்தாழப் பதினாறு கல் தொலைவையும் கால்நடையாகவே கடந்தார்; கோவை நகரில் கால் வைத் தார். அங்கு அவர் கண்ட முதல் காட்சி புகைவண்டி! ஆம்; அதன் தோற்றமும், வேகமும், ஒலியும் அவருக்கு வியப்பும் திகைப்பும் ஊட்டின! வானளாவிய கட்டடங் களும், மின்சார விளக்குகளும் அவரது உள்ளத்தைக் கொள்ளை கொண்டன. கிணற்றுத் தவளையாக இருந்த துரைசாமியின் உள்ளத்தில் அறிவுக் கிளர்ச்சி ஏற்பட்டது. குறும்புத்தனம் செய்வதையே கொள்கையாகக்கொண் டிருந்த அவரது மனம் புதிய திசையிலே திரும்பத் தொடங்

கியது. சிந்தனையில் ஆழ்ந்தவாறே நடந்துகொண்டிருந்தார்.

உணவு விடுதி

நல்ல உச்சி வேளை! பசி, வயிற்றைக் கிள்ளியது! கையிலோ காசில்லை. சுற்றுமுற்றும் பார்த்தார். அருகிலே ஓர் உணவு விடுதி இருந்தது. துணிவோடு உள்ளே நுழைந்தார்; மாதம் மூன்று ரூபாய் ஊதியத்திற்கு ஒப்புக்கொண்டு, அங்கேயே வேலைக்குச் சேர்ந்தார். நல்ல சாப்பாடு! ஓய்வு நேரத்தில் ஊரைச் சுற்றுவது! இடையிடையே சில்லறை வியாபாரங்கள்! போனஸ்! இப்படியாக இவருடைய வாழ்க்கை மூன்றாண்டுக் காலம் அங்குக் கழிந்தது. அந்தக் காலத்திற்குள் அவர் ரூ. 400 வரை சேமித்து விட்டார். அவரது உள்ளம் முழுவதும் லங்காஷயரின் மோட்டார் சைக்கிளிலேயே நிலைத்திருந்தது. லங்காஷயர் அப்பொழுது செட்டில்மெண்ட் அதிகாரியாகப் பணியாற்றி வந்தார். அவரது இருப்பிடத்தைத் துரைசாமி விசாரித்து வைத்திருந்தார். ஒரு நாள் காலை அவர் லங்காஷயரின் வீட்டிற்குச் சென்றார்; தமது சேமிப்பான நானூறு ரூபாயையும் அவர் முன்னால் வைத்தார்; மோட்டார் சைக்கிளை விலைக்குத் தரும்படி பணிவாகக் கேட்டார். துரைசாமியின் ஆர்வத்தைக் கண்ட அந்த ஆங்கிலேயர் மறுபேச்சின்றி விலைக்குக் கொடுத்து விட்டார். மகிழ்ச்சியோடு மோட்டார் சைக்கிளைப் பெற்றுக்கொண்ட துரைசாமி, அதனைப் பாகம் பாகமாகப் பிரித்தார்; பூட்டினார்; ஓட்டினார்; புத்துணர்ச்சி பெற்றார். அதுவரை போக்கிரித்தனத்திலேயே ஈடுபட்டிருந்த அவரது உள்ளம் இப்பொழுது பொறியியல் துறையில் ஈடுபடத் தொடங்கியது.

பஞ்சு வாணிகம்

சிறு மெக்கானிக்காக வளர்ந்த துரைசாமிக்குத் தனியாக வாணிகம் செய்தல் வேண்டும் என்ற ஆசை அரும்பியது. உடனே தம் நண்பர் சிலரிடம் சில நூறு ரூபாய்களைக் கடனாகப் பெற்றுக்கொண்டு கோவையிலேயே பஞ்சு வாணிகம் நடத்தலானார். அது ஓர் ஆபத்தான வியாபாரம்! அத்தொழிலால் வாழ்ந்தவர்களைவிட வீழ்ந்தவர்கள் எண்ணிக்கை மிகுதி! அதற்கு நம் துரைசாமி மட்டும் விதிவிலக்காக முடியுமா? வாணிகத்தில் புகுந்த சில திங்களிலேயே அவரது சிறிய முதல், கடலில் கரைத்த பெருங்காயமாயிற்று! அதற்காக அவர் தளரவில்லை. அரைக்க அரைக்கச் சந்தனம் மணப்பதுபோல், துன்பங்கள் பெருகப் பெருக அவரது உள்ளம் உரம் பெற்றது!

ஆலையில் வேலை

உழைப்பையே சொத்தாகக் கருதிய துரைசாமி, கோவைக்கு அருகில் உள்ள சிங்காநல்லூரை அடைந்தார். அங்குப் பருத்தியிலிருந்து விதையைப் பிரித்தெடுக்கும் ஆலைகள் நிறைய இருந்தன. அவற்றில் ஒன்றில் உணவோடு மாதம் பன்னிரண்டு ரூபாய் ஊதியத்திற்கு ஒப்புக்கொண்டு வேலைக்குச் சேர்ந்தார். "அந்த ஆலை முதலாளியிடம் யாருமே வேலை பார்க்கமுடியாது" என்று நண்பர்கள் கூறினர். ஆனால், துரைசாமியோ, "நான் அவரிடம்தான் வேலை பார்ப்பேன்" என்று கூறிச் சேர்ந்தார். அந்த முதலாளியின் நிருவாகத் திறமை துரைசாமியைப் பெரிதும் கவர்ந்தது. துரைசாமியின் தூயபண்பும், கண்டிப்பான நடத்தையும் முதலாளிக்குப் பெருமகிழ்ச்சியூட்டின. எனவே, அவர் துரைசாமியைப் பஞ்சு நிறுக்கும் பகுதியின் தலைவராக அமர்த்தினார். அப்பொழுது துரைசாமி

அவரிடம், "ஐயா! நான் தங்களிடம் சரியாக இரண்டாண்டு களே வேலை பார்ப்பேன்" என்று கூறினர்.

நேர்மை தவரு நெஞ்சம்

வேலையில் துரைசாமி திறம்பட நடந்துகொண்டார். அந்த ஆலையில் அவர் தந்தையார் பருத்தி கொண்டு வந்து அடித்துச் செல்வது வழக்கம். "எவருடைய பருத்தி யாயினும் நிறுத்தலில் பாரத்துக்கு ஐந்து இராத்தல் தள்ளி அடிக்கவேண்டும்" என்பது முதலாளியின் கட்டளை. ஒரு நாள் தந்தையார், துரைசாமியைப் பார்த்து, "எனக்கும் அதே விதிதானு?" என்று கேட்டார். அதற்குத் துரைசாமி, "ஆம்; இனி உங்கட்குப் பாரத்துக்குப் பத்து இராத்தல்" என்ருர். உடனே தந்தையார் முதலாளியிடம் முறையிட் டார். அவரோ, "துரைசாமி செய்தது சரிதான்" என்று கூறினர். தந்தையாரோ மகனது நேர்மை தவரு நிலையைக் கண்டு பேருவகை அடைந்தார்.

சொல் தவருச் செம்மல்

துரைசாமி தம் முதலாளியிடம் சொன்ன இரண் டாண்டுக் காலம் முடிந்தது. ஒரு நாள் இரவு முதலாளி தம் நண்பர் ஒருவருடன் சாலையில் நின்று பேசிக்கொண்டிருந் தார். அப்பொழுது துரைசாமி அவரிடம் சென்று, ஆலையின் சாவியைக் கொடுத்து, "ஐயா! இன்றுடன் இரண்டாண்டுக் காலம் முடிவடைகிறது. இனி உங்கள் ஆலையில் வேலை பாரேன்; விடுதலை தாருங்கள்" என்ருர். முதலாளியோ திகைத்து நின்ருர்! துரைசாமியோ போய்க் கொண்டிருந்தார்!

திருப்பூரில் சொந்த ஆலை

சிங்காநல்லூர் ஆலையில் பெற்ற தொழில் அனுபவத்தை யும், அந்த ஆலை முதலாளியிடம் கண்ட நிருவாகத் திறமை யையும் துணையாகக் கொண்டு, திருப்பூரில் சொந்தமாக ஓர் ஆலையை நிறுவ எண்ணினார் துரைசாமி. ஆலை ஏற்படுத்த வேண்டுமானால் பணமும் இடமும் தேவை. வேண்டிய தொகையான ரூ. 17,000ஐ நண்பர்களிடமிருந்து கடனாகப் பெற்றுக்கொண்டு, இடம் தேடத் தொடங்கினார். அப் பொழுது கிறித்தவ பாதிரிமார்க்கு உரியதான ஓரிடம் அவர் கண்ணிற்பட்டது. அக்காலத்தில்பாதிரிகட்குச் சொந்தமான இடத்தை வாங்குவதும், குடியேறுவதும் பாவமாகக் கருதப் பட்டன. ஆனால், துரைசாமியோ அந்த நம்பிக்கை களுக்கெல்லாம் அப்பாற்பட்டவர்; அஞ்சாது நிலத்தை விலைக்கு வாங்கினார்; நகராண்மைக் கழகத்தின் இசைவு பெறாமலே ஆலையைக் கட்டினார். அது கண்ட அதிகாரிகள் அவர்மீது வழக்குத் தொடர்ந்தனர். கட்டட வேலை முற் றுப் பெறும்வரை காலம் கடத்திய துரைசாமி, இறுதிக் கட் டத்தில் நகராண்மைக் கழகத் தலைவரை நேரிற் சந்தித்து இசைவு பெற்றார். ஆலையும் வேலை செய்யத் தொடங்கியது. எண்ணியதை எண்ணியாங்கு முடிக்கும்இயல்புடைய துரை சாமியை நோக்கித் திருமகளின் கடைக்கண் பார்வை திரும் பியது.

அப்பொழுது முதலாவது உலகப் போர் மும்முரமாக நடந்துகொண்டிருந்தது. அதனால் பஞ்சாலைத் தொழில் செழித்து வளரத் தொடங்கியது. போர் முடிவில் (1919) துரைசாமிக்குக் கிடைத்த இலாபம் ஒன்றரை இலட்சம் ரூபாய். அன்று முதல் கோவை மாவட்டத்தின் பிரமுகர்கள் வரிசையில் துரைசாமியின் பெயரும் இடம் பெறலாயிற்று. அன்று தொடங்கி, அவர் ஆண்டுதோறும் நடைபெறும்

காங்கிரசு மாநாட்டுக்குப் பார்வையாளராகச் சென்று வரத் தலைப்பட்டார்.

பஞ்சாய்ப் பறந்தது

வறுமையையே கண்டறிந்த துரைசாமிக்கு ஒன்றரை இலட்சம் ரூபாயை வைத்துக்கொண்டு என்ன செய்வதென்று தெரியவில்லை. உடனே பம்பாய்க்குச் சென்றார். பெரும் அளவில் பஞ்சு வாணிகம் நடத்திப் பெரும் பொருள் திரட்டக் கருதினார். பம்பாயில் கால் வைத்த ஒன்றரை ஆண்டுக்காலத்திற்குள் அவரது ஒன்றரை இலட்சம் ரூபாயும் பஞ்சாய்ப் பறந்தது. இரண்டாம் முறையாகப் பஞ்சு வாணிகம் அவரை வஞ்சித்து விட்டது. முதலாளியாகச் சென்ற துரைசாமி மீண்டும் தொழிலாளியாகக் கோவைக்குத் திரும்பினார். திருப்பூர் ஆலையும் பஞ்சு வாணிகத்தால் பறிபோயிற்று.

4. உழைப்பும் உயர்வும்

மோட்டார் ஓட்டி

வெறும் கையோடு பம்பாயிலிருந்து வீடு திரும்பிய துரைசாமிக்குப் பணம் கொடுத்துதவ யாரும் முன்வரவில்லை. ஆகவே, சொந்தமாகத் தொழில் நடத்தும் ஆசையைக் கைவிட்டார்; யாரிடமாவது வேலைக்கு அமர்வது என்ற முடிவுக்கு வந்தார். அக்காலத்தில் கோவையில் சர் இராபர்ட் ஸ்டேன்ஸ் என்னும் ஆங்கிலேயர் மோட்டார் வண்டி வியாபாரம் செய்துவந்தார். அவர் நம் துரைசாமியைப் பற்றி நன்கறிந்தவர். ஒரு நாள் துரைசாமி அவரிடம் சென்று, தம்மை இயந்திரம் பழுது பார்க்கும் வேலையில் அமர்த்திக் கொள்ளுமாறு பணிவோடு வேண்டினர். அதற்கு ஸ்டேன்ஸ், "துரைசாமி! இங்கே தற்சமயம்வேலை காலி இல்லை. ஆனல், உனக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். உனது திறமை வீணுகக் கூடாது. நீ பஞ்சு வியாபாரத்தை விட்டு விட்டு வேறு தொழில் செய்யலாமே! உதாரணமாக, ஒரு மோட்டார் பஸ் வாங்கி வாடகைக்கு ஓட்டலாம். வேண்டுமானல் நாலாயிரம் ரூபாய் நான் கடன் தருகிறேன். மேலும் நாலாயிரம் ரூபாய் நீ தயார் செய்து கொள்" என்ருர்.

ஆங்கிலேயரின் அறிவுரை துரைசாமிக்குப் பொருத்தமாகப்பட்டது. உடனே அவரிடம் ரூபா 4000 கடன் வாங்

கினார். தம் நண்பர்கள் மூலம் மேலும் ரூபா 4000 சேகரித்தார். ஒரு பேருந்தை(பஸ்) விலைக்கு வாங்கினார். அப்பொழுது கோவையில் சிறந்து விளங்கிய **திவான்பகதூர் சோமசுந்தரம் செட்டியார்** என்பவர் துரைசாமியை அழைத்து, "தம்பி! எத்தொழிலாய் இருப்பினும் பாதியை முதலுக்குப் போட்டு விடு. எஞ்சிய பாதியை அந்த முதலின் பாதுகாப்புக்காகக் கையில் வைத்துக் கொள்" என்று அறிவுரை கூறினார். துரைசாமி அந்த அறிவுரைப்படி நடக்கலானார்.

1920ஆம் ஆண்டில் ஒரு நாள் துரைசாமியின் பேருந்து பொள்ளாச்சியிலிருந்து பழனிக்கு முதன் முதலாக ஓடத் தொடங்கியது. அந்தப் பேருந்தின் முதலாளியும் துரைசாமிதான்! அதை ஓட்டும் தொழிலாளியும் துரைசாமிதான்! காலப் போக்கில் அவருக்கு நல்ல வருவாய் கிடைக்கலாயிற்று. பழைய பஞ்சு வாணிக வீழ்ச்சி அவருக்கு நல்ல பாடமாக அமைந்திருந்தது. ஆகவே, சிக்கனமாகவும், எச்சரிக்கையாகவும் வாழலானார். செல்வம் சேரச் சேரக் கடன்களை அடைத்தார்; புதிய புதிய வண்டிகளை வாங்கினார்; பொறுப்பு வாய்ந்த ஆட்களை வேலைக்குச் சேர்த்தார். பொருள் குவிந்தது. மீண்டும் செல்வரானார்!

மோட்டார் மன்னர்

இந்தியாவின் தலைசிறந்த 'மோட்டார் மன்ன'ராக விளங்கும் துரைசாமி, சாலைப் போக்குவரத்துப் பிரச்சினைகளைப் பற்றிய சகல நுணுக்கங்களையும் நன்கு அறிந்தவர். சாதாரண தொழிலாளியாக இருந்து, திறமைபெற்ற பொறியியல் வல்லுநராக அவர் வளர்ந்திருப்பதால், இத்துறையில் அவருக்குத் தெரியாத செய்தி இல்லை. இன்றைய தினம் ஏறக்குறையக் கோவை மாவட்டத்தைச் சேர்ந்த எல்லாச் சாலைகளிலும் அவரது பேருந்து வண்டிகள் ஓடிக்கொண்

டிருப்பதோடு, நீலகிரி, மதுரை, திருவாங்கூர்-கொச்சி முதலிய பகுதிகளிலும் அவரது வண்டிகள் சாரி சாரியாகச் செல்லக் காணலாம்.

அவரது நேரடி நிருவாகத்திலுள்ள 'யுனைட்டெட் மோட்டார் சர்வீஸ்' (U. M. S.) என்னும் ஐக்கிய நிருவனத்தில் மட்டும் இருநூறுக்கும் மேற்பட்ட பேருந்து வண்டிகள் இருக்கின்றன. அவைகள் ஓடும் சாலைகளின் நீளம் 15,000 மைல்கள். அவற்றின் மூலம் நாள் ஒன்றுக்கு 10,000 மக்கள் பயணம் செய்கின்றனர். இந்த நிறுவனத்தில் பணியாற்றும் தொழிலாளிகளின் எண்ணிக்கை ஆயிரத்துக்கும் அதிகம். இந்தத் தொழிலின் நிருவாக அமைப்பு முழுவதையும் நவீன வசதிகளோடு, அமெரிக்க முறையில், அமைத்திருக்கிறார் துரைசாமி. இலாகா வாரியாகப் பிரித்து அவற்றை வெற்றிகரமாக இயக்குவதில் அவருக்கு இணை யாருமே இலர்.

யு. எம். எஸ். தோற்றம்

'யுனைட்டெட் மோட்டார் சர்வீஸ்' (U. M. S.) என்று சொல்லப்படும் இந்த ஐக்கிய நிறுவனம் தோன்றியதே ஒரு கதை. 1933இல் மோட்டார்த் தொழிலில் பெரும் போட்டி ஏற்பட்டது. சிறு சிறு பஸ் சொந்தக்காரர்கள் எல்லாம் வீழ்ச்சியுற்றனர். சிறுகச் சிறுக மோட்டார்த் தொழில் நசித்து வந்தது. இந்த நிலைமையைத் துரைசாமி விரும்பவில்லை. எனவே, பஸ் சொந்தக்காரர்கள் பலரையும் ஒரு மாநாட்டுக்கு அழைத்தார். எல்லாக் கம்பெனிகளையும் ஒன்றாக இணைத்தார்; யு. எம். எஸ். என்னும் ஐக்கிய நிறுவனத்தை ஏற்படுத்தினார். முதலீட்டு விகிதப்படி இலாபத்தைப் பிரித்துக் கொடுக்கத் தீர்மானிக்கப் பட்டது. இங்ஙனம் தேவையற்ற போட்டியை ஒழித்த

தோடு, தெளிவான முறையில், கூட்டுறவு அமைப்பை மோட்டார்த் தொழிலில் ஏற்படுத்தியதனுல் நாட்டுக்கு ஒரு நல்ல வழி காட்டினுர் துரைசாமி.

இந்தப் போக்குவரத்து நிறுவனம் மக்களுக்குச் செய்து வரும் நன்மைகள் கணக்கிலடங்கா. பேருந்தில் மக்கள் உட்காருவதற்குரிய இடவசதி, பணியாட்கள் பிரயாணிகளிடம் நடந்து கொள்ளும் அன்பு முறை, தங்குமிடங்களில் பிரயாணிகளுக்குச் செய்யப்பட்டுள்ள வசதிகள்—இத்தனையும் துரைசாமி செய்த முயற்சிகளின் விளைவேயாகும். 'சாலை-புகைவண்டிப் போக்குவரத்து' என்னும் நூலில், அதன் ஆசிரியர் திரு. பத்திரிராவ் என்பவர், 'யு. எம். எஸ். நிறுவனம் ஆர்வமிக்க ஓர் அறிஞரைத் தன் நிருவாகத் தலைவராகப் பெற்றிருக்கிறது. சமுதாய, பொருளாதார நலன்களுக்குப் பயன்படக் கூடிய முறையில், நல்ல வசதிகளைச் செய்துகொடுத்துள்ள அந்த நிறுவனம் நம் பாராட்டுக்குரியது " என்று குறிப்பிட்டிருக்கிறுர்.

மாறு வேடம்

பேருந்தில் வேலை பார்க்கும் பணியாளர்கள் பிரயாணிகளிடம் அன்பாகவும், மரியாதையாகவும் நடந்து கொள்ள வேண்டும் என்பது துரைசாமி அவர்களின் கண்டிப்பான கட்டளையாகும். பிரயாணிகள் தவறுதலாக நடந்துகொண்டால்கூடப் பணியாட்கள் பொறுமையாக நடந்துகொள்ள வேண்டும். மீறி நடப்பவர்கள் யாராலும் வேலையை விட்டு விலக்கப்படுவர். பணியாட்களுடைய நடத்தையைச் சோதிப்பதற்காகத் துரைசாமி மாறுவேடத்தில் பேருந்துகளில் பிரயாணம் செய்திருக்கிறுர். ஒரு முறை அவர் ஒரு மனிதரைவிட்டு, பஸ்-கண்டக்டரின் கன்னத்தில் அறையச் செய்தார். ஆனுல், கண்டக்டரோ விதிமுறைகளுக்கு ஏற்

பப் பொறுமையாக நடந்துகொண்டார். இதைக் கண்ட துரைசாமி அவரைப் பாராட்டி, ஊதிய உயர்வு கொடுத்துச் சிறப்பித்தார். இங்ஙனம் திறமையைப் பாராட்டுவதிலும், சட்டதிட்டங்களை அமுல் நடத்துவதிலும் துரைசாமி கைதேர்ந்தவர் ஆவார்.

காலம் போற்றல்

தொழில் துறையில் துரைசாமி மிக்க ஆர்வமுடையவர். ஹென்றி போர்டு என்னும் அமெரிக்கரைப் போலத் துரைசாமிக்கும் தமது நிறுவனத்தில் வேலை பார்க்கும் ஒவ்வொரு தொழிலாளியைப் பற்றியும் நன்கு தெரியும். ஒரு நாள் அவருடைய அலுவலகத்தில் வேலை பார்க்கும் தொழிலாளிகளில் 64 பேர் விடுமுறை எடுத்ததனால் வேலைக்கு வரவில்லை. 43 பேர் சொல்லிக் கொள்ளாமலே வராமல் இருந்து விட்டனர். 223 பேர் நேரம் கழித்து வந்தனர். இதைக் கண்டதும் அவர் அதிர்ச்சியடைந்தார். ஒழுங்கீனங்களை அவர் எப்பொழுதுமே வெறுப்பவர்; காலத்தைப் பொன்னே போல் போற்றுபவர். அதனால், வேலைக்காரர்களின் வருகைப் பட்டியலை நாள்தோறும் குறித்த நேரத்தில் தம் பார்வைக்குக் கொண்டுவரச் செய்தார்; தவறி நடப்பவர்களுக்குத் தண்டனைகள் வழங்கினார். தொழிலாளிகளுக்குப் பொறுப்புணர்ச்சி ஏற்பட்டது. ஆறு மாதங்களுக்குப் பிறகு கணக்கெடுத்தார். அன்று விடுமுறை எடுத்தோர் 12 பேர்; அறிவிக்காமல் நின்றோர் 6 பேர் ; நேரங்கழித்து வந்தோர் 2 பேர். பிறகு மீண்டும் ஒரு முறை ஆறு மாதங்களுக்குப் பிறகு கணக்கெடுத்தார். அன்று விடுமுறை எடுத்தோர் 2 பேர்; அறிவிக்காமலே நின்றோர் ஒருவர்; நேரம் கழித்து வந்தோர் யாருமே இலர். அதன் பேரில் அவர் ஒரு புதுக்கட்டளை ஒன்றைப் பிறப்பிக்க வேண்டியதாயிற்று.

'உடல் நலம் இல்லாத போது எவரேனும் வேலை செய்வ தாகத் தெரிந்தால் பத்து ரூபாய் தண்டனை விதிக்கப்படும்' என்பதே அந்தப் புதுக்கட்டளையாகும். இங்ஙனம் தொழிலாளிகளிடம் அன்பாகவும், அதே நேரத்தில் கண்டிப்பாகவும் துரைசாமி நடந்துகொண்டதனால்தான் அவரது நிருவாகம் ஒரே சீராகவும், திறமையாகவும் அமைந்திருக்கிறது.

வழிகாட்டி

ஒரு நாள் இரவு துரைசாமி தம் செயலாளர்கள் எங்ஙனம் (Files) பைல்களையும், காகிதங்களையும் அடுக்கி வைத்திருக்கிறார்கள் என்பதைப் பார்வையிட்டு வந்தார் அப்படி வரும்போது ஓரிடத்தில் மேசையின்மேல் காகிதங்களெல்லாம் அலங்கோலமாகக் கிடந்தன. உடனே அவற்றை எல்லாம் ஒழுங்காக அடுக்கிக் கட்டி வைத்தார். பிறகு ஒரு துண்டுச் சீட்டில் கீழ்க்கண்டவாறு எழுதி மேசையின்மேல் வைத்தார்: 'நீங்கள் உங்கள் மேசைகளைச் சுத்தமாகவும், ஒழுங்காகவும் வைத்துக்கொள்ளப் போகிறீர்களா அல்லது உங்கள் முதலாளியைத் தினமும் இரவில் இதுமாதிரி வந்து தூய்மை செய்யச் சொல்கிறீர்களா?' மறு நாள் வேலைக்கு வந்த செயலாளர்கள் அந்தத் துண்டுச் சீட்டைக் கண்டதும் துணுக்குற்றனர்; தவறுதலுக்கு வருந்தினர்; அன்று முதல் பொறுப்பாக நடந்துகொண்டனர்.

நிருவாகத் திறமை

துரைசாமியிடம் உலகத்தார் கற்றுக் கொள்ள வேண்டிய உயர்ந்த பண்புகளில் நிருவாகத் திறமையே முதன்மையானது. அவரை யாரும் எளிதாகக் காணமுடியும். அவரது அலுவலகம் உள்ளே 'கோபால்பாக்' கட்டடத்திற்குள்

நுழைந்த உடனே 'விசாரணை அறை'யைக் காணலாம். அங்கே ஒரு பெண்மணி மரியாதையோடு நாம் வந்த காரணத்தை விசாரித்துத் துரைசாமிக்குத் தொலைபேசி மூலம் அறிவிப்பார். பிறகு அவரது பதில் அறிந்து நம்மை உள்ளே அழைத்துச் செல்வார். நம்மை வைத்துக்கொண்டே துரைசாமி பல செயல்களுக்கான கட்டளைகளை இட்டுக்கொண்டிருப்பார். சாதாரணமாக அவரது அலுவல் நேரம் காலை 9 மணி முதல் இரவு 1 மணி வரை யாகும். சில சமயங்களில் அவர் காலை 6 மணி வரை கூடக் கண் விழித்திருந்து பணியாற்றுவ துண்டு.

அவரது அலுவலகம், வீடு, தொழிற்சாலை, மின்சாரக் கம்பெனி, செயலாளர்களின் அறைகள், விசாரணை அறை, இன்னும் முக்கியமான இடங்களெல்லாம் தொலைபேசியின் மூலம் இணைக்கப்பட்டுள்ளன. ஆகவே, அவர் இருந்த இடத்திலிருந்தே எல்லாச் செய்திகளையும் உடனுக்குடன் அறிந்து கொள்கிறார்; அதன் மூலம் கால விரயத்தைத் தடுக்கிறார். மேலும் பஸ் பிரயாணிகள் தங்கும் இடத்திலும் தொலைபேசி இணைப்பு ஏற்படுத்தி இருக்கிறார். அதனால், அங்கே பிரயாணிகள் தமது நிறுவனத்தைப் பற்றிப் பேசும் குறைகளை எல்லாம் அவர் அறிந்துகொள்கிறார். பிறகு அந்தக் குறைபாடுகளை விரைந்து நீக்குகிறார்.

அவரது நிருவாகத்துக்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டு அவர் பைல்களை அடுக்கிக் கையாளும் முறையே யாகும். ஏறத்தாழ ஓர் இலட்சம் பைல்கள் அவருடைய பார்வையில் இருக்கின்றன. அந்தப் பைல்களில் சிலவற்றின் பெயர்களாவன: 'நட்பு'; 'போலீஸ்'; 'பாராட்டு'; 'மரியாதை'; 'முகஸ்துதி'; 'உண்மை'; 'எருமைகளை எங்ஙனம் வழிக்குக் கொணர்வது?' (How to set the buffaloes in line); 'ஒருவரை எப்படி வேலை வாங்குவது?' (How to

extract work from one); 'என்னுடைய தவறுகள்' (My blunders); 'எனது முகமத் பின் துக்ளக்' (My mohammad Bin tughlak). இவற்றில் ஏராளமான கடிதங்களும் எழுத்துச் சான்றுகளும், உண்மைகளும் அடங்கியிருக்கின்றன.

இங்ஙனம் அயராத உழைப்பாலும், நிருவாகத் திறமையாலும் உயர்ந்தவர்தாம் ஜி. துரைசாமி நாயுடு! அவர் கண்டிப்பான உள்ளமும், கட்டுப்பாடான நெறிமுறைகளும், கலங்காத மனவுறுதியும் கொண்டிருப்பதால்தான் வாழ்வின் எல்லாத் துறைகளிலும் வாகைசூட முடிந்தது; உலகத்தார் எல்லாம், 'ஜி. டி. நாயுடு' என்று அன்போடு அழைக்குமாறு, அவர்களது உள்ளங்களை எல்லாம் தம்வயமாக்க முடிந்தது!

5. அயல் நாட்டு யாத்திரை–I

அன்பு அழைப்பு

1929இல் குன்ஸ் (Kuhns) என்னும் ஜெர்மானிய வணிகர் ஒருவரும், அவரது மனைவியாரும் கோவைக்கு வந்தார்கள். அவர்கள் ஹனேவர் நகரைச் சேர்ந்தவர்கள்; இரப்பர்ச் சாமான்களை வியாபாரம் செய்பவர்கள். அவர்கள் இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்துகொண்டு வருகையில் தான் கோவையை அடைந்தார்கள். அப்பொழுது குன்சின் மனைவிக்குக் காய்ச்சல் நோய் கண்டது. வழித்தங்கல் மனையில் போதுமான வசதியில்லாததால் அவர்கள், 'யு. எம். எஸ். நிறுவனத்தின் தங்கு அறை'யில் (waiting room) தங்கியிருந்தார்கள். ஜி. டி. நாயுடு அதை அறிந்ததும், அவர்கட்கு வேண்டிய எல்லாவிதமான வசதிகளும் செய்துகொடுத்தார்; மருத்துவத்திற்கும் ஏற்பாடு செய்தார். நோய் தீர்ந்தது. அவர்கள் கோவையை விட்டுப் புறப்படு முன், நாயுடு அவர்களிடம் வந்து, ஜெர்மனிக்கு வரவேண்டும் என்று அன்போடு அழைத்தார்கள்; அதன் பிறகு ஆண்டு தோறும் அவருக்குக் 'கிறிஸ்துமஸ்' வாழ்த்து அனுப்பி வந்தார்கள்; அத்துடன் ஜெர்மனிக்கு ஒரு முறையாவது வருமாறு அடிக்கடி நினைவுப்படுத்திக்கொண்டிருந்தார்கள். அந்த அன்பு அழைப்பை ஏற்றுக்கொண்டு ஜி. டி. நாயுடு 1932ஆம் ஆண்டுக் கோடையில் ஐரோப்பாவுக்குப் பயணமானார்.

உயிர் தப்பினார்

முதலில் நாயுடு அவர்கள் இந்தியாவிலிருந்து விமானத்தில் இலங்கைக்குச் சென்றார். அவரது கடற்பயணம் கொழும்புத் துறைமுகத்திலிருந்து ஆரம்பமாயிற்று. 'ஜார்ஜஸ் பிலிப்பார்' என்னும் எழில் மிக்க பிரெஞ்சுக் கப்பலில் புறப்பட்டார். அவரோடு நண்பர் இருவரும் பயணமானார்கள். நான்கு நாட்கள் கடல் அலைகளை எதிர்த்துக் கப்பல் சென்றது. ஐந்தாம் நாட் காலை நடுக்கடலில் கப்பல் திடீரென்று தீப்பற்றிக்கொண்டது. தீயை அணைக்கவோ, கப்பலைக் காக்கவோ முடியாது என்ற நிலை ஏற்பட்டதும், பிரயாணிகள் 'உயிர் காக்கும் படகுகள்' (Life boat) மூலம் தப்பினர். அப்படித் தப்பிச் சென்றவர்களில் நாயுடுவின் நண்பர் இருவரும் இருந்தனர். ஆனால், நாயுடுவோ அவர்கள் இருவரையும் காணாமல் கப்பல்தளம் முழுவதும் தேடினார்; ஓடினார்; இனிமேல் வேறு வழியில்லை என அறிந்த பிறகு வேறொரு படகின் மூலம் உயிர் தப்பினார். அப்பொழுது அவர் கண்ட கோரக் காட்சிகளும், ஒருவர் உயிரை மற்றவர் காப்பாற்ற எடுத்துக்கொண்ட முயற்சிகளும் அவர் உள்ளத்தைக் கவர்ந்தன. அதைப் பற்றித் தம் நண்பர் ஒருவருக்கு அவர் எழுதுகிறார்: "அந்தச் சில மணிநேர நிகழ்ச்சியில் நான் கண்டனவும் கற்றனவும் ஏராளம்! அப்பொழுது நான் சாதிவெறியைக் காணவில்லை; சகோதர மனப்பான்மையைக் கண்டேன். அடிமை உணர்ச்சி எழவில்லை; சுதந்தர தேசிய உணர்ச்சிதான் எழுந்தது. மனிதனை மனிதன் வெறுக்கும் மாசைக் காணவில்லை; ஒருவரை ஒருவர் அணைக்கும் உறவுத் தன்மையைக் கண்டேன்...'

படகுகளின் மூலம் உயிர் தப்பிய அனைவரையும், ஓர் இரஷ்யக் கப்பல் மீட்டு 'டிஜிபௌட்டி' என்னும் இடத்தில் இறக்கிவிட்டது. பிறகு நாயுடு அங்கிருந்து தம் பிரயாணத்தைத் தொடர்ந்தார்.

ஜெர்மனியில்

முதலில் ஜி. டி. நாயுடு 'மார்சேல்ஸ்' நகரை அடைந்தார். பிறகு ஜெர்மனியிலுள்ள 'ஹனேவர்' நகருக்குக் குன்சைச் சந்திப்பதற்காகச் சென்றார்; அவரின் விருந்தினராகச் சில நாட்கள் தங்கியிருந்தார். 'கொலோண்,' 'பான்' முதலிய நகரங்களில் உள்ள தொழிற்சாலைகளைப் பார்வையிட்டார். 'ஹெயில்ப்ரோன்' நகரத்தில் தன்னுடைய புகழ்பெற்ற கண்டுபிடிப்பான 'ரேசன்ட் பிளேடை' (Rasant Blade)ப் பரிசோதிப்பதில் ஈடுபட்டார். முக்கியமான தொழில் நகரங்களுக்கெல்லாம் சென்றார். அவரது தொழில் உள்ளத்தைக் கவர்ந்து, பொறியியல் ஆர்வத்தை வளர்த்த நாடு ஜெர்மனிதான் என்பது வெள்ளிடைமலை!

பிற நாடுகள்

பின்னர் அவர் பிரான்சு, இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளுக்குச் சென்றார்; மாபெரும் தொழிற்சாலைகளைப் பார்வையிட்டார்; வணிக மன்னர்களைச் சந்தித்தார்; பொறியியல் நிபுணர்களையும், தொழில் நுணுக்க மேதைகளையும் கண்டு அளவளாவினார்; பத்திரிகை நிபுணர்களுக்குப் பேட்டியளித்து, இந்தியாவைப் பற்றிய உண்மைகளை எடுத்துக் கூறி, நம் நாட்டின் மீது அவர்களுக்கு நல்லெண்ணம் ஏற்படச் செய்தார். அவருக்கு ஆங்கிலத்தில் பெரும்புலமை இல்லாவிட்டாலும் பேசக்கூடிய அளவிற்குப் பயிற்சி உண்டு. ஆகவே, மொழித் தொல்லையால் அவர் துன்புறவில்லை.

அமெரிக்காவிலிருந்து கீழ்நாட்டு வாணிக வல்லரசாகிய ஜப்பானுக்குச் சென்றார். அங்கும் உயர்ந்த தொழில் உண்மைகளை அறிந்தார். பிறகு மஞ்சூரி முதலிய நாடு

களுக்குச் சென்று நிறையக் கற்றுக்கொண்டார். அந்நாடுகளில் எல்லாம் மோட்டார்த் தொழில் நடத்தப்படும் முறைகளையும், நிருவாக அமைப்புகளையும், பயண வசதிகளையும் பற்றித் தெளிவாகத் தெரிந்துகொண்டார். புதிய உற்சாகத்தோடும் புத்துணர்வோடும் 1933ஆம் ஆண்டில் தாயகம் திரும்பினர்.

இலண்டன் நிகழ்ச்சி

அவர் இங்கிலாந்தில் இருந்த பொழுது ஒரு நாள் எக்ஸ்டெர் (Exeter) என்னும் நகரத்திலிருந்து இலண்டனுக்குத் திரும்பினர். முன்பே அவர் ஒரு குறிப்பிட்ட புகைவண்டியில் தனக்காக ஓர் இடத்தை 'ரிசர்வ்' செய்து வைத்திருந்தார். அந்த வண்டி போகும் வழியில் கோர விபத்திற்கு உள்ளாகியது. அதனுல் உயிரிழந்தோர் எண்ணிக்கை அளவிடற்கரியது. அந்த வண்டி விபத்திற்குள்ளான செய்தி அறிந்த நாயுடுவின் நண்பர்கள் விபத்து நடந்த இடத்திற்கு விரைந்து ஓடினுர்கள். அங்கே நாயுடுவைக் காணும். ஆகவே, அவர் விபத்தில் உயிரிழந்து, அடையாளம் தெரியாமல் சிதைந்து போய்விட்டார் என்று எண்ணிக்கொண்டு, இலண்டன் திரும்பினர். ஆனல், என்ன வியப்பு! அவர்களை வீட்டு வாசற்படியில் நாயுடு வரவேற்றுர். பிறகு விசாரித்தபோது அவர் அமைதியாகச் சொன்னுர்: 'நான் புகைவண்டி புறப்படுவதற்கு ஒரு மணி முன்னதாகவே நிலயத்திற்கு வந்துவிட்டேன். அப்பொழுது வேருெரு வண்டி இலண்டனுக்குப் புறப்பட்டுக்கொண்டிருந்தது. ரிசர்வ் செய்த வண்டியைவிட்டுவிட்டு, முன்னுல் புறப்பட்ட வண்டியில் ஏறிவிட்டேன். காலம்தான் எனக்கு முக்கியமே ஒழிய, வசதி முக்கியமன்று. காலம் என் உயிரைக் காப்பாற்றி விட்டது...' என்று கூறினுராம். என்னே அவரது நெஞ்சுறுதி!

வீர வரவேற்பு

ஜி. டி. நாயுடுவின் அயல் நாட்டு முதல் யாத்திரை முழு வெற்றி தந்தது. மேல்நாடுகளில் அவர் ஆற்றிய சொற் பொழிவுகள் அவருக்குப் பெரும் புகழைத் தேடித் தந்தன. நம் நாட்டுச் செய்தித்தாள்களில் அவரைப் பற்றிய செய்தி கள் வெளிவந்தன. அவர் சென்னையிலுள்ள புகைவண்டி நிலையத்தில் இறங்கியதும், நூற்றுக்கணக்கான நண்பர்கள். பொதுமக்கள், பத்திரிகை நிருபர்கள் ஆகியோர் கூடிநின்று அவருக்கு வீர வரவேற்புக் கொடுத்தனர். நாட்டு மக்களின் நல்லன்புக்கு அவர் உரியவரானார்!

6. அயல்நாட்டு யாத்திரை–II

முன்னேற்பாடு

அயல்நாட்டுச் சுற்றுப் பயணத்தால் மனிதனின் அறிவு வளருகிறது. பல நாட்டுப் பழக்க வழக்கங்களையும் நாகரிகத்தையும் கண்கூடாகக் காண்பதனால் பரந்த நோக்கம் ஏற்படுவதோடு, பண்பாடும் உறுதி அடைகிறது. அயல் நாட்டுச் சுற்றுப்பயணம் வெற்றி பெற வேண்டுமானால் ஒருவர் அந்நாட்டைப் பற்றிய முழு உண்மைகளையும் நன்ருகக் கற்றும், கேட்டும் அறிந்திருக்க வேண்டும். அத்துடன் காணவேண்டிய காட்சிகளைப் பற்றி ஒரு விளக்கமான நிகழ்ச்சி நிரலும் தயாரித்திருக்க வேண்டும். இந்த முன்னேற்பாடுகளைச் செய்வதில் ஜி. டி. நாயுடு தீரர்!

புது இடம் என்பதற்காக வெளிநாட்டில் அவர் யாரிடமும் ஏமாறுவதில்லை. ஊரைச் சுற்றிக் காண்பிப்பவர்கள் (Guides) கூட, அவர் அந்த ஊரில் மிகுந்த பழக்கமுடையவரைப்போலக் கேள்வி கேட்பதைப் பார்த்து வியப்படைவார்கள். அவர் எதையும் ஆழ்ந்து சிந்திப்பார்; ஆராய்ச்சி நோக்கோடு பார்ப்பார்; பார்த்ததை எல்லாம் மறவாமல் நினைவில் வைத்துக் கொள்வார். அதனுல்தான் அயல் நாட்டு யாத்திரைகளால் அவர் பெரும்பயன் அடைய முடிந்தது.

முதல் யாத்திரையால் தொழில் நுணுக்க அறிவு நிரம்பப்பெற்ற ஜி. டி. நாயுடு, இரண்டாம் முறையாக உலகச் சுற்

றுப்பயணம் மேற்கொள்ள விரும்பி, அதற்கான முன்னேற் பாடுகளைச் செய்யத் தொடங்கினர். 1935ஆம் ஆண்டில் அவரது இரண்டாவது அயல்நாட்டு யாத்திரை தொடங்கியது.

இங்கிலாந்தில்

ஜி. டி. நாயுடு இம்முறை தக்க முன்னேற்பாடுகளுடன் இங்கிலாந்துக்குச் சென்றார். கையில் இரண்டு புகைப்படக் கருவிகளை எப்பொழுதும் தயாராக வைத்திருந்தார். காணுகின்ற காட்சிகளை எல்லாம் உடனுக்குடன் எடுத்தார். இங்கிலாந்தில் இருந்த மிகப் பெரிய தொழிற்சாலைகளுக்கெல்லாம் சென்று, நேரடிப் பயிற்சி பெற்றார். அத்துடன் முக்கியமான இயந்திரங்களின் வேலை முறைகளையெல்லாம் படமெடுத்தார். அவர் இலண்டனில் இருந்த பொழுது சில வரலாற்று நிகழ்ச்சிகளையும் படமெடுக்கும் வாய்ப்புக்கிட்டியது. இங்கிலாந்து நாட்டின் மாமன்னர் **ஐந்தாம் ஜார்ஜ்** காலமான போது நடந்த இறுதி ஊர்வலம், அதில் கலந்துகொண்ட இலட்சக்கணக்கான மக்கள், ஊர்வலத்தில் ஏற்பட்ட நெருக்கடி, நெருக்கடியால் நேர்ந்த ஒருவரது சாவு முதலிய பலவற்றையும் தொடர்ச்சியாகப் படமெடுத்தார்.

அரசரின் அருள்

1935இல் இலண்டனில் பத்து நாட்கள் நடைபெற்ற 'ஒலிம்பிக்' பந்தயங்களையும் அவர் படமெடுத்தார். மற்றொரு நாள் **எட்டாம் எட்வர்டு மன்னர்** ஒரு புகழ்பெற்ற பொருட்காட்சி சாலையைக் காணவந்தார். அன்று ஜி. டி. நாயுடு தயாராகக் காட்சிசாலைக்கு வெளியே புகைப்படக் கருவியுடன் காத்திருந்தார். மன்னரின் கார் வந்து நின்றது. கதவுகள் திறந்தன. மன்னர் வெளியே வந்தார். சமயம் பார்த்து நின்ற நாயுடு, சாலையின் குறுக்கே பாய்ந்து, அர

சரை நேராகப் படமெடுத்தார். அதுவரை நாயுடுவைத் தடுத்துக்கொண்டு நின்ற ஊர்க்காவலன் ஒருவன் ஓடிச் சென்று, அவரை ஒதுக்கித் தள்ளினுன். உடனே மன்னர் ஊர்க்காவலனை நோக்கி, "புகைப்படக்காரரை ஒன்றும் செய்யாதே ; அவர் விருப்பம்போல் படம் எடுக்கட்டும்'' என்ருர். மன்னரின் அருள் கிடைத்த பிறகு நாயுடுவின் மகிழ்ச்சிக்குக் கேட்க வேண்டுமா? கதவுக்கு வெளியே காத்துக் கிடந்த அவர் மன்னரின் பின்னுலேயே காட்சி சாலைக்குள் நுழைந்தார். சுமார் ஒரு மணி நேரம் வேடிக்கை பார்த்து 400 அடிகள் கொண்ட படம் எடுத்தார். திரும்பும் பொழுது ஊர்க்காவலனுக்கு ஒரு 'சலியூட்' அடித்துவிட்டு வெற்றிகரமாக வீடு திரும்பினுர்.

அஞ்சல் சோதனை

வேருெரு நாள் அவர் இலண்டன் மாநகரில் உள்ள தபால்காரர்களின் திறமையைச்சோதிக்க ஒரு தந்திரம் செய்தார். அதாவது, தமக்குத்தாமே ஒரு கடிதம் எழுதி அதன் முகவரியில், 'ஜி. டி. நாயுடு; இலண்டன் ; W. C. 1.' என்று குறித்து, பர்மிங்காம் நகரில் தபாலில் சேர்த்தார். வீட்டு எண், தெரு முதலிய விவரங்கள் இல்லாமலிருந்தும் அந்தக் கடிதம் உரிய காலத்தில் சேர்ப்பிக்கப்படுகிறதா என்பதை அறியவே அந்தச் சோதனை! ஆனுல், மறுநாளே அந்தக் கடிதம் நாயுடு கையில் கிடைத்தது. ஆங்கில நாட்டின் அஞ்சல் துறைத் திறமையைக் கண்டு அவர் அயர்ந்து போனுர்.

நாணயம்

ஒரு நாள் ஜி. டி. நாயுடு தம் பெயர் பொறித்த புகைப்படக் கருவியை இலண்டனில் எங்கேயோ கைதவறி

வைத்துவிட்டார். ஆனால், என்ன வியப்பு! மறுநாளே அஃது அவர்கையில் கிடைத்தது. அந்தக் கருவியைக் கண்ட ஆங்கிலேயர் ஒருவர், அதனை எடுத்து, 'இழந்த பொருள்கள் அலுவலகத்தில்' (Lost Property office) சேர்த்திருக்கிறார். அங்கிருந்து அது நாயுடுவின் முகவரிக்குக் கொண்டு வந்து சேர்க்கப்பட்டது.

மற்றொரு நாள் நாயுடு அவர்கள் இலண்டனில் இருந்து இந்தியாவில் உள்ள ஒரு நண்பரோடு 'டிரங்க் போன்' (தொலைபேசி) மூலம் பேசினார். அவர் பேசிய நேரம் மூன்று மணித்துளிகள் (நிமிடம்) தாம். ஆனால், ஐந்து மணித்துளிகளுக்குரிய தொகை அவரிடமிருந்து வசூலிக்கப்பட்டது. இதை அவர் தொலைபேசி இலாகாவின் மேலதிகாரிக்குத தெரியப்படுத்தினார். உடனே இரண்டு பவுன் அங்கிருந்து நாயுடுவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டது. ஆங்கிலேயரின் நாணயமான நடத்தையைக் கண்டு மகிழ்ந்த நாயுடு அந்த இரண்டு பவுனையும் தொலைபேசித் தொழிலாளர் நிவாரண நிதிக்கு அன்பளிப்பாகக் கொடுத்தார்.

இரஷ்யாவில்

நாயுடு மிக்க ஆர்வத்தோடு இரஷ்யாவுக்குச் சென்றார். ஆனால், அந்நாட்டின் அமைதி அவருக்குப் பிடிக்கவில்லை. அந் நாட்டு மக்கள் அவருடன் நெருங்கிப் பழகவில்லை. அவர் நான்கு நாட்கள் மாஸ்கோவில் தங்கியிருந்தார்; வரலாற்றுப் புகழ்பெற்ற இடங்களைப் பார்த்தார்; உடனே பெர்லினுக் குப் புறப்பட்டு விட்டார்.

ஜெர்மனியில்

ஜி. டி. நாயுடு ஜெர்மனியில் பல இனிய அனுபவங்களுக் கெல்லாம் ஆளானார். அவற்றில் முக்கியமானது அவர் இட்

லரைச் சந்தித்ததே யாகும். பெர்லினில் நாயுடு இட்லரைக் காணப் பெருமுயற்சி செய்தார். ஆனால், அவரோ, நேர மில்லை என்று பேட்டிகொடுக்க மறுத்துவிட்டார். அதற்காக நாயுடு தளரவில்லை. சில நாட்களுக்குப் பிறகு அவர் 'கோலோண்' என்னும் நகரில் 'டாம் ஹோட்டலில்' (Dom Hotal) தங்கியிருந்த பொழுது தற்செயலாக 'நாசி'க் கட்சித் தலைவர்கள் பலர் அங்கு வந்தனர். அவர்களில் இட்லரும் இருந்தார். கோயரிங், லே, ஹெஸ், கோயபெல்ஸ் முதலிய புகழ் பெற்ற நண்பர்களோடு இட்லர் வந்திருந்தார். அந்தச் சமயத்தைப் பயன்படுத்திக்கொண்டு நாயுடு, இட்லரிடம் பேட்டி கேட்டார். அவரும் மறுக்காமல் நாயுடுவை வரவேற்று உபசரித்தார்; அன்போடு உரையாடினார். இவர்களது உரையாடலை 'லே' என்பவர் மொழிபெயர்த்தார். கடைசியில் அத்தலைவர்கள் அனைவரையும் ஒன்றாக வைத்து நாயுடு படம் பிடித்தார். இட்லரின் தனியான படம் ஒன்றில் நாயுடு அவரது கையொப்பமும் பெற்றார்.

'டூசல்டார்ப்' (Dusseldorf) என்ற இடத்தில் இருந்த பொழுது நாயுடு ஜெர்மன் படைப்பிரிவு ஒன்றைப் படம் பிடித்தார். பெர்லினில் இருந்த பொழுது ஜெர்மன் அரசியலையும், தொழில் வளர்ச்சியையும் பற்றி நிறையத் தெரிந்துகொண்டார்.

சுவிட்சர்லாந்தில்

கடிகாரத் தொழிலுக்குப் பெயர்பெற்ற சுவிட்சர்லாந்தில் அத்தொழிலைப் பற்றிய நுணுக்கங்களை நாயுடு நன்கு அறிந்துகொண்டார். அந்நாட்டில் 'பேடன் வீலர்' என்பது கோடை வாசத்தலம். அங்கே பண்டித சவாகர்லால் நேரு அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு நம் நாயுடுவுக்குக் கிடைத்தது. அப்பொழுது நேரு அவர்களின் மனைவியார் திருமதி

கமலாநேருவுக்கு உடல்நிலை மிகவும் கவலைக்கிடமாய் இருந்தது. அதனால் மருத்துவ சிகிச்சைக்காகத் தம் மனைவியுடன் நேரு அங்கு வந்து தங்கியிருந்தார். அப்பொழுது ஜி. டி. நாயுடு நேருவைச் சந்தித்து, அவர் மனைவியின் உடல்நிலை பற்றி விசாரித்தார்; சிறிது நேரம் உரையாடினார். பிறகு நேருவைத் தமது புகைப்படக் கருவியின் மூலம் படம் பிடித்து, அப்படத்தில் நேருவின் கையெழுத்தையும் வாங்கிக் கொண்டார்.

அமெரிக்காவில்

பின்னர் ஜி. டி. நாயுடு உலகத்தின் தலைசிறந்த செல்வச் சீமையான அமெரிக்காவுக்குச் சென்றார். சில வாரங்கள் தங்கியிருந்து கனரகத்தொழில்களைப் பற்றிய உண்மைகளை அறிந்துகொண்டார். அத்துடன் அந்நாட்டின் அரசியல் முறை, கல்வி அமைப்பு, போக்குவரத்து, பொருளாதாரம் முதலிய பிரச்சினைகளைப் பற்றியும் தெரிந்துகொண்டார். பிறகு தாயகம் திரும்பினார். அவர் திரும்பிய கப்பலில் ‘ லின்லித்கோ பிரபு ’ இந்திய வைசிராயாக நியமனம் பெற்று இந்தியா வந்துகொண்டிருந்தார். ஜி. டி. நாயுடு அக் கப்பலில் இருந்தஇந்தியர்ஐவருடன் சேர்ந்து, அப்பிரபுவிற்கும் அவர் மனைவியாருக்கும் கப்பலிலேயே வரவேற்பு விருந்தளித்துச் சிறப்பித்தார். அத்துடன் அந்நிகழ்ச்சி முழுவதையும் படமாக்கினார்.

வரும் வழியில் அவர் சீனா, ஜப்பான் முதலிய நாடுகளிலும் சில நாட்கள் தங்கியிருந்து, பல உண்மைகளை அறிந்துகொண்டார். சீனாவில் உள்ள ‘பெரிய மதிற்சுவரை’யும் (Great wall) கண்டு களித்தார். விளக்கமான முறையில், வெற்றிகரமான வகையில் இரண்டாவது யாத்திரையை முடித்துக்கொண்டு, நாயுடு புதிய மனிதராகக் கோவைக்குத் திரும்பினார்.

7. ரேசன்ட் பிளேடு

ஜி. டி. நாயுடு கண்டுபிடித்துள்ள அரிய பொருள்களில் எல்லாம் மிக அருமையானது, '**ரேசன்ட் பிளேடே**'யாகும். சாதாரணக் கிராமத்தில் பிறந்த ஒரு படிப்பறிவில்லாத மனிதர், அனைத்துலகம்புகழத்தக்க ஓர் அதிசயமான பிளேடைக் கண்டு பிடித்திருக்கிறார் என்றால், அது நமக்கெல்லாம் பெருமை தரத்தானே செய்யும். இன்று கடைத்தெருவில் ஓரணாவிற்கும், இரண்டணாவிற்கும் கிடைக்கும் பிளேடுகள் எல்லாம் ஒரு முறையோ அல்லது இருமுறையோதாம் பயன் படும்; ஒரு வாரத்திற்குத்தான் நிலைத்திருக்கும். ஆனால், நாயுடு கண்டுபிடித்துள்ள பிளேடோ 200 முறைகளுக்கு மேல் சவரம் செய்யப் பயன்படும். இரண்டு ஆண்டுகள் வரை நிலைத்திருக்கும். அவர் கண்டுபிடித்த பிளேடுதான் உலகிலேயே மிகவும் இலேசானது. ஓர் அங்குலத்தில் $\frac{1}{200}$ பாகம் குறுக்களவுடையது; இரு சிறு முனைகளையும் ஒன்றாகச் சேர்த்து வளைத்தாலும் ஒடியாது; மின்சாரத்தின் மூலம் உபயோகிக்கப்படக் கூடியது; உலகின் பல பகுதிகளில் நடந்த பொருட்காட்சிகளில் எல்லாம் முதற்பரிசு பெற்றது. இத்தகைய அதிசய பிளேடை அவர் கண்டுபிடித்தது ஒரு பெரிய கதை!

முதன் முதலாக 1932ஆம் ஆண்டில் ஜி. டி. நாயுடு உலகச் சுற்றுப் பயணம் சென்றிருந்தார் அல்லவா? அவர்

இலண்டனில் தங்கியிருந்த பொழுது ஒரு நாள் முகச்சவரம் செய்துகொள்ளும் பொருட்டு ஒரு நாவிதனின் கடைக்குச் சென்றார். அவனோ ஒரு ஷில்லிங் (75 ந. பை.) கூலி கேட்டான். அது தொழிலுக்கு மீறிய ஊதியமாக நாயுடுவுக்குப் பட்டது. என்றாலும், உள்ளே நுழைந்தபின் என்ன செய்வது ? வேண்டா வெறுப்பாகக் கூலி கொடுத்துவிட்டு வெளியேறினார்.

அன்றிரவே அவர் ஒரு முடிவுக்கு வந்தார். அதாவது, தாமே இனிச் சொந்தமாகச் சவரம் செய்து கொள்வது ; அல்லது தாடி வளர்ப்பது. இதில் பின்னது அவருக்குப் பொருத்தமாகப் படாததால் முன்னதைச்செய்ய முயன்றார். அதன் விளைவு முகத்தில் பல வடுக்கள் ; இரத்தக் காயங்கள். காரணம், அவர் பயன்படுத்திய பிளேடுகளில் ஒன்றுகூட அவர் எதிர்பார்த்த அளவுக்குக் கூர்மையாக இல்லை. தகுந்த பிளேடு கிடைக்கவில்லை என்பதற்காகத் தாடி வளர்க்க விஞ்ஞானியின் உள்ளம் ஒருப்படுமா ? புதிய பிளேடு கண்டு பிடிப்பது என்று நாயுடு தீர்மானித்தார் ; செயலில் இறங்கினார். ஆனால், முதலில் தோல்விதான் கிடைத்தது.

பிறகு அவர் ஜெர்மனிக்குச்சென்ற பொழுது ஒரு நாள் அங்கும் ஒரு நாவிதனின் கடையுள் நுழைந்தார். கூலியாக அவன் ஒரு மார்க்கு (ஜெர்மன் நாணயம்) கேட்டான். மிகுந்த கூலிஎன்று கூறிக்கொண்டே கடையைவிட்டு வெளியேறினார் நாயுடு. பிறகு ஜெர்மனியர் செய்த பல்வேறு பிளேடுகளைக் கொண்டு சவரம் செய்து பார்த்தார். மீண்டும் அதே வடுக்கள் ; இரத்தக் காயங்கள். இம்முறை எப்படியும் புதிய பிளேடு ஒன்றைக் கண்டு பிடித்துவிடுவது என்ற உறுதியோடு விஞ்ஞானச் சோதனைகளைத் தொடங்கினார் நாயுடு.

ஜெர்மனியில் ‘ **ஹெயில் பிரான்** ’ என்று ஒரு நகருண்டு. அஃது இரசாயணப்பொருள்களுக்குப்பெயர் பெற்ற இடம். அங்கே ‘ **கோபர்-ஆஸ்பெஸ்டாஸ்** ’ என்று ஒரு தொழிற் சாலை இருந்தது. அதன் நிருவாகிகளை அணுகினார் நாயுடு. தாம் சில பரிசோதனைகளைச் செய்ய விரும்புவதாகவும், அதற்கு அவர்கள் தொழிற்சாலையில் ஒரு சிறு பகுதியை ஒதுக்கித்தர வேண்டும் என்றும் கேட்டார். அதற்கு அவர் களும்மகிழ்ச்சியோடு ஒப்புக்கொண்டு,வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்தனர். அங்கேதான் நாயுடு தமது முதல் சோதனையைத் தொடங்கினார். சோதனை பல நாட்கள் நடந்தது. அல்லும் பகலும் ஆராய்ச்சி செய்வதிலேயே காலத்தைக் கழித்தார். இறுதியில் வெற்றி கிடைத்தது! உழைப்புப் பயனளித்தது!! உயர்ந்த ‘ரேசன்ட் பிளேடைக்’ கண்டு பிடித்தார். விஞ்ஞான அறிவு படைத்த ஜெர்மனிய நண்பர்கள் அவரைப் பெரிதும் பாராட்டினர். அந்தப் பிளேடையும், அதன் பெயரையும் ஜெர்மனியிலே பதிவு செய்யும்படி அவர்கள் அறிவுரை கூறினர். அதன்படியே நாயுடு 600 மார்க்குகள் கட்டணம் செலுத்திச் சட்டப்படி தமது பிளேடைப் பதிவு செய்தார்.

‘ ரேசன்ட் பிளேடு ’ மின்சார சக்தியின் மூலம் இயங் கக்கூடியது. பிளேடுக்குத் தேவையான மின்சார மோட் டாரை ஜெர்மனியிலும், கைப்பிடியை சுவிட்சர்லாந்திலும் அவர் தயாரித்தார். பிளேடு செய்வதற்குரிய உயர்ந்த ரக இரும்பை அவர் நார்வேயிலிருந்து வரவழைத்தார். முதலில் அவர் பத்தாயிரம் பிளேடுகள் தயாரித்தார். உலகமெங்கும் உள்ள தம் நண்பர்கட்குச் சில பிளேடுகளை அனுப்பினார். இந்தப் பிளேடைப் பற்றி நன்கு விளம்பரம் செய்யுமாறு அவர் நண்பர்கள் அவரை வற்புறுத்தினர். எனவே, நாயுடு இரண்டாம் முறையாக உலகச் சுற்றுப்பயணம் மேற் கொண்ட பொழுது, இலண்டனில் ‘ **டைம்ஸ்** ’ என்னும்

நாளிதழில் விளம்பரம்கொடுப்பதற்காக அதன் அலுவலகத் திற்குள் நுழைந்தார். 'ஒரு திங்களுக்குத்தொடர்ந்து சில வரி களில் விளம்பரம் கொடுக்க என்ன செலவாகும்?' என்று கேட்டார். அதற்கு அந்த மேலாளர் கணக்குப் போட்டுப் பார்த்து 1000 பவுன் கட்டணம் கேட்டார். மறு பேச்சுப் பேசாமல் நம் நாயுடு அங்கிருந்து எழுந்து வந்துவிட்டார். ஆகவே, விளம்பர ஆசை அரும்பிய போதே கருகிற்று.

பிறகு, நாயுடு சில பெரிய கடைக்காரர்களிடம் அந்த பிளேடைக் கொடுத்துக் 'காட்சி அறை'யில் (ஷோ ரூம்) வைக்கும்படி கேட்டார். அவர்களும் மறுத்து விட்டனர். இறுதியாகச் சில சிறுகடைக்காரர்களை அணுகினார். பிளேடு ஒன்றுக்கு 15 ஷில்லிங் வீதம் தமது பிளேடுகளை விலைக்குத் தருவதாகவும், அவற்றைவிற்றுத்தரும்படியும் வேண்டினார். நல்ல காலம்! சிலர் ஒப்புக்கொண்டனர். அதன் விளைவு அடுத்த சில நாட்களிலேயே ரேசண்ட் பிளேடின் உயர்ந்த தன்மை இலண்டன் முழுவதும் பரவியது! கிராக்கி ஏற்பட்டது!! உடனே அதன் விலையை 25 ஷில்லிங்கிக்கு நாயுடு உயர்த்தினார். இரண்டே திங்களில் இலண்டன் மாநாகரில் மட்டும் 7500 பிளேடுகள் விற்பனையாயின. இந்தியாவில் பிளேடு ஒன்றுக்கு ரூ. 9 வீதம் ஆயிரம் பிளேடுகள் விலை போயின. நாயுடு கண்டுபிடித்த பிளேடு மற்றக் கம்பெனி களுக்குப் பேரிடியாயிற்று! பெயர் பெற்ற கம்பெனிகளின் பிளேடுகள் எல்லாம் மதிப்பிழந்தன. எனவே, இழந்த மதிப் பைப் பெறுவதற்காகவும், நாயுடுவின் போட்டியைத் தகர்ப் பதற்காகவும் ஒரு பெரிய ஆங்கிலக் கம்பெனி 'டெலி—ரேசர்' (Tele razor) என்ற பெயரில் ஒரு புதிய பிளேடை வெளி யிட்டது. ஆனால், பாவம்! அதன் விலை 15 ஷில்லிங்காக இருந்தும்கூட, அது நாயுடுவின் பிளேடை எதிர்த்து நிற்க முடியாமல் தோற்றது. தோன்றிய சுவடு தெரியாமல் அப் புதிய கம்பெனி மறைந்து போயிற்று!

நாயுடு அமெரிக்கா சென்றிருந்த பொழுது அங்கிருந்த நண்பர்கள் ரேசன்ட் பிளேடைப் பார்த்துப் பேருவகை அடைந்தனர்; அவரது விஞ்ஞான அறிவை வியந்து போற்றினர். "அனைத்துலகையும் ஆட்கொள்ளக் கூடிய ஒரு புதிய பிளேடைக்கண்டுபிடித்து வீட்டில்வைத்திருப்பது சரியன்று; அதை எங்களுக்கு விலைக்குத் தாருங்கள்" என்று கூறிய வாறு ஏராளமான அமெரிக்கக் கம்பெனிகள் ஜி. டி. நாயுடு விடம் படையெடுத்தன. நாயுடு பிளேடு செய்யும் முறையைத் தெரிவித்து, வேலைக்குச் சேரத் தயாரானால்' 'விக்டர்' என்னும் ஓர் அமெரிக்க முதலாளி அவருக்கு மூவாயிரம் டாலர் (ரூ 15,000) மாதச் சம்பளம் தந்து, வேலைக்கு வைத்துக்கொள்வதாக வாக்களித்தார். இன்னொரு அமெரிக்க முதலாளி அதன் முழு உரிமையை மூன்று இலட்சம் டாலர் (பதினைந்து இலட்சம் ரூபாய்) விலை கொடுத்து வாங்கத் தயாரானார். மற்றோர் அமெரிக்க முதலாளி, தமது சொந்த நகரான சிகாகோவில் ரேசன்ட் பிளேடுத் தொழிற்சாலை ஏற்படுத்துவதாகவும், கிடைக்கும் இலாபத்தில் நாயுடுவுக்கு 50 விழுக்காடு (சதவீதம்) கூட்டு ஏற்படுத்துவதாகவும் தெரிவித்தார்.

இங்ஙனம் மாபெரும் அமெரிக்க முதலாளிகள் பணத்தை வலை வீசி நாயுடுவைப் பணிய வைக்க நினைத்தும், பிளேடின் உரிமையை விலைக்கு வாங்கப் போட்டியிட்டும் கூட, அந்தப் பொருட்குவியலைத் துச்சமெனக் கருதிப் புறக்கணித்தார் நாயுடு! காரணம், 'பொன்னான தமது விஞ்ஞானப் புதுமையைப் பொருளாசைப்பட்டு விற்றுவிடக் கூடாது. அதனை ஓர் இந்தியன் கண்டுபிடித்ததைப் போலவே, இந்தியமண்ணிலேயேஉற்பத்தி செய்தல் வேண்டும்; உலகெங்கும் ஏற்றுமதி செய்தல் வேண்டும். அதனால் கிடைக்கும் இலாபமெல்லாம் இந்தியாவுக்கே பயன்பட வேண்டும்' என்பது அவரது தணியாத ஆசை! அந்த

ஆசையை நிறைவேற்ற அவர் பல முயற்சிகள் எடுத்துக் கொண்டார். திரு. எம். ஏ. சீனிவாசன் என்பவரும், திரு. எஸ். வி. இராமமூர்த்தி என்பவரும் சென்னை அரசாங்கச் செயலாளர்களாக இருந்தபொழுது, அவருக்குத் துணைசெய்ய முன் வந்தனர். ஆனால், மத்திய அரசாங்கத்தின் ஒத்துழைப் பின்மையாலும், உயர்ந்த ரக இரும்பு கிடைக்காததனாலும் தமிழ் மண்ணில் இன்னும் ரேசன்ட் பிளேடுத் தொழிற் சாலை தோன்றவில்லை. அறிஞர் உலகத்தின் ஆதரவும் அர சாங்கத்தின் அரவணைப்பும் நாயுடுவுக்குக் கிட்டுமானால் நாட் டின் தொழில் வளர்ச்சியில் அஃது ஒரு நல்ல மாறுதலை ஏற் படுத்தும் என்று திண்ணமாக நம்பலாம்!

8. பிற கண்டுபிடிப்புகள்

விஞ்ஞான மேதையான ஜி.டி. நாயுடு, தமது சொந்த அறிவாலும், அனுபவத்தாலும் பல விஞ்ஞானக் கருவிகளைக் கண்டுபிடித்திருக்கிறார். அவற்றில் சிலவற்றைப் பற்றித் தெரிந்துகொள்வோம்.

அதிசய முறை

மோட்டார்வண்டித் தொழிலில் ஜி. டி.நாயுடு ஈடுபட்ட சிறிது காலத்திற்குள் தமது விஞ்ஞான அறிவைக் கொண்டு ஓர் அதிசய முறையைக் கண்டுபிடித்தார். அந்த முறையை மோட்டார் வண்டி ரேடியேட்டரில் கையாளுவதன் மூலம் மறுமுறை தண்ணீர் ஊற்ற வேண்டிய அவசியமே இல்லாமல் நூற்றுக்கணக்கான மைல்களுக்கு வண்டியைச் செலுத்த முடியும்.

ஒளி சமனக் கருவி

புகைப்படக் கருவிகளுக்குரிய ஒரு புதிய பாகம் ஜி. டி. நாயுடுவால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதன் பெயர் 'ஒளி சமனக் கருவி' (Distance adjuster) என்பதாகும். சாதாரணமாகஇப்பொழுதுள்ளபடிஒருபொருளைத் தூரத்திலிருந்து படமெடுத்தால் அது பிலிமில் சிறிய அளவில் பதிவாகிறது, ஆனால், அதைக் கண்ணாடிக்கு அருகில் வைத்துப்

பார்த்தால் அப்பொருளின் உருவம் திரையில் பெரிதாகத் தெரிகிறது. அம்மாதிரியான ஏற்றத்தாழ்வுகள் இல்லாமல் ஒரே மாதிரியாகச் செய்வதற்கு நாயுடு கண்டுபிடித்துள்ள ' ஒளி சமனக் கருவி ' பெரிதும் துணைசெய்யும்.

வாக்குப் பதிவு இயந்திரம்

நாயுடுவின் அரிய கண்டுபிடிப்புகளில் வாக்குப் பதிவு இயந்திரமும் (Vote recording machine) ஒன்றாகும். அக் கருவியைப் பயன்படுத்துவதன் மூலம் தேர்தல்களில் நடக்கும் மோசடியைத் தடுக்க முடியும். அமெரிக்காவில் அதைப் போன்ற இயந்திரத்தைக் கண்டு பிடிப்பதற்கு எடிசன் தம் இளம் பருவத்தில் முற்பட்டார். ஆனால், அங்கிருந்த செனட் சபை உறுப்பினர்கள் சிலர் அவரைக் கேலி செய்ததால் அம் முயற்சியைக் கைவிட்டார். ஆனால், ஜி. டி. நாயுடு தம் சொந்த அனுபவத்தால் அந்தக் கருவியை உருவாக்கியிருக்கிறார். அதுஒரு முறை சென்னைப்பூங்காவில் நடந்த பொருட் காட்சியில் மக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது. அப்பொழுது அதனைக் கண்ணுற்ற அறிஞர்கள் நாயுடுவைப் பெரிதும் பாராட்டினர்.

பிற இயந்திரங்கள்

இன்னும் பஸ்களின் அதிர்ச்சியைச் சோதிப்பதற்கான இயந்திரம்(Vibrato Testing Machine), சவர பிளேடுகள் உற்பத்தி செய்வதற்கான இயந்திரம், பழச்சாறு பிழியும் கருவி. இரும்புச் சட்டங்களில் உள்ள நுணுக்கமான வெடிப்புக்களைக் கண்டுபிடிக்கும் கருவி (Magro plux testing unit), கணக்குப் போடும் கருவி (Calculating machine), தொலைப் பார்வைக்கண்ணாடி (Lence), குளிர்பதனக் கருவி (Refrigerator), ஒலிப்பதிவு இயந்திரம் (Recording machine), வானொ

லிக் கடிகாரம் (Radio clock), காப்பி தரும் கருவி (Coffee meat supplier), துலக்கும் இயந்திரம், காசு போட்டால் தானே பாடும் கருவி (Slot singing machine), நிலையத்திற் குள் பஸ்கள் வரும் நேரத்தையும் போகும் நேரத்தையும் குறிக்கும் கருவி, சலவை செய்யும் கருவி, மா அரைக்கும் கருவி, வானொலிப் பெட்டி முதலிய பல கணக்கற்ற கருவி களை அவர் தாமே கண்டுபிடித்திருக்கிறார். ஆனால், அவை யெல்லாம் விளம்பரம் இல்லாமல் வீணே இருக்கின்றன. அவரும் குடத்துக்குள் இட்ட விளக்குப்போல ஒளியின்றி இருக்கிறார். அவரைத் தக்கமுறையில் நாடு பயன்படுத்திக் கொண்டால் அடுத்த தலைமுறையிலாவது இந்தியா தொழில் மயமாக முடியும்! அவரது அறிவும் ஆற்றலும் நாட்டுக் குப் பயன்படல் வேண்டும் என்பதே சான்றோரின் அவா!

9. அயல்நாட்டு யாத்திரை–III

உலகப் போர்

இளம் பருவத்தில் ஊர் சுற்றிய ஜி. டி. நாயுடு, தொழில் அதிபரானதும் உலகம் சுற்றும் பணியில் ஈடுபட்டார். இரண்டு முறை அயல்நாடுகளில் சுற்றுலா வந்தும் அவரது அறிவுத் தாகம் தீரவில்லை. ஆகவே, மூன்றும் முறையாக 1939ஆம் ஆண்டில் ஐரோப்பிய யாத்திரையைத் தொடங்கினர். அவர் இங்கிலாந்தின் கரையை அடைந்தபொழுது, இரண்டாம் உலகப்போர் தொடங்கிற்று. ஜெர்மன் படைகள் போலந்திற்குள் நுழைந்தன. இங்கிலாந்தில் இருந்த தொழிற்சாலைகள் போர்க் கருவிகளை உண்டாக்கலாயின. நாயுடு இங்கிலாந்தில் சில திங்கள் தங்கியிருந்து பல தொழிற்சாலைகளைப் பார்வையிட்டார். பிறகு அமெரிக்காவுக்குப் பயணமானர்.

அமெரிக்காவில் உலகக் கண்காட்சி

1939 அக்டோபர்த் திங்கள் நாயுடு அமெரிக்கா போய்ச் சேர்ந்தார். அப்பொழுது நியூயார்க்கில் 'உலகக் கண்காட்சி' நடைபெற்றுக்கொண்டிருந்தது. நாயுடு அங்கிருந்த காட்சிப் பொருள்கள் அனைத்தையும் கண்டு களித்ததோடு, 4000 அடி நீளமுள்ள சலனப் படமும் எடுத்தார்.

LIBRARY
No. 106799

அக் கண்காட்சி நாயுடுவின் தொழிலறிவு வளர உறுதுணை புரிந்தது. அவர் நியூயார்க்கிலிருந்த ஒவ்வொரு நாளும் கண்காட்சிக்குச் சென்ருர்; ஒவ்வொரு பொருளையும் நுணுக்கமாக ஆராய்ந்தார். அதைப்பற்றி அவரே தம் நண்பர் ஒருவர்க்கு எழுதுகிருர் : 'நாண் கண்காட்சிக்குத் தவருமல் சென்று வந்தேன். எப்பொழுதும் நான்தான் காட்சி சாலைக்குள் நுழைவதில் முதல் மனிதனுகவும், வெளி வருவதில் கடைசி மனிதனுகவும் இருந்தேன். நாள்தோறும் காலை உணவை முடித்துக்கொண்டு காட்சி சாலைக்குள் போவேன். மாலை வரையில் ஒன்றுமே உண்ணுமல் இயந் திரங்களைப் பார்த்துவிட்டு வீடு திரும்புவேன்...'

அமெரிக்காவில் இருந்தபொழுது நாயுடுவுக்கு அந் நாட்டு மக்களது பண்பும், பழக்க வழக்கங்களும் பெரு மகிழ்ச்சி ஊட்டின! அவர் தம் நண்பர் ஒருவர்க்குக் கடிதம் எழுதும்போது அதைப்பற்றிக் குறிப்பிடுகிருர் : "அமெரிக் கர்கள் அறிவிற் சிறந்தவர்கள். புகைவண்டி புறப்படும் நேரமும், வந்து சேரும் நேரமும் அனைவருக்கும் தெரிந்திருக் கின்றன. ஆதலின், இங்கே சாலைகளும், இருப்புப் பாதை களும் சந்திக்கும் இடங்களில் போக்குவரவைத் தடுக்கும் கதவுகள் (Lovel cross) இல்லை. அமெரிக்கப் புகை வண்டி களில் ஆயிரம் கல் தொலைவு பயணம் செய்வதாலும் ஆடை களில் அழுக்குப் படுவதில்லை. வண்டிகள் அவ்வளவு தூய்மையாக இருக்கின்றன...' என்பதே அவர் எழுதிய சிறு குறிப்பாகும்!

AWM93
N63

கைத்தொழில் மாணவர்

நியூயார்க்கிலிருந்து நாயுடு சிகாகோ சென்ருர். பிறகு 'செயின்ட் லூயி' என்னும் நகரத்தில் உள்ள பெரிய கைத் தொழிற் பள்ளியில் 1940ஆம் ஆண்டு சனவரித் திங்களில்

மாணவராகச் சேர்ந்து தொழிற் கல்வி பயின்றார். அப்பொழுது அவருக்கு வயது 47. அவர் சேர்ந்த அந்தப் பள்ளியின் பெயர் **'கார்ட்டர் கார்புரேட்டர் பள்ளி'** (carter carburator school) என்பதாகும். அந்தப் பள்ளி நிருவாகத்தினர் ஒவ்வொரு மாதமும் 40 மாணவர்களுக்குத் தலைக்கு 200 டாலர் வீதம் செலவு செய்து பயிற்சி கொடுத்து வந்தனர். அங்கே கல்வி கற்ற முதல் இந்தியர் ஜி. டி. நாயுடுதான்! அவர் அங்கு ஓய்வு நேரத்தில் வேலை பார்த்ததற்காக வாராவாரம் 16 டாலர்கள் வரை ஊதியமாகப் பெற்று வந்தார்.

'செயின்ட் லூயி' நகரில் குளிர்காலத்தில் குளிர்நிலை —11° (மைனஸ் 11 டிகிரி) ஆக இருக்கும். அதைப் பொறுக்க ஐரோப்பியர்களாலேயே முடியாது. இருந்தும், நாயுடு அதைப் பொறுத்துக்கொண்டார். ஆனால், குளிருக்குப் பயந்து அவர் ஐரோப்பிய உடை அணியவில்லை. இந்தியக் கலைப் பண்பிற்கு ஏற்ப ஒரு வேட்டி, சட்டை, மேல்துண்டு முதலியவற்றையே அணிந்துகொண்டார். படிப்பிலும் பயிற்சியிலுமேதான் கவனமாக இருந்தாரே ஒழிய, உணவிலும் உறக்கத்திலும்அவர் கருத்துச் செலுத்தவில்லை. அதற்கு அவரது கடிதமே சான்று : 'ஒரு நாள் ஒரு வேலையை நான் காலை 9 மணிக்குத் துவக்கினேன். மறுநாள் 12 மணி வரையில் ஊண், உறக்கமின்றித் தண்ணீர்கூட அருந்தாமல் வேலை செய்தேன்...'

நாயுடு தொழிற் பள்ளியில் மாணவராகச் சேர்ந்தாலும் அவரை மாணவராக மற்றவர்கள் கருதவில்லை. ஆசிரியர்களும், பள்ளி நிருவாகிகளும் அவரை அன்பாக நடத்தினர். அவரைப் பல பொதுக்கூட்டங்களில் பேசச் செய்தனர். செய்தித்தாள் ஆசிரியர்கள் அவரைப் பேட்டி கண்டு பாராட்டுரை வரைந்தனர். பொது இடங்களிலும்

மன்றங்களிலும் அவர் ஓய்வு நேரங்களில் சொற்பொழி வாற்றினர். வேதாந்தம், சமயம், சமுதாயம், சமத்துவம் முதலியவற்றைப்பற்றி விரிவாக எடுத்துரைத்தார். 'ஒருவரையும் ஏமாற்ருதே; உன்னையும் ஏமாற்றிக்கொள்ளாதே. பிறர் பொருளைத் திருடாதே. சாராயம் முதலிய போதைப் பொருள்களைத் தொடாதே. சக்தியை வீணுக்காதே. உடலைக் காப்பாற்று. ஒழுக்கமாயிரு. இயற்கை அழகுடன் விளங்கு—இந்து மதம் இந்த அடிப்படைக் கொள்கையின் மேல்தான் கட்டப்பட்டிருக்கிறது' என்று ஒரு சமயக் கூட்டத்தில் பேசினர்.

இன்னெரு முறை அவர் ஒரு மாதர் சங்கத்தில் பேசும் பொழுது சொன்னர்...'முடி அலங்காரமும், ஆடம்பர ஆடைகளும், மாத்தோய்ந்த முகங்களும், நிறம் தீட்டிய உதடுகளும் மட்டும் பெண்களை ஒருபோதும் அழகு செய்யா. ஒழுக்கமும் உண்மையும்தான் பெண்களுக்கு இயற்கையான அழகாகும்.'

இங்ஙனம் அவர் ஆற்றிய சொற்பொழிவுகளுக்கெல்லாம் அந்தந்தச் சங்கத்தார் அமெரிக்க முறைப்படி ஊதியம் கொடுத்தனர். ஆனல் நாயுடு அவற்றை ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார். பள்ளிப் பயிற்சி முடிந்ததும் நாயுடு, அதன் நிர்வாகிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் தமது அன்பை வெளிப்படுத்தும் பொருட்டுத் தமிழில் ஒரு அழகிய வாழ்த்து மடல் எழுதிக் கொடுத்தார். அது மறுநாளே உள்ளூர் பத்திரிகைகளில் வெளியாயிற்று.

பிறகு அவர் 'டேவன் போர்ட்' (Daven port) என்னும் நகருக்குச் சென்று, அங்கிருந்த சலனப்படக் கருவித் தொழிற்சாலையில் (Film Projector Factory) பத்து நாட்கள் பயிற்சி பெற்றுர். அவர் அமெரிக்காவில் இருந்தபொழுது

தம் நண்பர்களுக்குக் கடிதம் எழுத நேரமில்லை. ஆகவே, வாரம் ஒன்றுக்கு 20 முதல் 30 டாலர்கள் வரை ஊதியம் கொடுத்து ஒரு சுருக்கெழுத்தாளரை வேலைக்கு அமர்த்திக் கொண்டார். இதிலிருந்து, அவர் கடிதம் எழுதுவதில் எவ்வளவு தூரம் கருத்துச் செலுத்தினர் என்பது புலனுகும்!

அவர் அமெரிக்காவில் பல விஞ்ஞானிகளையும், பொறியியல் வல்லுநர்களையும், தொழில் நிலைய உரிமையாளர்களையும் நேரில் சந்தித்துப் பேசினர். பதினுயிரம் டாலர்கள் பெறுமானமுள்ள இயந்திரங்களை அவ்வப்போது வாங்கிச் சேகரித்துவைத்துப் பாதுகாப்பாகக் கோவைக்கு அனுப்பினர். 1940-ஆம் ஆண்டுக் கடைசியில் கிழக்கு வழியாக இந்தியா வந்தடைந்தார். தொழில் பிரமுகராகப் புறப்பட்ட நாயுடு, பயிற்சிபெற்ற பொறியியல் மேதையாகத் தாயகம் திரும்பினர். கொச்சித் துறைமுகத்தில் அவரது மூட்டை முடிச்சுகளைச் சோதனை போடச் சுங்க இலாகாவுக்கு ஐந்து நாள் பிடித்தது. அவருடைய மூட்டையில் இருந்த கடிதங்களின் எண்ணிக்கை மட்டும் 37,000. இதிலிருந்தே அவருக்கு உலகம் முழுதுமுள்ள அன்புத் தொடர்பை நாம் ஒருவாறு உய்த்துணர்ந்து கொள்ளலாம்.

10. தொழிற்சாலைகள்

மூன்று பண்புகள்

ஜி. டி. நாயுடுவுக்குத் தொழிற்சாலைகளின் மீது பற்று மிகுதி. நாட்டைத் தொழில் வளமாக்க வேண்டும் என்பது அவரது தணியாத ஆசை! ஓயாமல் உழைத்துத் தொழில் இந்தியாவை உருவாக்க வேண்டும் என்பது அவரது கலையாத கனவு! அவர் ஒரு பிறவி விஞ்ஞானி! உயர்ந்த தொழிலதிபர்! திறமையான பொறியியல் மேதை! இந்த மூன்று பண்புகளும் அவரிடம் இயற்கையாக இணைந்து கிடப்பதால்தான் அவர் காலத்தைக் கடந்து சிந்திக்கிறார்; தூரத்தையும் கடந்து தொழிற்பயிற்சி பெறுகிறார். அவர் சுற்றாத நாடில்லை; அறியாத தொழில் இல்லை; கையாளாத கருவி இல்லை. உலகின் எந்த மூலையில் ஒரு தொழிற்கழகம் தோன்றினாலும் அதில் அவர் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படுவார்.

பொறியியல் உறுப்பினர்

ஜி. டி. நாயுடு சென்னை அரசாங்கத்தின் (1) தொழில் வளர்ச்சிக் கழகம் (2) தொழில் நுட்ப அறிவுரைக் கழகம் ஆகியவற்றில் உறுப்பினர் ஆவார். மேலும் கீழ்க்கண்ட சங்கங்களிலும் அவர் உறுப்பினராவார். (3) இந்தியப் பொறியியலார் கழகம். (4) இந்திய இயந்திரக் கருவிகள்

உற்பத்தியாளர் சங்கம். (5) அனைத்திந்திய உற்பத்தியாளர் சங்கம். (6) சிறு தொழிற் கழகம், ஆந்திரா. (7) சிறுதொழிற் கழகம், சென்னை. (8) சிறு கண்டுபிடிப்பாளர் ஊக்குவிப்புச் சங்கம். (9) ஆட்டோமாட்டிவ் இஞ்சினியர் சங்கம், நியூயார்க். (10) மெக்கானிக் இஞ்சினியர் சங்கம், நியூயார்க்.

ஜி. டி. நாயுடு தமது தனித் திறமையால் கோவையில் ஏராளமான தொழிற்சாலைகளைத் தோற்றுவித்துத் திறம்பட நடத்தி வருகிறார். தொழில் அறிவோ அல்லது தொழில் ஆர்வமோ இல்லாத ஒரு பின் தங்கிய நாட்டில் இத்தனை தொழிற்சாலைகளை ஒரு மனிதர் இயக்கி வருவது பாராட்டுக்குரியதே. அவர் மட்டும் மேல் நாட்டில் பிறந்திருந்தால் அவரது திறமைகள் அனைத்தும் சமுதாயத்தின் நலனுக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கும்; அவரது உயர்ந்த எண்ணங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கும்; பட்டம் பதவிகளும் 'நோபல்' பரிசுகளும் அவரை நோக்கி ஓடிவந்திருக்கும். ஆனால் நம் மக்களிடத்தில் தொழில் அறிவே இல்லாததாலும், முன்னேறி வரும் நாட்டில் அவர் சில நூற்றாண்டுகள் முன்கூட்டிப் பிறந்துவிட்டதாலும் அவர் எதிர்பார்த்த அளவுக்கு ஆதரவு கிடைக்கவில்லை. என்றாலும் இளந்தலைமுறையினராவது அவரைப்பற்றித் தெரிந்துகொண்டு, அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றினால் நாடு நலமுறும். இனி ஜி. டி. நாயுடு ஏற்படுத்தியுள்ள தொழிற்சாலைகளைப் பற்றிக் காண்போம்.

மின்சார மோட்டார்த் தொழிற்சாலை—கோவை.

இயந்திர அறிஞரான ஜி. டி. நாயுடு 1939-இல் மின்சார மோட்டார் உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றை 'நேஷனல் எலக்ட்ரிக் ஒர்க்ஸ்' என்ற பெயரில் தொடங்

கிஞர். அதனை அப்பொழுது சென்னை அரசாங்கத் தொழில் ஆலோசகராய் இருந்த சர் **ஜார்ஜ் போக்** என்பவர் திறந்து வைத்தார். அக்காலத்தில் போர் நிலைமை காரணமாக வெளிநாட்டிலிருந்து மின்சார மோட்டார்களை இறக்குமதி செய்வது அரிதாயிருந்தது. மேலும் இந்தியாவில் வேறெங்கும் இம்மோட்டார்கள் செய்யப்படவில்லை. இந்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்பும் நாயுடுவுக்குக் கிடைத்தது. அதனால் இத்தொழிற்சாலையை வெற்றிகரமாகத் தொடங்கி மின்சார மோட்டார்களை உற்பத்தி செய்ய நாயுடுவால் முடிந்தது.

யுனிவர்சல் ரேடியேட்டர்ஸ்—கோவை.

கார்கள், இஞ்சின்கள் முதலியவற்றிற்குத் தேவையான ரேடியேட்டர்கள் இத்தொழிற்சாலையில் தயாரிக்கப்படுகின்றன.

யு. எம். எஸ். வானொலித் தொழிற்சாலை, கோவை.

இத்தொழிற்சாலை 1941-ஆம் ஆண்டு ஜூலைத் திங்களில் முன்னாள் இந்திய நிதிஅமைச்சர் **சர். ஆர். கே. சண்முகம் செட்டியார்** அவர்களால் தொடங்கிவைக்கப்பெற்றது. இங்கு வானொலிப் பெட்டி, வானொலி கிராம், டேப் ரிக்கார்டர் மற்றும் எலெக்ட்ரானிக் பொருள்கள் முதலியன உற்பத்தி செய்யப்படுகின்றன. ஏழை மக்களும் வானொலி உபயோகிப்பதற்காகக் குறைந்த செலவில் 5 வால்வ், 3 பாண்ட், எல்லா அலை, A/C வானொலிப் பெட்டிகள் ரூ. 100 முதல் ரூ. 150-க்குள் கிடைக்கத்தக்க வகையில் இங்கே தயாரிக்கப்படுகின்றன. வானொலிக்குத் தேவையான பாகங்களில் 30 முதல் 35 சதவீதப் பொருள்கள் இங்கேயே உற்பத்தியாகின்றன. மற்ற பாகங்களையும் உற்பத்தி செய்ய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கார்பானிக் பொருள்கள் தொழிற்சாலை—கோவை.

இது கோவைக்கு அருகில் போத்தனூர் என்னும் ஊரில் இருக்கிறது. இங்கு டைப்ரைட்டர் இயந்திரங்களுக்குத் தேவையான கார்பன் தாள், நாடாக்கள் (Ribbons), பேனைக் கார்பன், பென்சில் கார்பன் தாள்கள், இங்க்—பாடுகள் முதலியன பெரும் அளவில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

யு. எம். எஸ். பிளேடுத் தொழிற்சாலை, கோவை.

சிறு அளவில், விலை மலிவான சவர பிளேடுகளை இங்கே தயாரித்து விற்பனைக்கு அனுப்புகிறார்கள்.

டீசல் புராடக்ட்ஸ், கோவை.

கார்களின் டீசல் இஞ்சின்களைப் புதுப்பித்தல், பழுது பார்த்தல், திருத்தி அமைத்தல் முதலிய வேலைகள் இத் தொழிற்சாலையில் நடைபெறுகின்றன. இங்கு நடைபெறும் தொழில் நுட்ப வேலைகளைக் கண்டு ஜெர்மானியரே வியந்திருக்கின்றனர்.

டீ(D) இஞ்சினியரிங் பிரைவேட் லிமிடெட்—கோவை.

டீசல் இஞ்சின்களுக்குத் தேவையான நாசில்கள் (Nozzles), டெலிவரி வால்வுகள், பம்ப்-எலிமெண்ட்ஸ் (Pump-elements) முதலியன இத்தொழிற்சாலையில் தயாரிக்கப்படுகின்றன.

யு. எம். எஸ். ஒர்க்ஸ், கோவை.

கார்களுக்குத் தேவையான பகுதிகள், இயந்திரக் கருவிகள், சிறு சாதனங்கள், பௌண்டரி காஸ்டிங்ஸ் (foundry castings) முதலியன இங்கு உற்பத்தி செய்யப்படுகின்றன.

செட்ரைட் இந்தியா பிரைவேட் லிமிடெட் கோவை

இது ஒரு ஆங்கிலக் கம்பெனியின் தொழில் நுணுக்க உதவியுடன் தொடங்கப் பெற்றிருக்கிறது. இங்கே போக்கு வரத்துக் கம்பெனிகள், திரைப்படக் கொட்டகைகள், புகைவண்டி நிலையங்கள், உணவு விடுதிகள் முதலிய வற்றிற்குத் தேவையான டிக்கெட்டுகள், இரசீதுகள் ஆகிய வற்றைத் தானே அச்சடிக்கும் இயந்திரமும், கணக்குப் போடும் இயந்திரமும் தயாரிக்கப் படுகின்றன. மேலும் இங்கு 16 மில்லி மீட்டர் திரைப்பட புரொஜெக்டர், டயல் காஜ் முதலியவற்றையும் தயாரிக்கத் திட்டமிடப்பட் டிருக்கிறது.

கோபால் கடிகாரத் தொழிற்சாலை, கோவை

ஜி. டி. நாயுடுவால் கண்டுபிடிக்கப் பட்ட நான்கு முகக் கூண்டுக் கடிகாரங்களும் (Tower clock) சுவர்க் கடிகாரங் களும் இத்தொழிற்சாலையில் தயாரிக்கப்படுகின்றன. இங்கே செய்யப்பட்ட கடிகாரங்களில் சில, பொது நிலையங் களுக்கு அன்பளிப்பாகக் கொடுக்கப் பட்டிருக்கின்றன. கோவை நகரசபைக்கு ஜி.டி. நாயுடுவால் பத்தாண்டுகளுக்கு முன் அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்ட ஒரு கடிகாரம் கோவை நகரில் அவிநாசி சாலையும், ஜெயில் சாலையும் சந்திக் கும் இடத்தில் நிறுவப்பட்டிருக்கின்றது. அது, இதுவரை யாதொரு பழுதுமின்றிச் சரியாக ஓடிக்கொண்டிருக்கிறது. மேலும் நாயுடு அவர்கள் சென்னையில் உள்ள பல பொது நிலையங்களுக்கும் அன்பளிப்பாகப் பல கடிகாரங்களை அனுப் பியிருக்கிறார். இததொழிற்சாலையில் பெரும் அளவில் கடி காரங்களை உற்பத்தி செய்ய முயற்சிகள் நடைபெற்று வரு கின்றன.

கோயம்புத்தூர் ஆர்மச்சூர் வைண்டிங் ஒர்க்ஸ்

பலவகையான கன அளவுகளில் செப்புக்கம்பிகள் இங்கே தயாரிக்கப் படுகின்றன. இக்கம்பிகள் டைன மோக்களுக்கு மிகவும் தேவையானவை. செப்புக் கம்பி களுக்கு எனுமல் பூசும் இயந்திரங்களை நிறுவவும் இங்கு ஏற் பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. மேலும் தேனீப் பெட்டிகளுக்கு தேவையான சில சாமான்களும் உருவாக்கப் படுகின்றன.

சத்து மாவுத் தொழிற்சாலை, கோவை

இத்தொழிற்சாலையில் சோளம், கேழ்வரகு முதலிய தானியங்களிலிருந்து சத்துமாவு (Malt products) தயாரிக்கப் படுகிறது. கோவையில் உள்ள அரசாங்க விவசாய இர சாயன அதிகாரி ஒருவர், இங்கு தயாரிக்கப்படும் மாவு மிக வும் உயர்ந்தரகம் உடையதாகவும், சத்து நிறைந்ததாகவும் இருப்பதாகச் சோதனைகளின் மூலம் அறிந்து நற்சான்று இதழ் கொடுத்திருக்கிருர்.

பிற தொழில்கள்

இவற்றுடன் பஸ் பாகங்களைப் பூட்டவும், டயர்களைப் புதிப்பிக்கவும் தனித்தனியே தொழிற் கூடங்கள் இருக்கின் றன. மேலும் வெளிநாட்டிலிருந்து பஸ்களும், தொழிற்சாலை களுக்குத் தேவையான இயந்திரக் கருவிகளை இறக்குமதி செய்து விற்கவும் ஜி. டி. நாயுடு தொழில் நிலையங்களைத் தோற்றுவித்திருக்கிருர். இங்ஙனம் பல தொழில்களின் வளர்ச்சிக்கு நாயுடு தொண்டாற்றி இருக்கிருர். தாமே தொழிற்சாலைகளைத் தோற்றுவித்ததோடு அமையாது, அவற்றைத்தோற்றுவிக்க விரும்புவோர்க்கும் நாயுடு இலவச

மாக தொழில் நுணுக்க ஆலோசனைகள் கூறி வருகிறார். நாட்டில் தொழில் வளர்ச்சி ஏற்பட்டால் ஒழிய வறுமை நீங்காது என்பது அவரது திடமான நம்பிக்கை! ஆகவே நாம் தொழில் முயற்சியில் விரைந்து கருத்துச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்!

11. கல்விப்பணி

கல்வி அறிஞர்

ஜி. டி. நாயுடு ஒரு சிறந்த அறிஞர் மட்டுமல்லர்; பெரிய இலட்சியங்களைக் கொண்ட ஒப்பற்ற கல்வி அறிஞரும் (Educationist) ஆவார். அவருக்குப் பள்ளிப் படிப்பு இல்லாவிட்டாலும், பயிற்சியும் பட்டறிவும் மிகுதி! இயற்கையிலேயே நுண்ணறிவுடைய அவர் கல்வித் தொடர்புடைய பல நூல்களைப் பயின்றிருக்கிறார். கல்வி மகாநாடுகளிலும், ஆலோசனைக் கூட்டங்களிலும் கலந்து கொண்டு உரையாற்றியிருக்கிறார். அவர் தமக்கென ஒரு வழியை வகுத்துக் கொண்டு அந்த நெறியில் தளராமல் கல்விப்பணி புரிந்து வருகிறார். ஏற்படும் எதிர்ப்புக்களை எல்லாம் சமாளித்துக் கொண்டு கல்வி உலகிலே ஒரு மறுமலர்ச்சியைத் தோற்றுவித்து வருகிறார். அவர் தொழிற் கல்லூரிகளை ஏற்படுத்தி தொழில் நுட்ப ஆசிரியராகச் சிறந்த முறையில் தொண்டாற்றி வருகிறார். அவர் கல்விக்காகச் செலவழித்துள்ள நேரமும், செய்துள்ள முயற்சிகளும், நடத்திய போராட்டங்களும், கொடுத்துள்ள நன்கொடைகளும் எழுதினால் ஏட்டிலடங்கா! அந்த அளவிற்குத் தம்மையே அர்ப்பணித்துள்ள அந்தத்தலைவருக்கு மாணவர் உலகம் என்ன கைம்மாறு செய்யப் போகிறது?

ஆர்தர்ஹோப் தொழில் நுணுக்கப்பள்ளி, கோவை

நாட்டைத் தொழில் மயமாக்கப் பொறியியற் கல்லூரிகள் நிறையத் தோன்ற வேண்டும் என்பது அவரது எண்

ணம். வெறும் கலைக் கல்லூரிகள் தோன்றுவதால் வேலையில்லாத் திண்டாட்டமும், வறுமையும்தான் வளர்கின்றன என்பது அவரது துணிபு! ஆனால் அவரது எண்ணத்திற்கேற்பத் தொழில் கல்லூரிகள் நாட்டில் தோன்றவில்லை. ஆகவே, தாமே இரண்டு தொழிற் கல்லூரிகளைத் தொடங்குவது என்ற முடிவுக்கு வந்தார். உடனே அரசாங்கத்திற்குத் தமது விருப்பத்தைத் தெரிவித்தார். அப்பொழுது சென்னை கவர்னராக இருந்த **சர் ஆர்தர்ஹோப்** என்பவர் நாயுடுவின் நண்பர். தொழிற் கல்வி பற்றி நாயுடுவின் எண்ணங்களை முழு அளவில் ஆதரித்தவர். ஆகவே அவர் அரசாங்கத்தால் இயன்ற எல்லா ஒத்துழைப்புக்களையும் கொடுத்தார். நாயுடுவைப் பாராட்டி வாழ்த்தினார். அதன் விளைவாக நாயுடு பெரும் பொருட் செலவில் 1945-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்களில் கோவையில் ஒரு தொழில் நுணுக்கப் பள்ளியைத் தோற்றுவித்தார். கவர்னர் தமக்குக்காட்டிய ஆதரவுக்கு நன்றி தெரிவிக்கும் முகத்தான் நாயுடு அந்தப்பள்ளிக்கு "**ஆர்தர்ஹோப் பாலிடெக்னிக்**" என்று பெயரிட்டார். அங்கு மோட்டார், வானொலி ஆகிய இரு தொழில்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது. தொழிற் பாடங்களைக் கற்பிக்கத் தக்க திறமை வாய்ந்த ஆசிரியர்கள் அந்நாளில் கிடைப்பது அரிதாக இருந்தமையின், அரசாங்கத்தார் விருப்பப்படி நாயுடுவே அப்பள்ளியின் கௌரவ இயக்குநராகவும், முதல்வராகவும் பொறுப்பேற்று ஆசிரியப் பணியும் நிர்வாகப் பணியும் புரிந்தார்.

ஆர்தர்ஹோப் பொறியியற் கல்லூரி, கோவை

தொழில் நுணுக்கப் பள்ளி ஏற்படுத்தியதோடு நாயுடுவின் மனம் அமைதியடையவில்லை. அரசாங்கத்தின் ஆதரவு கிடைக்கும்போதே அதைப் பயன்படுத்திக் கொண்டு பெரிய அளவில் ஒரு பொறியியற் கல்லூரியை நிறுவ விரும்பினார்.

அதற்கான ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினார். தாம் வெளிநாட்டிலிருந்து வாங்கி வந்த விலையுயர்ந்த இயந்திரங்கள், சொந்தமாகக் கண்டுபிடித்த கருவிகள் முதலியவற்றோடு, பல இலட்சம் ரூபாய் பெறுமானமுள்ள கட்டிடங்களும், நன்கொடைகளும் கொடுக்கத் தயாரானார். அரசாங்கமும் அவரை ஊக்குவித்தது. உடனே அதே 1945-ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 9ஆம் நாள் அவர் "**ஆர்தர்ஹோப் பொறியியற் கல்லூரி**"யைத் தொடங்கினார். பின் அதன் முழுப் பொறுப்பையும் அரசாங்கத்திடமே ஒப்படைத்தார்.

கல்விப் புரட்சி

ஜி. டி. நாயுடு ஒரு விந்தையான மனிதர்! அவருடைய மூளை எப்பொழுதும் புரட்சிகரமான திட்டங்களையே தீட்டிக்கொண்டிருக்கும். காலம் வீணாவதை அவர் மனம் ஒருபோதும் அனுமதிக்காது. அதிலும் பொறியியற் கல்லூரியில் காலம் வீணாகலாமா? நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு வித்தூன்றத் துடிக்கும் இளம் மாணவர்களின் காலமும் முயற்சியும் வீணாவதை அவர் வெறுத்தார். தொழில் நுணுக்கப் பள்ளியில் படித்துப் பட்டம் பெற மூன்றாண்டுகள் மிகுதி என்பது அவரது முடிவான எண்ணம். ஆகவே அவர் அப்பள்ளியின் இயக்குநராக இருந்தபொழுது படிப்புக்காலத்தை இரண்டு ஆண்டுகளாகச் சுருக்கினார். பிறகு நிர்வாகம் மாறியதும் அது முன்போல் மூன்றாண்டாக்கப் பட்டது. இதை அவர் விரும்பவில்லை. இன்னும் சொல்லப்போனால் இரண்டாண்டுக் காலமே மிகுதி என்பது அவரது கருத்து. எனவே நாட்டில் ஒரு கல்விப் புரட்சியை ஏற்படுத்த நினைத்து "**ஆறுவாரப் பயிற்சி வகுப்பைத்**" தொடங்கினார்.

கோவையில் உள்ள நாயுடுவின் அலுவலகக் கட்டிடத்திற்குப் பெயர் " **கோபால்பாக்** " என்பதாகும். இளம் வயதில் தந்தைக்குத் தொல்லை கொடுத்த நாயுடு. இப்பொழுது தமது முக்கியமான அலுவலகக் கட்டிடத்திற்குத் தம் தந்தையின் பெயரைக் கொடுத்திருக்கிறார். அந்தக் " கோபால்பாக் " கட்டிடத்தில் 1948-ஆம் ஆண்டு பொறியியல் மாணவர்களுக்கான ஆறுவாரப் பயிற்சி வகுப்பை ஜி. டி. நாயுடு ஆரம்பித்தார். முதலில் அது மூன்று வாரமாக இருந்தது; பின்பு ஆறு வாரமாக உயர்த்தப்பட்டது. அங்கே கற்றுத்தரப்படும் பாடங்களும், மாணவர்கள் வெற்றிபெற்று வெளியேறும் விதங்களும் நம்மை வியப்பில் ஆழ்த்தும். இந்தியா முழுவதும் உள்ள தொழிற் கல்லூரிகளால் மூன்று முதல் நான்காண்டுக் காலம் வரை நடத்தப்படும் பொறியியற் பாடங்கள் எல்லாம், இங்கே நாயுடுவால் ஆறே வாரத்தில் அருமையாகக் கற்பிக்கப்படுகின்றன. மற்ற இடங்களில் ஏட்டுப் படிப்புக்கே (Theory) பல ஆண்டுகள் செலவழிக்கப்படுகின்றன; ஆனால் இங்கோ ஏட்டுப் படிப்பில் கவனம் செலுத்துவதில்லை. எல்லாம் **நேரடிப்பயிற்சிதான்!** (Practical) மாணவர்கள் இங்கே இயந்திரங்களுக்கு நடுவில்தான் உலவ வேண்டும். ஒவ்வொரு நாளும் காலை 7 மணிக்கே வகுப்புத் துவங்கிவிடும், இரவு நேரங்களிலும் பயிற்சி நடைபெறும்.

மோட்டார், வானொலி, கடிகாரம், பாக்டீரியாலஜி (Bacteriology) முதலிய துறைகளில் இங்கே ஆறு வார காலத்திற்குப் பயிற்சிகள் (Refresher course) அளிக்கப்படுகின்றன. நல்ல அனுபவம் படைத்த பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், தொழில் வல்லுநர்கள் ஆகியோர் ஆசிரியர்களாக அமர்ந்து பணியாற்றுகின்றனர்; நாயுடுவுக்கு தோளோடு தோள் நின்று துணை புரிகின்றனர். ஒவ்வொரு நாளும் நாயுடுவும் வகுப்புக்கள் நடத்துகிறார். இந்தப்

பயிற்சி வகுப்புக்கள் பெரும்பாலும் கோடை விடுமுறையில் நடைபெறும். ஏப்ரல் மத்தியில் துவங்கி, மே மாதத்தில் முடிவடையும். இதில் சேர்க்கப்படும் மாணவர்கள் பெரும் பாலோர் நாட்டின் பல பகுதிகளில் உள்ள பொறியியற் கல்லூரியில் படிப்பவர்களாகவே இருப்பார்கள். அரசாங்கத்தின் பொறியியல் துறையில் வேலை பார்க்கும் அதிகாரிகளும் சில சமயங்களில் இங்கு பயிற்சி பெறுவதுண்டு. பள்ளி இறுதி வகுப்பை முடித்த (S. S. L. C.) சில நுண்ணறிவு படைத்த மாணவர்களும் திறமையைப் பொறுத்துச் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். மாணவிகளுக்கும் இங்கே இடம் உண்டு.

சென்னை, பம்பாய், வங்காளம், பஞ்சாப், மத்தியப் பிரதேசம், ஆந்திரா, கேரளம், ஓரிசா முதலிய பல மாநிலங்களிலிருந்து மாணவர்கள் இங்கே பயிற்சி பெற வருகிறார்கள். ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான மனுக்கள் வருகின்றன. அவற்றிலிருந்து ஒவ்வொரு முறையும் சுமார் 200 மாணவர்கள் பயிற்சிக்குத் தேர்ந்தெடுக்கப் படுகின்றனர். பயிற்சி முடிந்ததும் தேர்வு நடைபெறும். தேர்வில் வெற்றி பெறுபவர்களுக்கு நற்சான்றிதழ்களும், முதன்மை பெறுபவர்களுக்குப் பரிசுகளும் வழங்கப்படுகின்றன. ஆண்டுக்கு ஒரு முறையோ அல்லது இரண்டு, மூன்று முறைகளோ நாயுடுவின் ஒய்வு நிலைமைக்கேற்ப இவ்வகுப்புக்கள் நடத்தப் பெறுகின்றன. 1951 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் ஆருவது பயிற்சி வகுப்பு முடிவடைந்தது. அதைக்கொண்டாட 9—6—1951-இல், நம் நாட்டின் மாபெரும் விஞ்ஞானியான **சர். சி. வி. இராமன்** அவர்களின் தலைமையில் பரிசளிப்பு விழா ஏற்பாடு செய்யப்பெற்றது. அன்று திரு. இராமன் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு கல்வி உலகத்திற்கு மிகவும் தேவையானதாகும். அச் சொற்பொழிவின் ஒரு பகுதியைக் கீழே காணலாம்.

" சுருங்கச் சொன்னால் பாடங்களைவிட அவற்றால் விளையும் பயன்தான் முக்கியம்! சுருங்கிய காலத்தில் ஆழ்ந்து பயின்று, நிறையக் கற்க வேண்டும் என்று கூறும் ஜி. டி. நாயுடுவின் கொள்கையை நான் மனமார ஆதரிக்கிறேன்... மாணவர்களுக்கு நேரடிப் பயிற்சி (Practical) மிக மிகத் தேவை. அம்முறையில்தான் எதையும் சீராகக் கற்றுக் கொள்ள முடியும். உதாரணமாக நீச்சலைப்பற்றி எத்தனை நூல்கள் படித்தாலும் நீச்சல் வராது. நீருக்குள் குதித்துப் பயிற்சி பெற்றால்தான் அது கைகூடும். அதைப் போலத் தான் மோட்டார், வானொலி முதலிய பொறியியற் கல்விகளும்! இயந்திரங்களைப் பற்றி மிக நன்றாக அறிந்து அவற்றோடு எல்லா நேரமும் போராடிக் கொண்டிருக்கும் என் நண்பர் ஜி. டி. நாயுடுதான் உண்மையான பொறியியல் ஆசிரியர்! அவருடைய கொள்கைதான் நடைமுறைக் கேற்றது!...காலப் போக்கில் அவருடைய கல்விக் கொள்கைகளை மக்கள் ஒப்புக் கொள்வர். அவர் சொல்லுகின்ற நேரடிப் பயிற்சி முறை என்பது யாராலும் புறக்கணிக்கப்பட முடியாதது. ஆனால் நம் நாட்டில் இன்று பெரிதும் காணப் படுவது ஏட்டுக்கல்விதான்! அது பயனற்றது என்று நாயுடு அவர்கள் கூறுகின்ற பொழுது, நான் ஏற்றுக்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. ஒருவிஞ்ஞானி என்ற முறையிலும் பல்கலைக் கழகத்தில் படித்தவன் என்ற முறையிலும் கூறு கிறேன்...நேரடிப் பயிற்சிதான் முதலில் தேவை; அதற் குப் பின்னர்தான் ஏட்டுக்கல்வி" என்று அழகுறப் பேசினார் திரு. சர். சி. வி. இராமன்.

மாணவர் ஒழுங்குமுறை

ஜி. டி. நாயுடு மாணவர்களிடம் எந்த அளவிற்கு அறிவு வளர்ச்சியை விரும்புகிறாரோ, அதே அளவிற்குக் கட்

டுப்பாட்டையும் ஒழுக்கத்தையும் எதிர்பார்க்கிருர். அவர் விதிக்கும் சட்ட திட்டங்களைப் புறக்கணிக்கும் மாணவர்களும், கட்டுப்பாட்டைக் குலைக்கும் வேலையாட்களும் அவரது நிறுவனங்களில் ஒரு நாள்கூட நிலைத்திருக்க முடியாது. கல்வி பயிலும்பொழுது மாணவர்களின் கவனம் வேறு எதிலும் திரும்பக்கூடாது என்பதுஅவரது கண்டிப்பான ஆணை. உணவு விடுதியில் தங்கியுள்ள மாணவர்கள் ஊர்சுற்றவோ திரைப்படம் பார்க்கவோ, அல்லது அரசியல் சொற்பொழிவுகளைக் கேட்கவோ செல்லக்கூடாது. மீறிச்சென்ருல் அடுத்த நிமிடமே கல்வி நிலையத்தைவிட்டு விலக்கப் படுவார்கள்.

வாரத்திற்கு ஒரு நாள் அவரது கல்வி நிலையத்திற்கு விடுமுறையாகும். அந்த நாளிலும்கூட மாணவர்கள் கல்வியோடு தொடர்புடைய முறையில்தான் நேரத்தைச் செலவழிக்க வேண்டும். ஆட்ட பாட்டங்களிலும், ஆடம்பரங்களிலும் மாணவர்கள் ஈடுபடக்கூடாது. வாராந்திர விடுமுறையைத்தவிர மற்ற நாட்களில் மாணவர்கள் கல்வி நிலையத்திற்கு வந்தே தீரவேண்டும். எக்காரணத்தை முன்னிட்டும் விதிவிலக்குக் கிடையாது. மாணவர்கள் ஆபாசமான புத்தகங்களையும், நாவல்களையும், பத்திரிகைகளையும் படிக்கக்கூடாது. மீறி யாராவது படித்தால் கடுந்தண்டனைக்கு ஆளாவர். உணவு விடுதியில் தங்கியிருப்பவர்கள் தங்களது அறைகளையும், சுற்றுப்புறங்களையும் தூய்மையாக வைத்திருக்க வேண்டும். தவறினல் அன்று முழுவதும் உணவு விடுதியை அவர்கள் சுத்தம்செய்ய நேரிடும். மேலும் உணவு உண்ணும்பொழுது இலையில் ஒரு பருக்கைக்கூட யாரும் மீதம் வைக்கக்கூடாது. மீறியாராவது மீதம்வைத்தால் ஒரு நாள் முழுதும் சமையல் செய்தாக வேண்டும். குறிப்பிட்ட நாளில் தண்டனைகளை நிறைவேற்ருதவர்களுக்கு அடுத்த நாள் அது இரட்டிப்பாக்கப்படும். அதற்கும் பலன் இல்லையானல் அவர்கள் பள்ளியை விட்டு விலக்கப்

படுவார்கள். உணவு விடுதியிலுள்ள மாணவர்களின் நிறை யும் (Weight) வேலையாட்களின் நிறையும் வாரந்தோறும் சோதிக்கப்பெறும். **எந்த மாணவனுக்காவது காரணமில் லாமல் (நோய்) 5 பவுண்டு நிறை ஒரு வாரத்தில் குறைந்திருக்கு மானல் அவனும், எந்த வேலையாளுக்காவது ஒரு வாரத்தில் 5 பவுண்டு நிறை கூடியிருக்குமானல் அவரும் விடுதியை விட்டு உடனே விலக்கப்படுவர்.**

இங்ஙனம் கடுமையான விதிமுறைகளை ஏற்படுத்தி மாணவர்களின் ஒழுக்கத்தைப் பேணும் ஜி. டி. நாயுடுவைப் பாராட்டி *9—6—1951*இல் நடந்த பரிசளிப்பு விழாவில் சர் சி. வி. இராமன் பேசினர்..." அருமை மாணவர்களே! நாயுடு அவர்கள் உங்களிடத்தில் கட்டுப்பாட்டையும், ஒழுக்கத்தை யும் கண்டிப்பாக அமுல் நடத்துகிருர். தவருன வழிச் செல்பவர்களைக் கடுமையாகத் தண்டிக்கிருர். அதன் மூலம் அவர் உங்களுக்கு ஒரு நல்ல பாடத்தைக் கற்றுக் கொடுக் கிருர். அந்தப் பாடமும் பயிற்சியும் உங்களுக்கு இந்த ஆண்டு மட்டுமன்று; வாழ்நாள் முழுவதுமே பயன்படும். அது, இன்று நாங்கள் கையெழுத்திட்டு உங்களுக்குத் தரு கின்ற பட்டத்தையும், நற்சான்றிதழையும்விடப் பேராற் றலும், பெருமதிப்பும் வாய்ந்ததாகும்...மனிதப் புலியாகிய இந்த நாயுடுவின் கொடுமை நிறைந்த குகைக்குள் சில வார காலம் பொறுமையோடு தங்கியிருந்து, சோதனையில் வெற்றி கண்ட உங்களை நான் பெரிதும் போற்றுகிறேன். அவர் உங்களிடத்தில் எவ்வளவு அன்பாக இருக்கிருர் என்பது அவர் உங்களைப் பவுண்டு குறையாமல் பார்த்துக் கொள் வதிலிருந்தே தெரியவில்லையா? அவர் உங்களது பொருள் களை எவ்வளவு எச்சரிக்கையாகக் கண்காணிக்கிருர் என் பது உங்களது உணவு விடுதி வேலையாட்களின் நிறையைச் சோதிப்பதின் மூலம் தெரியவில்லையா? அவரை ஏமாற்ற

யாராலும் முடியாது. அவர் ஒரு ஆண் சிங்கம்! அவரைத் தவிர வேறு யாரும் மாணவர்களின் ஒழுக்கத்திலும், கட்டுப்பாட்டிலும் கவனம் செலுத்தி, விதி முறைகளைக்கண்டிப்பாக அமுல் நடத்துவதாக எனக்குத் தெரியவில்லை. ஆகவே நீங்கள் அவரிடம் பயிற்சி பெற்றதன் மூலம் யாருமே அடையாத இலாபத்தை அடைந்திருக்கிறீர்கள். அவருடைய உயர்ந்த பண்பு, உறுதியான உள்ளம், அஞ்சாத தன்மை, அசைக்கமுடியாத குறிக்கோள் ஆகியவற்றை நீங்களும் அடையவேண்டும் என்பதே எனது தாழ்மையான ஆசை" என்றார்.

கல்விக் கொள்கைகள் :

கல்வியைப்பொறுத்தவரை ஜி. டி. நாயுடு தனக்கெனச் சில அசைக்கமுடியாத கருத்துக்களையும் கொள்கைகளையும் கொண்டிருக்கிறார். அவையாவன..."பாடத் திட்டத்தில் மாணவர்களுக்குத் தேவையற்ற பகுதிகள் எவ்வளவோ கலந்திருக்கின்றன. அவற்றை நீக்கிவிட்டுப் பாடங்களைச் சுருக்கமாகவும், இனிமையாகவும் அமைக்க வேண்டும். ஏட்டுப் படிப்பை எடுத்துவிட வேண்டும். எல்லாம் நேரடிப் பயிற்சியாகவே இருக்க வேண்டும். தொழிற் கல்விதான் தேவை! அதுதான் வேலையில்லாத் திண்டாத்தைப்போக்குவதோடு நாட்டையும் தொழில் வளப்படுத்தும். ஒவ்வொரு படிப்புக்கும் தேவையான காலத்தை ஆண்டுக்கணக்கிலிருந்து, மாதக்கணக்கிற்குக் குறைத்துவிட வேண்டும். கல்வித்துறையில் திரைப்படத்தைப் பெருமளவு பயன்படுத்தலாம். வாரத்திற்கு ஒரு நாள் வீதம் ஆண்டுக்கு 52 நாள் தான் கல்வி நிலையங்களுக்கு விடுமுறை தரப்பட வேண்டும். இன்னும் சொன்னால் 52 நாட்களே மிகுதியாகும்! மாணவர்களுக்கு விடுமுறை தேவையற்றது. காலையிலும், மாலை

யிலும், இரவிலும் வகுப்புக்கள் நடைபெற வேண்டும். இடையிடையே ஓய்வு தரப்பட வேண்டும். மாணவர்கள் கட்டாய உணவு விடுதியிலேயே தங்க வேண்டும். அவர்களுக்கு ஏற்படும் செலவைக் கல்வி நிலையத்தில் வேலை பார்ப்பதன் மூலம் சம்பாதித்துக் கொள்ளலாம். களியாட்டங்களிலும் வீண் பொழுது போக்குகளிலும் அவர்கள் கவனம் திரும்பாதபடி வேலை வாங்க வேண்டும். அப்பொழுது அவர்களிடத்தில் கட்டுப்பாடும், பொறுப்புணர்ச்சியும் தானே தோன்றும்; ஒத்துழையாமை இயக்கங்கள் ஓடி மறையும். மேலும், கல்விநிலையங்களில் ஆண்டுதோறும் கல்விக் கண்காட்சிகள் நடத்தவேண்டும். அவற்றை நடத்துவதில் மாணவர்கள் முக்கிய பங்கு கொள்ளவேண்டும்.

கல்விக்கூடங்களில் குறைந்த அளவு ஆசிரியர்களே நியமிக்கப்பட வேண்டும். அவர்கள் நல்ல திறமைசாலிகளாக இருக்கவேண்டும். அவர்களுடைய வேலை மாணவர்களுக்கு வழிகாட்டுவதே, ஒழியச் சொற்பொழிவுக்கு வேலையில்லை. கலைக்கல்லூரிகள் துவங்குவதை நிறுத்திக் கொண்டு, தொழிற் கல்லூரிகளையும், பல்கலைக் கழகங்களையும் அரசாங்கம் அமைக்க வேண்டும். அவை மாணவர்களுக்கு வாழ்க்கைப்பயிற்சி அளிக்குமே அல்லாமல் அவர்களைச்சோம்பேறிகளாக மாற்றா. அங்கே ஏட்டுக்கல்விக்கு முக்கியத்துவமில்லாததால், மாணவர்களின் உடலும் மனமும் கெடா. நீண்ட நேரம் அவர்கள் கண்விழித்துப் படிக்கவோ, மனப்பாடம் செய்யவோ ஒன்றும் இல்லை. வாழ்க்கையும் கல்வியும் ஒன்றாக இணைவதால் கடமையும் பொறுப்புணர்ச்சியும் வளரும்.''

இங்ஙனம் உயர்ந்த கல்விக் கொள்கைகளை உடைய ஜி. டி. நாயுடு திரைப்படத்தைக் கல்விக்குப் பயன் படுத்துவதைப் பெரிதும் ஆதரிக்கிறார். ஒரு முறை இவர் தமது

"ஆறுவாரப் பயிற்சி வகுப்பை" அப்படியே கட்டம் கட்டமாகத் திரைப்படமாக்க விரும்பினார். திரைப்படமாக்கி உலகம் முழுதும் அனுப்ப எண்ணினார். ஆனால் அந்தப் பயிற்சி முறையைப் படமெடுக்க ஐந்து இலட்சம் ரூபாய் செலவாகும் என்று கணக்கிடப் பட்டது. நாயுடு, செலவைப்பற்றிக் கவலைப்படவில்லை. ஆனால் தேவையான கச்சா பிலிம் கிடைக்காததால் அத்திட்டம் கைவிடப்பட்டது.

12. விவசாய விந்தைகள்

ஜி. டி. நாயுடு இயந்திரங்களுக்கு இடையே உழன்று கொண்டிருந்தாலும், அவருக்கு இளகிய இதயமுண்டு. ஒப்பற்ற தொழில் வளர்ச்சியிலேயே அவருடைய உள்ளமெலாம் ஈடுபட்டிருந்தாலும், நம் நாடு ஒரு விவசாய நாடு என்பதை அவர் மறக்கவில்லை. பல்லூழிக்காலமாக நாம் நம்பியிருந்த நிலத்தையும் தோப்பையும் அவர் புறக்கணிக்கவில்லை. மாருக விவசாய முறைகளை அவர் திருத்தி அமைக்க விரும்புகிருர். சிறந்த கருவிகளைக் கையாண்டு விளைவைப் பெருக்கவேண்டும் என்று கூறுகிருர். விஞ்ஞான ஆராய்ச்சிகள் மேற்கொண்டு விவசாயத்தைப் பலனுள்ள தாக்க வேண்டும் என்று வாதாடுகிருர். புதிய முறைகளைக் கையாள்வதன் மூலம்தான் நாட்டில் உணவுப் பொருளை பெருக்கி, வறுமையைப்போக்க முடியும் என்று திட்ட வட்டமாக எடுத்துரைக்கிருர்.

ஸ்டாக்ஹோமில் 1950-ஆம் ஆண்டில் நடந்த அனைத்துலக விவசாய மாநாட்டில் அவர் கலந்து கொண்டு அரிய சொற்பொழிவாற்றினுர். கோவையிலுள்ள விவசாயக் கல்லூரியின் வளர்ச்சிக் குழுவில் உறுப்பினராக உள்ள அவர், ஒரு முறை அக்குழு கூடிய போது, சில விவசாய விந்தைகளை எடுத்துக் கூறினுர். பொறியியல் நிபுணரான இவருக்கு விவசாயத்தைப்பற்றி என்ன தெரியும் என்று மற்றவர்கள் நினைத்தனர். ஆனுல் இவர் அன்று சொல்லியதை

எல்லாம் சோதனைகளின் மூலம் நடைமுறையில் செய்து காட்டினார். அதன் மூலம் உணவுப் பொருள் உற்பத்திக்குப் புதுவழி உண்டாக்கினார். அவருடைய கருணை உள்ளமும், விவசாய அறிவும், உறுதியான கொள்கைகளும்தான் அவர் எண்ணற்ற விந்தைகளை விவசாயத்துறையில் செய்ய அடிப்படைக் காரணமாயின!

விவசாயப் பண்ணை

ஜி. டி. நாயுடு விவசாய ஆராய்ச்சிகளைமேற்கொள்வதற்காகத் தனியே ஒரு "**விவசாயப் பண்ணை**" அமைத்திருக்கிறார். அது கோவையிலிருந்து 7 மைல் தொலைவில் உள்ள போத்தனூர் என்னும் ஊரில் இருக்கிறது. அந்தப்பண்ணை வியன்பெரும் 40 ஏக்கர் நிலத்தில் அழகுற அமைந்திருக்கிறது. அங்கே இல்லாத மரம் செடி கொடிகளோ, தாவர வகைகளோ இல்லை என்றே சொல்லலாம். அங்குள்ள ஒவ்வொரு செடியும் ஒரு கதை பேசும். அந்த அளவுக்கு நாயுடு பெரும் பொருள் செலவு செய்து அப்பண்ணையை உருவாக்கியிருக்கிறார். அங்கே அவர் மேற்கொண்ட ஆராய்ச்சிகளும், செய்துள்ள விந்தைகளும் ஏராளம்! அவர் பல சோதனைகளில் வெற்றியும். சில சோதனைகளில் தோல்வியும் கண்டிருக்கிறார். 1941-ஆம் ஆண்டு முதல் நாயுடு அங்கு சோதனைகள் நடத்தி வருகிறார். 6 ஆண்டுகள் இடைவிடாது முயன்ற பின்னர்தான் அவர் ஓரளவுக்கு வெற்றிகள் காணத்தொடங்கினார். பருத்தி, சோளம், கேழ்வரகு. பப்பாளி, ஆரஞ்சு, வாழை, காலிபிளவர் முதலிய பலவற்றையும் அவர் ஆராய்ந்தார். மருந்துப் பொருள்களை ஊசிகளின் மூலம் செடிகளின் தண்டுகளிலும், வேர்களிலும் பழங்களிலும் செலுத்தினார். அதனால் விளைந்த விந்தைகளைப்பற்றிக் கீழே காண்போம்...

பருத்தி

சாதாரணப் பருத்தி 3 அடிமுதல் 4 அடி வரை வளரும் ஆனால் ஜி. டி. நாயுடுவின் பண்ணையிலுள்ள பருத்தி 10 அடி முதல் 15 அடி வரை வளர்ந்து, 5 பங்குக்கும் அதிகமான விளைச்சலைக் கொடுக்கிறது. சாதாரணப் பருத்தி ஆறு மாத காலம்தான் உயிரோடு இருக்கும். ஆனால் இவருடைய பண்ணைப் பருத்தியோ 4 ஆண்டுகள் வரை உயிரோடிருந்து பலன் தருகின்றது. இப்பருத்தியின் ஒவ்வொரு செடியிலும் $2\frac{1}{2}$ அங்குல இழையுள்ள 24 இராத்தல் பருத்திகிடைக்கிறது. இப்பருத்தியின் அதிசயத் தன்மைகளைப்பார்த்து மயங்காதவர் யாருமிலர். இச்செடியின் விதைகளை மறுபடியும் விதைக்கும் போது நான்கு திங்களுக்குள்ளாகக் கன்றுகள் 5 அடிக்குமேல் வளர்கின்றன.

வாழை

வாழை மரங்களுக்கு மருந்து செலுத்தி ஆராய்ந்தபின் கண்ட பலனாவது — ஒரே மரத்தின் பழங்கள் ஒன்பது வகையான சுவைகளை உடையனவாய் இருந்தன. ஆனால் பழங்களின் அளவிலோ அல்லது விளைச்சலிலோ கூடுதல் காணப்படவில்லை.

துவரை

சாதாரணத் துவரைச் செடி 5 அல்லது 6 அடி உடையதாய் இருக்கும். 8 அவுன்சு தானியம் கொடுக்கும்; 9 மாதங்கள் வரை உயிரோடு இருக்கும். ஆனால் ஊசிபோடப் பட்ட செடிகள் 12 அடிவரை வளர்ந்து, 60 அவுன்சு வீதம் விளைச்சல் கொடுத்து, 4 ஆண்டுகள் வரை உயிரோடிருக்கின் கிறன. அச்செடிகள் நோயால் தாக்கப்பட்டால் கூட

ஓராண்டுக் காலம் வரை உயிரோடிருந்து பலன் கொடுக்கின்றன.

பப்பாளி

ஊசி போடப்பட்ட பப்பாளி மரங்கள் ஏராளமான அளவில் பழங்களை விளைவிக்கின்றன. ஒவ்வொரு மரத்திலும் நூற்றுக்கணக்கான காய்கள் பல்வேறு வடிவங்களில் காய்க்கின்றன. பலாப்பழம், மாம்பழம் போன்ற உருவங்களில் எல்லாம் பழுக்கின்றன. ஒரே கிளையில் தோன்றுகின்ற பழங்கள் பல்வேறு வடிவங்களைப் பெற்றிருப்பதுஒரு பெரிய விந்தைதான்! பழங்கள் மிகவும் இனிமையாக இருக்கின்றன. சாதாரண மரங்கள் உச்சியில் காய் காய்க்கும். ஆனல் ஊசி போடப்பட்ட மரங்களோ தரைமட்டத்திலிருந்து உச்சிவரை ஒரே காய்மயமாக விளங்குகின்றன. இப்பழங்கள் ஜீரணசக்தியை மிகுதியாகக் கொடுக்கின்றன. சாதாரண மரங்களைவிட அதிக ஆண்டுகள் இவைஉயிரோடிருந்த போதிலும், மூன்ருண்டுகளுக்குப்பிறகு விளைச்சல் குறைகிறது.

ஆரஞ்சு

ஆரஞ்சுப் பழத்தின் விளைச்சலைப் பொறுத்தவரை நாயுடுவுக்கு வெற்றி கிடைக்கவில்லை. ஆனல் பழத்தின் சுவையில் சில மாறுதல்களை உண்டாக்கியிருக்கிருர். ஊசி போடப்பட்ட மரத்தின் பழங்களை இனிப்பிலிருந்து கசப்பிற்கும், கசப்பிலிருந்து இனிப்பிற்கும் சில இரசாயன முறைகளைக் கையாண்டு மாற்றுகிருர். விதைகளில் யாதொரு மாற்றமுமில்லை.

காலிபிளவர்

மருந்து செலுத்தப்பட்ட காலிப்பிளவர் செடிகள் இயற்கைக்கு மாருக 3 முதல் 4 அடிவரை வளர்ந்து இரு மடங்கு பலனைக் கொடுக்கின்றன. ஆனால் அச்செடிகளின் விதைகளை விதைத்தால் பலன் இரு்மடங்கு கிடைக்கவில்லை. சாதாரணச் செடிகளைப் போலத்தான் விளைச்சல் கொடுக்கின்றன.

சோளம்

ஊசி போடப்பட்ட சோளச்செடிகள் 15 அடி உயரம் வளர்கின்றன. ஒவ்வொரு செடியிலும் சுமார் 26 கிளைகள் இருக்கின்றன. 39 கதிர்கள் தோன்றுகின்றன. எல்லாத் தண்டுகளின் மொத்த நீளம் 181 அடி. மறுபடியும் இச் செடியின் விதைகள் விதைக்கப்பட்ட போது எட்டு வாரத்திற்குள்ளாகக் கண்றுகள் 10 அடிக்குமேல் வளர்கின்றன.

இதுதான் உலகம்:

வறுமையால் வாடும் மக்களின் பசியைப்போக்குவதற்கு நாயுடு கண்டுபிடித்துள்ள உண்மைகள் பெரிதும் பயன்படும். அவர் ஒரு முறை தான் கண்டு பிடித்த புதிய பருத்திச் செடிகளின் விதைகளை இலவசமாக வழங்க முன் வந்தார். ஆனல் யாரும் அவற்றை வாங்கிப் பயிரிடத் தயாராயில்லை. எனவே சில நாட்களுக்குப் பிறகு அவர் கீழ்க்கண்டவாறு செய்தித்தாள்களில் ஆங்கிலத்தில் ஒரு விளம்பரம் கொடுத்தார்... "ஐந்து பங்கு அதிகமான விளைச்சலைக் கொடுக்கும் பருத்தி விதைகளும், செடிகளும் விற்பனைக்குத் தயார். ஒரு விதையின் விலை ரூ. 10—0 ஒரு செடியின் விலை ரூ. 1000—0..." இவ்விளம்பரம் வெளி வந்த சில நாட்களுக்குள் ஏராளமான கடிதங்கள் நாயுடு

வுக்கு உலகெங்கிலுமிருந்து வந்து குவிந்தன. சிலர் பணமும் அனுப்பினர். அப்பொழுதுதான் நாயுடுவுக்கு உலகத்தின் மனப்பான்மை புரிந்தது.

பண்ணையும் பாராட்டும்

நாயுடுவின் அதிசயப் பண்ணையைப் பாராத தலைவர்களோ, அல்லது பாராட்டாத விஞ்ஞானிகளோ இல்லை என்றே கூறலாம். கோவைக்கு வரும் உலக யாத்திரிகர்கள் அனைவரும் இந்த அதிசப் பண்ணையைப் பாராமல் செல்வதில்லை. அப்படிப் பார்த்துச் சென்றவர்கள் நாயுடுவுக்கு எழுதியுள்ள பாராட்டுக் கடிதங்களைத் தொகுத்தாலே அது ஒரு மலையாகக் குவியும். என்றாலும் உதாரணத்துக்குச் சிலவற்றைப் பார்ப்போம்.

சா. சி. வி. இராமன் 1948.

"ஜி. டி. நாயுடு இயற்கைப் படைப்பில் புரட்சிகரமான மாற்றங்களைச் செய்திருக்கிறார். அவர் கையாளும் முறைகள் புதுமையானவை. நம் நம்பிக்கையைத் தகர்க்கக் கூடிய இராட்சசச் செடிகளை அவர் உண்டாக்கி இருக்கிறார். அத்தகைய இரு செடிகளான சோளம், பருத்தி ஆகியவற்றின் முன் நான் நிற்கும்போது புகைப்படம் எடுத்திருக்கிறார்கள். செடிகளில் உள்ள இந்த மாபெரும் மாறுதல் அவர் செலுத்திய மருந்தின் பலன்! அவருடைய பசுமையான அறிவும், ஆராய்ச்சியும் மனித இனத்துக்குப் பெரிதும் நன்மை பயக்கும். உணவு வறுமைப்பட்ட நம் நாட்டுக்கு அவர் காட்டியுள்ள வழி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்! அவருடைய முறை உலகெங்கும் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒன்று!"

டாக்டர் ஜானகி; விவசாய ஆராய்ச்சிக் கழகம்; இங்கிலாந்து; *1—1—'49*

"உங்களுடைய புதிய ஆராய்ச்சியைப் போற்றுகிறேன். உங்களது சோதனைகளின் வெற்றியை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். உங்கள் பெயர் மனிதகுல வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படும்..."

எம். இராதாகிருஷ்ணன்; பம்பாய்: *12—6—'48*

"உங்களுடைய விவசாயக் கண்டுபிடிப்புக்களைப்பற்றிப் படித்தேன். ஊசி மருந்து முறை மூலம் எதிர்பாராத விளைவுகளை நீங்கள் ஏற்படுத்தி இருப்பது, "மைதாஸ்" என்னும் மன்னனின் தொட்டதெல்லாம் பொன்னாகும் கதைபோலிருக்கிறது..."

மாதவமேனன்; விவசாய அமைச்சர்; சென்னை: *28—10—'48*

"பருத்திச் செடியில் நீங்கள் செய்துள்ள சாதனை வியப்பிற்குரியது. நீங்கள் "தேசீய மயமாக்கப்பட" வேண்டும். உங்களது அறிவும் ஆராய்ச்சியும் நாம் பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காக்கப் பயன்படவேண்டும்."

13. சித்த வைத்தியர்

விந்தை மனிதர்

ஜி. டி. நாயுடு ஒரு விந்தையான மனிதர்! அவருக்குத் தெரியாத தொழிலே கிடையாது. அவர் இயந்திரங்களோடு பழகுவார். செடி கொடிகளுக்கு ஊசி போடுவார். மூலிகைகளை ஆராய்ந்து மருந்துகள் கண்டுபிடிப்பார். அவர் எப்பொழுதும் உழைத்துக் கொண்டே இருப்பார். அவர் மூளை எதையாவது சிந்தித்துக் கொண்டே இருக்கும். அவர் பல துறை அறிவும் நிரம்பப் பெற்ற ஒரு புலவராவர்!

சித்த வைத்தியம்

ஜி. டி. நாயுடு ஒரு சிறந்த சித்த வைத்தியராவார். அதற்குச் சான்று அவரது சொற்பொழிவுகளே ஆகும். சித்த வைத்தியத்தைப் பற்றியும், மற்றும் நம் நாட்டுப் பழைய மருத்துவ முறைகளைப் பற்றியும் மேற்கு ஜெர்மனியில் உள்ள "ஸ்டாட் கார்ட்" என்னும் நகரில் பிரபல மருத்துவர்கள், தொழிலதிபர்கள் ஆகியோர் நிறைந்திருந்த ஒரு கூட்டத்தில் 1—3—1958-இலும், 19—1—1959-இலும் அவர் அழகான சொற்பொழிவுகள் ஆற்றியிருக்கிறார். அவற்றின் சில பகுதிகளைக் கேளுங்கள்...

"இந்தியாவில் இப்பொழுது மூன்று பழைய மருத்துவ முறைகள் வழக்கிலிருக்கின்றன, அவை சித்த, ஆயுர்வேத, யுனானி முறைகளாகும். அவற்றில் சித்த வைத்தியமே மிகப் பழமை வாய்ந்ததாகும். அது 4000 ஆண்டுகளுக்கும் முற்பட்டது. அது தென்னாட்டில் பெரும் அளவில் மேற் கொள்ளப்பட்டு வந்தது. பிறகு கொஞ்சம் கொஞ்ச

மாக வடநாட்டிற்கும், பின்னர் சீனுவிற்கும், அராபிய நாடு களுக்கும் பரவியது. யுனானி முறையோ பெரும்பாலும் வடநாட்டில் மட்டுமே இங்குமங்கும் பரவியிருந்தது. ஆனுல் இந்த முறை, மற்ற முறைகளைப் போல் விஞ்ஞான ரீதியாக உறுதிப்படுத்தப்படவில்லை. ஒரே நோய்க்குப் பல மருந்து கள், பல விதங்களில், ஒவ்வொரு மருத்துவராலும் செய்யப் படுகின்றன. மற்ற மருத்துவ முறைகள் விஞ்ஞான ரீதியாக முன்னேற்றம் கண்டிருக்கும்போது சித்த வைத்தியம் மட்டும் கடந்த 300 ஆண்டுகளாக யாதொரு முன்னேற்ற மும் காணுமல் இருக்கிறது. எந்த மருந்தும் ஒரே குறிப் பிட்ட முறையில் செய்யப்பட்டால் அல்லது நன்மை தராது. ஆராய்ச்சிகள் மேற்கொண்டு முயன்ருல் நீரிழிவு, ஆஸ்துமா, வெட்டை, புற்றுநோய், காசம், இருதயநோய் முதலியவற்றிற்கு மலிவான விலையில் அருமையான மருந்து கள் சித்த வைத்தியத்தில் கண்டுபிடிக்க முடியும். அத்தகைய ஆராய்ச்சிகளுக்குத் தகுந்த இடம் தென்னிந்தியாவே ஆகும். ஏனென்ருல் அங்குள்ள மலைகள், சமவெளிகள், தட்ப வெப்ப நிலைகள், முதலியன மருந்துச் செடிகளையும், மூலிகைகளையும் வளர்ப்பதற்கும், ஆராய்ச்சிகளைத் தொடர்ந்து நடத்துவதற்கும் பெரிதும் பொருத்தமாக இருக்கின்றன.

சித்த வைத்தியம் மிகவும் எளிமையானதாகும். அது தொன்மை வாய்ந்ததாக இருந்தும்கூட, அதைப்பற்றி உலகிற்குத் தெரியவில்லை. காரணம் சித்த வைத்தியர்கள் அம்முறையைப்பற்றித் தெளிவாக எழுதி வைக்காததும், பிறருக்கு எடுத்துச் சொல்லாததுமே ஆகும், சித்த வைத்தி யத்திற்குத் தேவையான மருந்துகள் எல்லாம் மூலிகைகளில் இருந்தே கிடைக்கின்றன. ஒவ்வொரு மூலிகையின் இலையும் பூவும், காயும், தண்டும், வேரும் ஒவ்வொரு நோய்க்குப் பயன்படுகிறது. உதாரணமாக, வேப்பங்குச்சியை எடுத்துக்

கொள்ளுங்கள். அது பல்லைத் தூய்மை செயது கிருமிகளை போக்கப்பயன்படுகிறது. **வெற்றிலை** ஜீரண சக்தியைக் கொடுக்கிறது. **ஆடாதோடை** ஆஸ்த்மாவை நீக்குகிறது. இங்ஙனம் சிறந்த பயன் தரும் சித்தவைத்தியம் தென்னிந் தியாவில் மட்டும் புகழ் பெற்றிருக்கிறது. நீங்கள் எல்லாம் இந்தியாவிற்கு வரும்போழுது, வடநாட்டோடு திரும்பிவிடா மல், தமிழ் நாட்டுக்கும் வருகை தந்தால் இம்முறையைப் பற்றி நிறையத் தெரிந்துக் கொள்ளலாம். உங்களது அறி வும் ஆராய்ச்சியும் அதற்குப்பயன்படுமேயானுல், அம்முறை மருத்துவ உலகில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்துவது உறுதி!

நான் கோவையில் "**தொழிலாளர் நலச் சங்கம்**" ஒன் றைத் தொடங்கியிருக்கிறேன். அதன் சார்பாக மனித சமு தாயத்திற்குத் தேவையான பல பிரச்னைகளை ஆராய் கிறோம். அவற்றில் ஒன்றுதான் மருத்துவ ஆராய்ச்சி! எனக்கு உறுதுணையாக இருந்து பல மருந்துகளைக் கண்டு பிடிப்பதில் உதவி செய்தவர் **டாக்டர் பி. பி. பி. நாயுடு** என் பவராவார். அவர் உலகம் முழுவதும் சுற்றிப் பல்வேறு வெளிநாட்டு மருத்துவ மனைகளில் பணியாற்றி பரந்த அனு பவம் பெற்றவர். நாங்கள் இப்பொழுது செய்வதைப் போன்ற ஆராய்ச்சிகளை 50 அல்லது 100 ஆண்டுகளுக்கு முன்பு யாரேனும் செய்திருந்தால் இதுவரை எத்தனையோ அரிய மருந்துகளைக் கண்டு பிடித்திருக்கலாம்.

நீரிழிவு

நாங்கள் முதலில் நீரிழிவு வியாதிக்கு மருந்து கண்டு பிடிக்கத் தொடங்கினேம். ஏறத்தாழ 160 மூலிகைகளைப் பரிசோதித்து, அவற்றில் சிலவற்றை ஆபத்தில்லாதவை என்று தேர்ந்தெடுத்து மருந்து செய்தோம். அம்மருந்தை நோயாளிக்குக் கொடுக்கு முன்னர் டாக்டர் பி. பி. பி.

நாயுடு நான், இன்னும் இருவர் ஆகியோர் முதலில் அதனை உட்கொண்டோம். எங்களுக்கு அப்பொழுது யாதொரு வியாதியும் கிடையாது. இருந்தும் மருந்தை உண்டோம். அதனால் எங்களுக்கு எந்தவித ஆபத்தும் ஏற்படவில்லை. மாறாக எங்கள் உடல் நிலை சற்று வளமடைந்தது. பிறகு அம்மருந்தை இரண்டு நோயாளிகளுக்குக் கொடுத்தோம். இருவருக்கும் நோய் குணமாகியது. கொஞ்ச நாட்களுக்குப்பிறகு மற்றும் இரு நோயாளிகளுக்கு அதனைக் கொடுத்தோம்; ஆனால் பலனில்லை. உடனே ஆராய்ச்சியைத் தொடர்ந்தோம். பலனின்மைக்குக்காரணம் என்னவென்று கண்டு பிடித்தோம். அம் மருந்தில் சேர்ந்துள்ள ஒரு முக்கியமான மூலிகை மார்ச்சு, ஏப்ரல், மே தவிர மற்ற மாதங்களில் வளமான மருந்துச் சத்துடையதாக இல்லை என்பது தெரிய வந்தது. குறிப்பாக நவம்பர்த் திங்களில் அம்மூலிகை தனக்குரிய மருந்துச் சக்தியையே இழந்து விடுகிறது. சில குறிப்பிட்ட மண்ணிலும் சந்தனம் போன்ற சில குறிப்பிட்ட மரங்களுக்கு அருகிலும் அம்மூலிகைச் செடி நடப்படும்பொழுது குணத்திலும், அளவிலும் ஏராளமான பலனை அது தருகிறது. அம் மூலிகை நிலத்திலிருந்து பிடுங்கிய 28½ மணி நேரத்திற்குள் மருந்து செய்து முடிக்க வேண்டும். இல்லாவிட்டால் அதன் சத்து மறைந்து விடுகிறது.

இப்படிப் பலமாக நாங்கள் ஆராய்ச்சி செய்ததன் பலனாக அருமையான ஒரு மருந்தை நீரிழிவு வியாதிக்குக் கண்டு பிடித்தோம். அம் மருந்தின் பெயர் "டயா—டயட்டிக் தூள்" (Dia-dietic powder) என்பதாகும். அதை உபயோகித்தால் 6 வாரத்திலிருந்து 6 மாத காலத்திற்குள் நோய் முழுதும் குணமடைந்து விடுகிறது. உலகெங்கும் உள்ள நோயாளிகள் அம்மருந்தால் பெரிதும் நன்மை அடைந்துள்ளனர். சுவிட்சர்லாந்து, இங்கிலாந்து, ஜெர்மனி,

அமெரிக்கா, இந்தியா முதலிய நாடுகளில் அதற்கு நல்ல வர வேற்பு இருக்கிறது.

வெட்டை (Leucorrhea)

முதல் ஆராய்ச்சி வெற்றிகரமாக முடிந்ததும் "வெட்டை" என்னும் வியாதிக்கு மருந்து கண்டு பிடிக்கத் தொடங்கினேம். மூவாயிரத்துக்கு மேற்பட்ட நோயாளி களைப் பரிசோதித்தோம். அவ்வியாதியால் தொல்லைப்படும் உலகப் பெண்களின் புள்ளி விபரம்; ஜப்பான் ஜெர்மனி 40%; அமெரிக்கா இங்கிலாந்து 45%: இந்தியா பிரான்சு 55% சீனு முதலிய கிழக்கு நாடுகள் 50%; முதல் 80%, இவ்வி யாதியை முற்றிலும் குணப்படுத்தும் ஆங்கில மருந்து எது வுமே இல்லை. ஆனல் நாங்கள் ஒரு மருந்தை நீண்ட ஆராய்ச்சிக்குப் பிறகு கண்டு பிடித்தோம். அது நோயை முழுதும் குணப்படுத்துகிறது. அதன் பெயர் "லியூகோ—டையட்டிக் உணவு" (Leuco dietic food) என்பதாகும். அம் மருந்தை உட்கொண்ட 7 நாட்களில் நோய் குணமடை கிறது. ஆனல் இதனை உட்கொள்ளும் பொழுது நோயா ளிக்கு வேறு நோய் எதுவும் இருத்தல் கூடாது. அப்படி இருந்தால் இதை உட்கொள்ளக் கூடாது. மீறி உட்கொண் டால் தீமை பயக்கும். இம் மருந்தை உலகெங்கிலும் உள்ள புகழ் பெற்ற மருத்துவர்கள் பரிசோதித்துப் பாராட்டியிருக் கிறுர்கள்.

பட்டம் பதவிகள்

இங்ஙனம் ஜி. டி. நாயுடு இரண்டு அருமையான மருந்து களை உலகுக்கு அறிமுகப்படுத்திருக்கிறுர். மேலும் பைல்ஸ் (Piles), ருமாட்டிசம், கால் வலி இருமல் முதலியவற்றிற்கும்

தக்க மருந்துகளைக் கண்டுபிடிக்கச்செய்து விளம்பரம் கொடுத்திருக்கிருர். அவர் " தமிழ்நாடு சித்த வைத்தியக் கழகத்தில் " ஒரு உறுப்பினர் ஆவார். அவர் புலமையைப் பாராட்டித் தமிழ் நாடு சித்த வைத்தியர்கள் கோவையில் நடத்திய ஒரு மாநாட்டின் போது அவருக்குச் " சித்த வைத்தியப் பேராசிரியர் " என்னும் பட்டத்தை வழங்கிச் சிறப்பித்தனர்.

14. சொற்பொழிவுகள்

சொலல் வல்லர்

"சொலல் வல்லன் , சோர்விலன் ; அஞ்சான்; அவனை
இகல் வெல்லல் யார்க்கும் அரிது"

என்பது குறள். ஜி. டி. நாயுடு ஒரு சிறந்த சொற்பொழிவாளர் ஆவார். ஆங்கிலத்தில் அவர் அழகாகச் சொற்பொழிவாற்றுவார். மேல்நாடுகளில் — குறிப்பாக அமெரிக்காவிலும் ஜெர்மனியிலும் அவர் ஏராளமான இடங்களில் சொற்பொழிவாற்றியிருக்கிறார். புகழ் பெற்ற விஞ்ஞானிகள், மருத்துவர்கள், தொழிலதிபர்கள், பொறியியல் நிபுணர்கள் ஆகியோர் முன்னிலையில் அவர் அங்கே தமது கருத்துக்களைக் கோவையாக எடுத்துக்கூறி இருக்கிறார். நமது நாட்டிலும் பல்வேறிடங்களில் அவர் ஆணித்தரமாகப் பேசி இருக்கிறார். அவருடைய தொழில் நுட்பப் பேச்சுக்களில் விஞ்ஞானப் புதுமைகள் இருக்கும்; அறிவுரைப் பேச்சுக்களில் உயர்ந்த இலட்சியங்கள் தொனிக்கும். அவர் பல முறை மதுரை, திருச்சி, சென்னை, கோவை, காரைக்குடி, வாணியம்பாடி ஆகிய ஊர்களிலுள்ள கல்லூரி மாணவர் மன்றங்களில் உரையாற்றி இருக்கிறார். அவருடைய சொல்லும் செயலும் ஒன்றுக்கொன்று இணைந்தவை. அவர் எதை நினைக்கிறாரோ அதைச் சொல்லுகிறார். எதைச்

சொல்லுகிருரோ அதைச் செய்கிருர். ஆகவே சொற் பொழிவுகளின் சில பகுதிகளை நாம் அறிந்து கொள்வதன் மூலம் புத்துணர்ச்சி பெற முடியும்.

மதுரையில்

மதுரைக் கல்லூரியின் கணித, விஞ்ஞானக் கழகத்தில் ஜி. டி. நாயுடு 24—2—1953இல் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம்...... "அன்புள்ள மாணவ நண்பர்களே! நீங்கள் இக் கல்லூரியை விட்டு விடைபெற்றுக் கொண்டிருக்கும் நேரத்தில் உங்கள் முன் நான் உரையாற்றுகிறேன். கல் லூரியை விட்டு வெளியேறிய பிறகு நீங்கள் எதைச்செய்ய வேண்டும்? எதைச் செய்யக்கூடாது என்பதைப் பற்றிச் சில அறிவுரைகள் கூற விரும்புகிறேன். அவை உங்களு டைய பேராசிரியர்கள் அடிக்கடி கூறி அலுத்துப் போன வையே ஆகும். நான் கூறும் அறிவுறைகளில் எல்லாம் மிக முக்கியமானது நீங்கள் **திரைப்படம் பார்க்கக்கூடாது** என் பதேயாகும். திரைப்படம்தான் இளம் உள்ளங்களின் எதிரியாகும்! அது உங்களது கண்ணையும் உடலையும் கெடுப்பதோடு மனத்தையும் பாழாக்குகிறது! பாக்டீரியாக் கள் செய்ய முடியாத தீமைகளை எல்லாம் படக்காட்சிகள் செய் கின்றன. அவை உங்கள் சக்திகளை எல்லாம் சிதறடிக்கின் றன. உங்களைக் கோழையாக்குகின்றன. நான் கூறும் இரண்டாவது அறிவுரை புகை பிடிக்கக்கூடாது என்பதா கும். மூன்ருவதாக, நீங்கள் அரசியல் சொற்பொழிவுகளை கேட்கவோ, அல்லது அதில் கலக்கவோ கூடாது...இவை யெல்லாம் நீங்கள் கேட்டவைதான்; என்ருலும் பலரால் பின்பற்றப்படாதவை!

உங்களுக்கு மேலும் ஒன்று சொல்ல விரும்புகிறேன். நீங்கள் எந்ததீயபழக்கத்திற்கும் அடிமையாகி விடாதீர்கள்.

தவறி அடிமைப் பட்டு விட்டால், அதனுல் உங்கள் வாழ் நாள் முழுவதும் பாழாவதோடு, மனித சமுதாயமும் நஞ் சூட்டப்படுகிறது. சாதாரணமாக, 15 வயது முதல் 25 வயதிற்குள்தான் தீய பழக்கங்கள் ஏற்படுகின்றன. அவற்றை இளம் வயதிலேயே மாற்ருவிட்டால் பிறகு எப் பொழுதுமே மாற்ற முடியாது. மாணவப் பருவத்தில் இயற்கையாகக் காணப்படும் ஊக்கமும், தைரியமும் தீய பழக்கத்தை எளிதாக ஒழித்துவிடக் கூடியவை. இளைஞர் கள் பட்டம் பெறும் காலத்தில் அறிவு முதிர்ச்சிஅடைகிருர் கள். அப்பொழுது அவர்களுக்கு நன்மை தீமைகளைப்பகுத் துணரும் ஆற்றல் ஏற்படவேண்டும். பரந்த நோக்கு அமைய வேண்டும். தீயவற்றை நீக்கி நல்லவற்றைக் கடைப்பிடிக்கத் தெரிய வேண்டும். நீங்கள் தேர்தலில் முதல் வகுப்பிலோ அல்லது இரண்டாம் வகுப்பிலோ தேருவிட்டாலும், அல் லது தேர்ச்சியே பெறமுடியாவிட்டாலும் அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. தீய பழக்கங்களை விட்டுவிட் டோம் என்ற நம்பிக்கையோடும், துன்பங்களை எதிர்நோக்கக் கூடிய தைரியத்தோடும், நேர்மைக்காகப் போராடும் உள் ளத்தோடும், ஆழ்ந்து நோக்கிப் பிரச்னைகளை ஆராயும் தன் மையோடும் நீங்கள் இங்கிருந்து வெளியேறுவீர்களானுல் உங்கள் வாழ்நாள் முழுதும் எல்லாத் துறைகளிலும் வாகை சூடுவீர்கள் !

நீங்கள் பெறும் பட்டங்கள் மட்டும் உங்களுக்கு வாழ்க்கையில் எல்லாவற்றையும் தந்துவிடும் என்று எதிர் பார்க்காதீர்கள். நீங்கள் இங்கே முதிர் கலைப்பட்டம் (M. A.) பெற்றிருக்கலாம். ஆனுல் உங்கள் எதிர்கால வாழ்க்கையில் இது ஒரு ஆரம்பப்பாடமே ஆகும் ! கல்லூ ரிக்கு வெளியே நீங்கள் எவ்வளவோ கற்க வேண்டியிருக் கிறது. அந்தக்கல்விக்கு இந்தப் பட்டமும் படிப்பும் முதற் படியாக இருக்கும். வெளியுலக வாழ்க்கை என்பது ஒருமொழி

அந்த மொழியை உணர, இக் கல்லூரிப் படிப்பு உங்களுக்கு எழுத்தாகப் பயன்படும். அந்த மொழியில் நீங்கள் வெற்றி கண்டு உங்கள் வாழ்க்கையை வளமாக்கிக் கொள்வதோடு, உங்களைச் சார்ந்திருப்போர் வாழ்க்கையையும் இன்பமுடையதாக்குங்கள் !

நீங்கள் நிறையக் கற்பதற்கும், உங்களை முன்னேற்றிக் கொள்வதற்கும், வாழ்க்கையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கும் இதுதான் தக்க பருவம்! உலகின் மிகப் பெரிய தலைவர்களது வாழ்க்கை வரலாற்றை நீங்கள் பார்ப்பீர்களானால், அவர்கள் கல்லூரிப் பட்டம் பெற்றிருந்தாலும் பெறாவிட்டாலும், நிறைய உழைத்தவர்களாக, அறிவைத் தேடி ஓடியவர்களாக இருப்பார்கள். அவர்கள் தான் மனித சமுதாயத்திற்கு வழிகாட்டிகளாக அமைகிறார்கள்.

சில நாட்களுக்கு முன்பு இங்கிலாந்தைச் சேர்ந்த பெவின் என்பவர் இந்நாட்டிற்கு வந்திருந்தார். அவர் தான் போர்க்காலத்தில், நம் நாட்டைச் சேர்ந்த மாணவர் சிலருக்கு இங்கிலாந்தில் குறுகிய நாட்களில் தொழில் பயிற்சி அளிப்பதற்கு ஒரு திட்டத்தை வகுத்தவர். அவருடைய வாழ்க்கை வரலாற்றைக் கூறுவதானால் நீண்ட நேரமாகும். அவர் இங்கிலாந்தைச் சேர்ந்த ஒரு பெருங் கட்சியின் தலைவராகவும், நாட்டின் அமைச்சராகவும் இருந்தார். அவர் தம் பள்ளிப் படிப்பை முடித்ததும், தாமே முயன்று, ஓயாமல் உழைத்து முன்னேறினார். ஹென்றி போர்டு, லூயிபாஸ்டர், டீசல், இராமானுஜம் முதலிய பெரியார்களின் வாழ்க்கை வரலாற்று ஏடுகளையும் எடுத்துப் பாருங்கள். அவர்கள் கல்லூரியில் பயிலாவிட்டாலும் அஞ்சா நெஞ்சமும், உறுதியான உள்ளமும் உடையவர்களாக இருந்தார்கள்; முன்னேறினார்கள். சர் சி. வி. இராமன், டாக்டர் இலக்குமணசாமி முதலியார், சர் ஆர். கே. சண்முகம்

செட்டியார், சர் சி. பி. இராமசாமி ஐயர் ஆகியோர் முன்னுக்கு வந்தார்கள் என்றால் அதற்குக் காரணம் அவர்களது இடைவிடாத உழைப்பும், கடமை உணர்ச்சியும், தணியாத ஆர்வமுமே ஆகும். அவர்களைப் பின்பற்றி நீங்களும் முன்னேறி நம் தாயகத்தின் ஒளி படைத்த தலைவர்களாகத் திகழ வேண்டும் என்பதே எனது ஆவல்!

என்னுடைய வாழ்க்கையில் எத்தனையோ நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. அவற்றை எல்லாம் இங்கே கூற நேரமில்லை. இன்றுவரை நான் படித்துள்ள புத்தகங்களின் எண்ணிக்கையைப் பற்றி மட்டும் உங்களுக்குக்கூற விரும்புகிறேன். விஞ்ஞானம், பொறியியல் ஆகிய துறைகளைப் பற்றிய 18,000 புத்தகங்களும், உள நூல் தொடர்புடைய 3000 நூல்களும் எனது நூலக அறையில் இருக்கின்றன. அவற்றை ஆழ்ந்து படித்ததன் மூலம்தான் ஓரளவுக்கு நான் அறிவு பெற்றேன். நீங்கள் கோவைக்கு வருகின்றபொழுது அவற்றை வந்து காணலாம். அதன் மூலம் புதிய உற்சாகம் பெறலாம்...''

ஜி. டி. நாயுடு மதுரையிலுள்ள அமெரிக்கன் கல்லூரி வாணிக மன்றத்தில் (Commerce Union) 23—2—1953இல் பேசிய பேச்சின் சுருக்கம்...''கல்லூரியில் என்ன பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன என்பதைப் பற்றியும் மாணவர்கள் எங்ஙனம் கற்கிறார்கள் என்பதைப் பற்றியும் எனக்குப் பல ஆண்டுக்காலம் ஒன்றுமே தெரியாமல் இருந்தது. இப்பொழுதும் கூட நீங்கள் இங்கே என்னென்ன கற்கிறீர்கள் என்று சரிவரத் தெரியாது. நமது கல்லூரிகளில் படித்த பழைய இளைஞர்கள் இப்பொழுது பெருந்தலைவர்களாகவும், விஞ்ஞானிகளாகவும், நிர்வாகிகளாகவும் விளங்கக் காணுகிறேன். அவர்கள் மற்ற நாட்டுத் தலைவர்களுக்கு இணையாகவும், மேலாகவும் விளங்கக் கண்டு

மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் இப்பொழுது சில சமயங்களில் நான் ஒன்றை உணர்கிறேன். அது, கல்வித்தரம் படிப்படியாகக் குறைந்து வருகிறது என்பதேயாகும். அதற்கு நீங்கள் மட்டும் காரணமல்ல; சூழ்நிலைகளும் காரணமாகும்!

சிறு குழந்தைகளுக்குக் கல்வியறிவூட்டும் சிறந்தபள்ளி இல்லமே ஆகும்; உயர்ந்த ஆசிரியர்கள் பெற்றோரே ஆவர். குழந்தைகள் வளர்கின்றபொழுது அவர்களுக்கு நல்ல புகலிடம் கல்லூரியும், உணவு விடுதிகளுமே ஆகும். பெரும்பாலான மாணவர்களுக்கு வீட்டில் நல்ல பயிற்சி அளிக்கப்படுவதில்லை. அதற்குக் காரணம் பெற்றோர்கள் கல்வியறிவற்றவர்களாக இருப்பதே ஆகும். மாணவர்கள் கல்லூரிக்கு வரும்பொழுது தம் பெற்றோரைவிடத் தாங்கள்தான் சிறந்த அறிவாளிகள் எனவும், குடும்பத் தலைவர்களெனவும் நினைக்கத் துவங்குகிறார்கள். அப்பொழுதுதான் கட்டுப்பாடின்மை (Iudisciplinc) ஏற்படுகிறது. அவர்கள் சுதந்திரமாகத் திரிவதால் சூழ்நிலை மேலும் மோசமடைகிறது.

இளம் உள்ளங்கள் நன்மை தீமைகளை ஆராய்ந்து பாராமல் அப்படியே ஏற்றுக்கொண்டு விடுகின்றன. இன்னும் சொல்லப்போனால் அவர்களுக்கு எப்படி உண்பது? எப்பொழுது உண்பது? எவ்வளவு உண்பது? எதை உண்பது? எப்பொழுது உறங்குவது? எப்படி உடை அணிவ்து? எப்படிக் குளிப்பது? எப்படிப் பிறருடன் பழகுவது? எப்படி வேலைகளைச் செய்வது? என்ற ஆரம்பப் பாடம் கூடத் தெரிவதில்லை. அவர்கள் இதையெல்லாம் நாள் தோறும் செய்கிறார்கள், ஆனால் ஒழுங்கற்ற முறையில்! அவர்கள் கல்லூரிக்கு எதற்காக வந்தார்களோ அதை மறந்து, விளையாட்டிலும், திரைப்படத்திலும், விழாக்களிலும், நாவல்களிலும் நேரத்தை வீணாக்குகிறார்கள்.

அவர்கள் தமது 15-ஆம் வயது முதல் 25-ம் வயது வரையுள்ள 10 ஆண்டுக் காலத்தை எங்ஙனம் கழிக்கிறார்கள் என்பதற்கு ஒரு புள்ளி விபரம் கூறுகிறேன்; கேளுங்கள்...

செலவு செய்த முறை	வருடம்	மாதம்	நாள்
1. உறக்கம்	3	4	5
2 உணவு	—	7	18
3. கண்ணாடிக்குமுன் அழகு பார்த்தல்	—	7	18
4. திரைப்படம், விளையாட்டு, இசை, நாவல், முதலிய வீண் பொழுதுபோக்கு	4	3	4
5. படிப்பு	1	1	15

நீங்கள் இந்தப் பத்தாண்டுக் காலத்தில் படிப்புக்காகச் செலவு செய்யும் 1 வருடம் 1 மாதம் 15 நாட்களிலும் கூட, ஆழ்ந்து கவனமாகப் படிக்கும் நேரம் பாதிக்கும் குறைவாகும். இந்த நிலையை மாற்றி, உணவுக்கும், உறக்கத்திற்கும், பொழுது போக்கிற்கும் செலவழிக்கும் நேரத்தைக் குறைத்துப் படிப்புக்காக அதைப் பயன்படுத்தினால், நீங்கள் கல்லூரியில் சேர்ந்தாற்போல் பலஆண்டுகள் பயிலவேண்டியதில்லை. படிப்புக் காலத்தைக் குறைக்கலாம். அதன் மூலம் நீங்கள் உங்கள் பெற்றோர்க்கும், கல்லூரி நிர்வாகிகட்கும் ஒரு சுமையாக இருப்பதைத் தவிர்க்கலாம்.

வாணிகத்துறை மாணவர்களாகிய நீங்கள்கல்லூரியில் செலவு செய்யும் நேரத்தைப் பற்றி ஒரு முறையாவது கூட்டி வகுத்துப் பார்த்ததுண்டா? உங்கள் தந்தையாரின் மாத வருமானம், அதிலிருந்து நீங்கள் செய்யும் செலவு, அந்தச் செலவில் உங்களது உடை, பூட்சு, பற்பசை, பொரிசு, தலை எண்ணெய், பிளேடு, மருந்து முதலியவற்றிற்குத் தேவையாகும் தொகை ஆகியவற்றைப் பற்றி ஒரு முறையாவது கணக்குப் பார்த்தீர்களா? கல்லூரியை விட்டுப் போனதும்

நீங்கள் இவ்வளவு காலம் செலவு செய்ததற்கு என்ன இலாபம் பெறப் போகிறீர்கள்? வேலையில்லாத் திண்டாட்டத்தைத்தான் காணப் போகிறீர்கள். கல்லூரியில் நீங்கள் உங்களது வாழ்க்கை என்னும் கட்டிடத்திற்கு அடித்தளம் தான் அமைத்திருக்கிறீர்கள். இனிமேல்தான் சுவர் எழுப்பி கூரை வேய்ந்து, சன்னல் அமைத்துக் கட்டிடத்தை முடிக்க வேண்டும். அப்பொழுதுதான் உங்கள் குடும்பத்தோடு வசதியாக வாழலாம். வெளியுலக வாழ்க்கையில் இனிமேல் தான் புகப்போகிறீர்கள். அப்பொழுது நீங்கள் இங்கே கற்ற அறிவைப் பயன்படுத்தி வெற்றி காணவேண்டும்!

வாழ்க்கைக்கு விஞ்ஞானம், கணக்கு, வாணிகம் முதலியன பெரிதும் பயன்படும். இவையெல்லாம் ஒன்றோடொன்று தொடர்புடையன. நான் தொழில் துறையில் இலாபம் பெற்றேன்; அதற்குக் காரணம் எனது தொழிலறிவு மட்டுமன்று; நான் பஞ்சு வாணிகத்தில் பெற்ற அனுபவ அறிவுமே ஆகும். பஞ்சு வாணிகத்தில் நான் பெற்ற நட்டம்தான் தொழில் முறையில் எனக்கு இலாபம் பெற்றுத் தந்தது. நீங்களும் அனுபவத்தின் மூலம்தான் நிறையக் கற்றுக்கொள்ள முடியும். நீங்கள் வேலைக்குச் சேரும் இடத்தில் உங்களது உழைப்பாலும், ஆர்வத்தாலும் நல்ல பெயர் எடுக்க வேண்டும். உங்களை வேலைக்கு வைத்திருப்பவர் தானாக மனம் விரும்பி உங்களையும் தனது வியாபாரத்தில் பங்குதாரராகச் சேர்த்துக் கொள்ளும் விதத்தில் பணியாற்ற வேண்டும்.

உங்களுக்கு ஒரு உதாரணம் கூற விரும்புகிறேன். நான் பஸ் போக்குவரத்துத் தொழிலில் புகுந்தபொழுது எனக்குக் கணக்கு முறைகளைப் பற்றி ஒன்றுமே தெரியாது. ஆனால் மிகக் குறுகிய காலத்தில் அனுபவத்தின் வாயிலாக ஒரு அருமையான கணக்கு முறையைக் கண்டுபிடித்தேன்.

1920-ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை அதே முறையைத் தான் பின்பற்றி வருகிறேன். அந்த முறையையும், அதற்காகப் பயன்படுத்தப்படும் கணக்கு புத்தகங்களையும், இரசீதுகளையும் நீங்கள் வேறு எங்குமே காணமுடியாது: பாடப் புத்தகங்களிலும் பார்க்க முடியாது. அவை வியாபாரத்தை திறமையாகவும், சிக்கனமாகவும் நடத்துவதற்காகக் கண்டு பிடிக்கப்பட்டவை. அதைப்போலவே நீங்களும் பிற்காலத் தேவைக்கேற்பப் புதியன கண்டு புகழடைய வேண்டுமென வாழ்த்துகிறேன்.

திருச்சியில்

புனித சூசையப்பர் கல்லூரி விஞ்ஞானக் கழகத்தில் 14—2—1953இல் ஜி. டி. நாயுடு ஆற்றிய சொற்பொழிவின் ஒரு பகுதி......" கலை, வரலாறு முதலிய பாடங்களில் எனக்குச் சரியான பயிற்சி இல்லாததால் நீங்கள் விரும்பும் அளவுக்கு அழகாகச் சொற்பொழிவாற்ற என்னுல் முடியாது. 1937-ஆம் ஆண்டுக்கு முன் நான் எந்தக் கல்லூரிக்குள்ளும் வேடிக்கை பார்க்கக்கூட நுழைந்தது கிடையாது. 1937 இல் சென்னையில் ஒரு கிறித்தவ மாநாடு நடைபெற்றது. அப்பொழுது நான் அங்கிருந்தேன். ஊர்வலம் மிகப் பெரிதாக இருந்ததால், ஆர்வத்தினுல் உந்தப்பட்டு அந்நிகழ்ச்சிகளைச் சலனப்படம் பிடித்தேன் மற்றவர்கள் எடுத்த படங்களைவிட எனது படம் மிகஅருமையாக அமைந்திருந்ததால் " லயோலாக் கல்லூரி " முதல்வர் திரு. வீன் என்பவர் அப்படங்களை லயோலாக் கல்லூரித் திரையில் போட்டுக் காண்பிக்கும்படி வேண்டினுர். அவரது அழைப்பை ஏற்றுக்கொண்டு கல்லூரிக்குச் சென்றேன். அதுதான் நான் எனது வாழ்க்கையில் கல்லூரிக்குள் நுழைந்த முதல் நிகழ்ச்சியாகும். அன்று நான் படம் போட்டுக் காண்பித்தேன். ஆனுல் அதற்குமுன் ஒரு விதியினை மாணவர்கள் ஒப்புக்

கொள்ளும்படி செய்தேன். அதாவது அவர்கள் விரும்பும் மாநாட்டுப் படத்தை முதலில் போட்டுக் காண்பிப்பேன். அது முடிந்ததும், நான் விரும்பும் சில கல்விப்படங்களும் போட்டுக் காண்பிப்பேன். அவற்றையும் அவர்கள் தொடர்ந்து பார்க்க வேண்டும். படம் முடியும்வரை யாரும் எழுந்துபோகக் கூடாது, என்று வலியுறுத்திக் கூறினேன். ஆசிரியர்களும், மாணவர்களும் எனது விதியை ஏற்றுக் கொண்டனர். மாலை 5 மணிக்குத் துவங்கிய படக்காட்சி இரவு 1 மணி வரை நடந்தது. இடையில் யாரும் உணவுண்ணக்கூட எழுந்திருக்கவில்லை, படம் தொடர்ந்து நடந்தது. இரவு 1 மணிக்குப் பார்வையாளர் பக்கம் திரும்பினேன். கல்லூரி முதல்வரும், ஒன்றிரண்டு மாணவர்களும் தவிர மற்ற அனைவரும் தமதுநாற்காலிகளிலேயே உறங்கிக்கொண்டிருந்தனர். மேலும் அவர்களை நான் சோதிக்க விரும்பாததால் படக்காட்சியை அத்துடன் முடித்தேன், அன்றுதான் கல்லூரி என்றால் என்ன என்பதைப் பற்றி முதன்முதலாக தெரிந்து கொண்டேன்.

கல்வி என்பது மாணவர்களுக்கு உதவவும், மனித இனத்துக்கு நன்மை பயக்கவும் ஏற்பட்ட ஒரு சாதனமாகும்! மாணவர்கள் கல்விக்காகவே இருக்கிறார்கள் என்றுஎண்ணக்கூடாது. கல்வி என்பது மாணவர்களுக்கு ஒரு ஊன்றுகோலேயாகும். புத்தகங்களிலிருந்தும், சொற்பொழிவுகளிலிருந்தும் நீங்கள் பெறும் அறிவும், தேர்தல்களில் பெறும் நூற்றுக்கு நூறு மதிப்பெண்ணும் இறுதியில் பெறும் பட்டமும் உண்மையான கல்வியாகா! இவையெல்லாம் உங்களது வாழ்க்கை என்னும் கல்விக்கு வளர்ச்சிப் படிகளாகும்! ஆகவே இங்கு நீங்கள் நல்ல கடமை உணர்ச்சியோடு சிறந்தபயிற்சி பெற வேண்டும். உங்கள் சக்திகளை வீணாக்காமல் வளர்த்துக்கொள்ள வேண்டும். உங்கள் பண்புகளை நல்ல அடிப்படையில் உருவாக்கிக் கொள்ள வேண்டும். நீங்கள் சமு

தாயத்தின் பணியாட்கள் (Servants) என்ற மனப்பான்மை யைக் கொள்ள வேண்டும். தவறினுல் நீங்கள் பல உண் மைகளைக் கற்றுக் கொள்ள இயலாமற் போய்விடும்.

நான் ஒரு கொள்கையை உறுதியாகக் கொண்டிருக் கிறேன். அதாவது நமது வாழ்வின் முதல் 25 ஆண்டுகளில் கல்வியும் பயிற்சியும் பெறவேண்டும். அடுத்த 25 ஆண்டுகளில் அவற்றைப் பயன் படுத்திப் பொருள் ஈட்ட வேண்டும். கடைசி 25 ஆண்டுகளில் ஈட்டிய பொருளை நல் வழிகளில் செலவு செய்து புகழ் அடையவேண்டும். இந்தக்கொள்கைகளை நீங் களும் கடைபிடித்தால் வாழ்வில் முன்னேற்றம் காணலாம்.

நமது உடலையும் மனத்தையும் கெடுக்கக்கூடிய பல பொருள்கள் இப்பொழுது உலகில் இருக்கின்றன. உதாரண மாக உணவை எடுத்துக் கொள்ளுங்கள். பொருந்தாத உணவை உண்பதால் உடலும், அதனுல் மனமும் கேடுறு கின்றன. மனிதர்களில் சிலர் சினத்துடனும், சிலர் நல்ல பண்புடனும், சிலர் சூழ்ச்சி மனப்பான்மையுடனும், சிலர் உறுதியுடனும், சிலர் நோய்வாய்ப்பட்டும் வாழக் காண் கிருேம். இவையெல்லாம் உணவாலும், தட்ப வெப்பத் தாலும் சூழ்நிலைகளாலுமே ஏற்படுகின்றன. மனம் உறுதி யாக இருந்தால் இம்மாற்றங்களை நாம் பெரும் அளவுக்குத் தடுத்து விடலாம். எனது கூற்று உங்களுக்குப் பொருத்த மற்றதுபோல் தோன்றக் கூடும், ஆனுல் உணவு—உடல்— மனம் ஆகிய மூன்றும் ஒன்ருெடொன்று இணைந்தன என் பதற்கு ஒரு சான்று கூறுகிறேன்.

ஒரு பாடும் 'கிராம போன்' பெட்டிக்கு முன்னுல் ஒரு "எக்ஸ்ரே" சாதனத்தைப் பொருத்தி, அதற்கு முன் னுல் ஒரு பூனையை நிறுத்தி உணவு கொடுத்தால், அந்தப் பூனையின் வயிற்றில் நடைபெறும மாறுதல்களை எக்ஸ்ரேப் படம் மூலம் காணலாம். பூனையின் வயிறறில் ஒரே அள

வாக "ஹைடிரோகுளோரிக் அமிலம்" சுரப்பதையும் உணவும் அமிலமும் ஒன்ருகக் கலப்பதையும், உணவு சரி யாகச் செரிப்பதையும் பார்க்கலாம். ஆனுல் கிராமபோன் கருவியில் பாடும் பாட்டை மாற்றி, நாய் குரைப்பதைப் போன்ற ஒலி எழுப்பும் இசைத்தட்டைப் போட்டால், பூனைக்குப் பயமும் சினமும் ஏறபடுகின்றன. உடனே அதன் வயிற்றிலும் மாறுதல் ஏற்படுகின்றது. உணவு செரிப்பது தடைப்படுகிறது; அதனுல் சோர்வும், நோயும் ஏற்படு கின்றன. இதை நீங்கள் நன்ருக அறிய வேண்டும். மேலும் மனித உணர்வுகளுக்கும், உடலுக்கும் உள்ள தொடர்பை நீங்கள் பலமுறை அனுபவித்திருக்கலாம். யாரா வது ஒருவருக்குத்திடீரென்று கோபமோ அல்லது துக்கமோ வந்தால் உடனே அவரது உடலில் சோர்வு ஏற்படுகிறது: உடல் முழுதும் வேர்க்கிறது. அதற்குக் காரணம் என்ன? உணவோ அல்லது மருந்தோ அல்லது தட்பவெட்பமோ அம்மாறுதலை ஏற்படுத்தவில்லை. பின் அம்மாறுதலை ஏற் படுத்தியது எது? மனமல்லவா? ஆகவே மனமும், உடலும் உணவுகளும் ஒன்றோடொன்று தொடர்புடையன என்பதை நீங் கள் உணரவேண்டும். மூன்றையும் நல்ல நிலையில் வைத்திருக்க வேண்டும், அதற்கு உங்களது சக்திகளை வீணுக்காமல் திரட்டி வைக்கவேண்டும். அப்பொழுதுதான் பல செயற் கரும் செயல்களை உங்களால் செய்ய முடியும்.

சென்னையில்...

கிண்டி, பொறியியற் கல்லூரி இயந்திரப் பிரிவு மன்றத் தில் 25-2-1953-இல் ஜி. டி. நாயுடு சொற்பெருக்காற்றினுர். அதன் ஒரு பகுதி..."இங்கே நான் பொறியியலைப்பற்றி ஒரு சிறிதும் பேச விரும்பவில்லை. அதற்குக் காரணம் நீங்கள் நாள்தோறும் அதைப்பற்றியே படித்துக் கொண்டும் கேட்டுக் கொண்டும் இருக்கிறீர்கள் என்பதேயாகும்.

எனவே சில முக்கியமான அறிவுரைகளை மட்டும் உங்களுக்கு நான் கூற விரும்புகிறேன்.

முன்னாட்களில் பொறியியல் பட்டதாரிகள் திறமைசாலிகளாகவும், உறுதியான உள்ளம் படைத்தவர்களாகவும் இருந்தார்கள். அவர்கள் காலத்தில் மின்சார ரயிலோ அல்லது மோட்டார் சைக்கிளோ அல்லது காரோ கிடையாது. அளவுக்கு மீறிய இசை விழாக்களோ, திரைப்படங்களோ கிடையா. அந்நாள் மாணவர்கள் உண்ணும்பொழுதும் கல்வி பற்றிய சிந்தனையிலேயே இருந்தார்கள். ஆகவே அறிவாற்றல் படைத்தவர்களாக வெளிவந்தார்கள். ஆனால் உங்களுக்கோ கல்வியைப்பற்றி நினைக்கவே நேரமில்லை. உங்களது எண்ணமெல்லாம் களியாட்டங்களைச் சுற்றியே வட்டமிடுகின்றன. அதனால் சக்தி சிதறுகிறது; உள்ளமும் உடலும் கெடுகின்றன.

கல்லூரியில் நீங்கள் படிக்கும் காலத்தைச் சுருக்கி, அந்த அளவுக் காலத்தைத் தொழிற்சாலைகளில் செலவிடும்படி செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் உங்களது நேரமும் வீணாகாது; சோம்பேறித்தனமும் ஏற்படாது; உழைப்பிற்கேற்ற ஊதியமும் கிடைக்கும்; உங்களது பெற்றோரின் சுமையும் ஓரளவுக்கு நீங்கும். தொழிற்சாலைப் படிப்புக்காலம் முடிந்ததும் உங்களுக்குப் பட்டம் தரப்பட வேண்டும். கல்லூரிகளில் யாருக்கும் இடமில்லை என்பதோ அல்லது வடிகட்டும் தேர்வு முறைகளோ (selection) கூடாது. நிறையத் தொழிற் கல்லூரிகளைத் தோற்றுவிப்பதன் மூலம் இடநெருக்கடியைத் தவிர்க்கலாம். அரசாங்கமே புதிய கல்லூரிகளை நிறுவ வேண்டும். அதற்கு மிகுந்த பணச் செலவு ஏற்படுமே என்று அஞ்சவேண்டியதில்லை. கல்லூரிகள் எல்லாம் வாணிக முறைப்படி தொழிற்சாலைகள்போல் நடத்தப்பட வேண்டும். அங்கு மாணவர்கள்

உழைத்துப் பொருளீட்ட வசதி இருக்க வேண்டும். கூட்டுறவு முறையில் கல்லூரி இயங்க வேண்டும். உற்பத்தியாகும் பொருள்களின் வருவாயைக் கொண்டே கல்லூரிச் செலவுகளைச் சரிக்கட்டலாம். இதனால் நாட்டின் தொழிலறிவும், தொழில் நிலையும், பொருளாதாரமும் பெரிதும் உயரும்!

வாணியம்பாடியில்...

இஸ்லாமியக் கல்லூரித் தமிழ் மன்றத்தில் 11-2-1953-ல் ஜி. டி. நாயுடு ஆங்கிலத்தில் பேசிய பேச்சின் ஒரு முக்கியமான பகுதி..."நான் தமிழைப்பற்றி ஆங்கிலத்தில் பேசுகிறேன். அதற்காக முதலில் என்னை மன்னிக்கவும். நான் தமிழில் பேசினால் நீங்கள் மட்டுமே அறிய முடியும். ஆனால் ஆங்கிலத்தில் பேசினால், பின்னர் இப்பேச்சை வெளிநாட்டாரும் அறிய வாய்ப்பு ஏற்படும்...நான் இளமைக் காலத்தில் தமிழ்மொழியில் அளவுகடந்த பற்று வைத்திருந்தேன். காலப்போக்கில் எனக்கு அதனோடு இருந்த தொடர்பு குறைந்தது. தமிழ்தான் உலகத்திலேயே முதன் முதலில் தோன்றிய மொழி என்பதும், அதுதான் மற்றெல்லா மொழிகளுக்கும் பிறப்பிடம் என்பதும், அது நல்ல இலக்கிய வளம் உடையது என்பதும் எனது அசைக்க முடியாத கருத்து. இந்தக் கருத்தை நான் அமெரிக்காவில், 1940-ல் நடந்த பல பொதுக்கூட்டங்களில் பேசும்போது வலியுறுத்திக் கூறியுள்ளேன். அந்தப் பேச்சின் சில பகுதிகள் "சர்விசஸ் அண் சேல்ஸ்" என்னும் அமெரிக்கப் பத்திரிகை 1940-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் இதழில் வெளிவந்துள்ளன. ஆனால் தமிழில் உள்ள ஒரே ஒரு குறை...அதில் ஏராளமான ஆபாசக் கருத்துக்கள் கலந்துவிட்டன என்பதேயாகும். நீங்கள் தமிழைப் பயிலும்பொழுது தீயவற்றை நீக்கி நல்லவற்றையே படிக்க வேண்டும், தமிழில்

மிகச் சிறந்த அறநூல்கள் இருக்கின்றன. அத்தகைய அற நூல்களை நீங்கள் உலகின் வேறெந்த மொழியிலும் காண முடியாது.

நான் ஆங்கிலமும், ஒரு சில வட இந்திய மொழிகளும் பயின்றுள்ளேன். எனக்குத் தெரிந்தவரை தமிழ், மனித குலத்தின் அறப் பண்பை வளர்க்கும் ஓர் அரிய மொழியாகும்! ஆனால் நீங்கள் தமிழோடு அமையாது, ஆங்கிலத்திலும் நல்ல புலமை பெறவேண்டும். விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகியவை ஆங்கிலத்தில்தான் இருக்கின்றன நான் உங்களுக்குக் கூற விரும்புவது தமிழில் பற்றும், ஆங்கிலத்தில் புலமையும் பெற்று நாட்டை உயர்த்தவேண்டும் என்பதேயாகும்!

TAMIL NADU ARCHIVES LIBRARY
No.
EGMORE, MADRAS

15. உயர்ந்த பண்புகள்

உறுதியும் உழைப்பும்

இதுவரை ஜி. டி. நாயுடுவின் அரிய வாழ்க்கை வரலாற்றைப் படித்தோம். அவர் எளிய குடும்பத்தில் பிறந்தும், சாதாரணக் கல்விகூடக் கற்காதிருந்தும், மக்கள் மனதைக் கவரக்கூடிய அளவுக்கு முன்னேறினார் என்றால் அதற்குக் காரணம் அவரது ஓயாத உழைப்பும் உறுதியான உள்ளமுமே ஆகும்! காலை 9 மணிக்கு அலுவலகத்தில் நுழைந்தால் இரவு 1 மணி, 2 மணி வரை அவர் வேலை பார்க்கிறார். சில சமயங்களில் இரவு முழுதும் விழித்திருந்து பணியாற்றுகிறார். அப்படிப் பணியாற்ற வேண்டுமானால் உள்ள உறுதி வேண்டும்; அது அவரிடம் நிறைய இருக்கிறது.

அன்பும் ஆதரவும்

ஜி. டி. நாயுடுவுக்கு இந்நாட்டு மக்களிடம் அளவு கடந்த அன்புண்டு. அவர்கள் பொருளாதாரத் துறையில் விரைந்து முன்னேற வேண்டும் என்பது அவரது ஆவல்! அதற்காகத்தான் ஏராளமான தொழிற்சாலைகளை நிறுவி வேலை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார். தொழிலாளிகளின் வாழ்க்கைத் தரம் முன்னேற வேண்டும் என்று அடிக்கடி கூறுவார். அதற்காகவே கோவையில்

"தொழிலாளர் நலச் சங்கம்" ஒன்றைத் தோற்றுவித்து, அதன் தலைவராக இருந்து தொண்டாற்றுகிறார். தனது பல இலட்சக்கணக்கான சொத்துக்களை எல்லாம் தொழிலாளர்களுக்கே எழுதி வைத்துவிட்டார். இவரைப் போன்ற பரந்த மனம் படைத்த ஒரு அன்பு மனிதரை எங்கும் காண முடியாது.

அறமும் புகழும்

ஜி. டி. நாயுடு இரண்டு தொழிற் கல்லூரிகளை ஏற்படுத்திய செய்தியை நாம் ஏற்கெனவே படித்தோம். அவர் அத்துடன் அமையவில்லை. கலைக் கல்லூரிகளிலும் தொழிற்கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என்பதற்காகப் பச்சையப்பர் கல்லூரி, இராமகிருஷ்ண கல்வி நிலையம், ஆந்திரப் பல்கலைக் கழகம் முதலியவற்றுக்கு ஏராளமான நன்கொடைகள் வழங்கினார். பல உயர்நிலைப் பள்ளிகளுக்கு பேருந்துகளை (பஸ்) இலவசமாகக் கொடுத்தார். இலட்சுமி நாயக்கன் பாளையத்தில் ஒரு உயர்நிலைப் பள்ளியை ஏற்படுத்தினார். 1943-இல் இரண்டாம் உலகப் போர் நடந்து கொண்டிருக்கையில் சென்னை மாநிலக் கவர்னரிடம் போர்க் கால நன்கொடை நிதியாக ரூ. 1,10,000-ம், போர்க் கடன் பத்திரங்களுக்காக ரூ. 10,00,000-ம் கொடுத்தார். அதே காலத்தில் யு. எம். எஸ். நிலையத் தொழிலாளர் துன்ப நீக்க நிதிக்காக ரூ. 1,50,000 வழங்கினார். மேலும் மாகாணத் தொழிலாளர் நல வளர்ச்சிக்கென ரூ. 1,00,000ம் ரேடியோ - மோட்டார்த் தொழில் வளர்ச்சிக்கென ரூ. 2,00 000-ம், தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றத்திற்கென ரூ. 50,000-ம், போலீஸ்காரர்கள் தம் குழந்தைகளின் வளர்ச்சிக்கென ரூ. 50,000-ம் நன்கொடை கொடுத்தார். அப்பொழுது சென்னை கவர்னராக இருந்த சர். ஆர்தர்

ஹோப் என்பவர் கூறினர்..."ஜி. டி. நாடுவை 'இந்தியாவின் நப்பீல்டு' (Lord Nuffield) என்று கூறுவது மிகவும் பொருத்தமாகும். எங்கள் நாட்டில் நப்பீல்டு பிரபு என்பவர் தன் வருமானத்தின் பெரும் பகுதியைக் கல்விக்கும், சமுதாய நலனுக்கும் நன்கொடையாகக் கொடுத்திருக்கிருர். அதைப் போலவே கோவையில் ஜி. டி. நாயுடு அவர்களும் கொடை வழங்கி வருகிருர். அவர் இந்நாட்டு மக்களுக்கு ஒரு நல்ல வழிகாட்டியாவார்" என்று பாராட்டினர். தனது அழியாத அறச் செயல்களின் மூலமும், விஞ்ஞான விந்தைகளின் வாயிலாகவும் நிலேயான புகழை ஈட்டிக்கொண்டவர் ஜி. டி. நாயுடுவே ஆவார்.

விளேயாட்டுப் பிள்ளே

ஜி. டி. நாயுடு குழந்தை உள்ளம் படைத்தவர். அவர் சில சமயங்களில் விளேயாட்டுப் பிள்ளேபோலவே நடந்து கொண்டிருக்கிருர். அதற்கு ஒரு உதாரணம்... திவான்பகதூர் சி. எஸ். இரத்தின சபாபதி முதலியார் என்பவர் நம் நாயுடுவுக்கு நெருங்கிய நண்பர். ஒரு நாள் ஜி. டி. நாயுடு என்ன செய்தார் தெரியுமா? சி. எஸ். இரத்தின சபாபதி முதலியார் தேநீர் விருந்துக்கு அழைப்பதுபோல் கோவை நகர்ப் பிரமுகர் பலருக்கு அழைப்பு அனுப்பிவிட்டார். குறிப்பிட்ட நாளில் எல்லா நண்பர்களும் முதலியார் வீட்டில் கூடி விட்டனர். வெளியே சென்றிருந்த முதலியார் வீட்டுக்குள் நுழைந்தார்... ஒரே கூட்டம்! அவருக்கு ஒன்றுமே புரிய வில்லே. கூட்டத்தின் நடுவே ஜி. டி. நாயுடுவும் உட்கார்ந்திருந்தார் முதலியார் நாயுடுவை அழைத்து, "என்ன காரியம்?" என்று விசாரித்தார். உடனே நாயுடு காலண்டரைச் சுட்டிக் காட்டினர்... அதில்... ஏப்ரல் 1 என்று இருந்தது. அப்பொழுதுதான் முதலியாருக்கு உண்மை புலப்பட்டது. பலருக்கு நடுவில் நாயுடு தன்னே

ஏப்ரல் முட்டாளாக்கிவிட்டார் என்பதைப் புரிந்து கொண்டார். பிறகு நாயுடு அனைவரையும் தம் வீட்டிற்கு அழைத்துச் சென்று விருந்தளித்தார்!

புகைப்படத் திறமை

புகைப்படம் எடுப்பதில் நாயுடு மிகவும் திறமை வாய்ந்தவர். அவர் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பல காட்சிகளைச் சலனப் படமாகப் பிடித்திருக்கிறார். அவற்றில் கல்வி சம்பந்தமான படம் மட்டும் பல இலட்சம் அடிகளைக் கொண்டது. அதைச் சேர்ந்தாற்போல் 600 மணிநேரம் ஓட்டிக் காட்டலாம் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன். அவர் ஒரு திறமை வாய்ந்த விஞ்ஞானி ஆகையால் எல்லா நிகழ்ச்சி களையும் எழுதி வைப்பதைவிடப் படமாக எடுத்துவைத்திருக்கிறார். ஒவ்வொரு படமும் ஒவ்வொரு கதை சொல்லும்! இவை தவிர நாயுடு சில உயர் தலைவர்களையும் புகைப்படம் எடுத் துள்ளார். அவர்களில் இட்லர், முசோலினி, நேரு, சுபாஷ்சந்திர போஸ், எட்வர்டு மன்னர் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

சிக்கனம்

நாயுடு செல்வம் படைத்தவராக இருந்தும்கூடச் சிக்கனமாகவே வாழ்கிறார். சாதாரணமாக அவர் எப்பொழுதும் தமிழ்நாட்டு முறைப்படி வேட்டி—சட்டை யுடனேயே காட்சி அளிக்கிறார். ஆடம்பரமான உடைகள் அணிவதை அவர் விரும்புவதில்லை. உணவுப் பொருள்கள் வீணாவதை அவர் அனுமதிக்கமாட்டார். அவரது கல்வி நிலையங்களில் உள்ள இளைஞர்கள் தம் இலைகளில் ஒரு பருக்கை சோறு மீதம் வைத்தால் கூடத் தண்டனைக்கு ஆளாவர். அவர், விழாக்களின் பேரால் பணமும் முயற்சி

யும் வீணாகக் கூடாது என்று கூறுவார். அவரது மனைவியார் பெயர் செல்லம்மாள் என்று முன்பே படித்தோம். அவ்வம்மையார் கிருஷ்ணம்மாள், சரோஜினி என்ற இரு பெண் மக்களைப் பெற்றார். இவ்விருவருள் சரோஜினியின் திருமணம் 1944-இல் கோவையில் சென்னை மாநிலக் கவர்னர் சர் ஆர்தர் ஹோப்பின் தலைமையில் மிகச் சிக்கனமாக நடைபெற்றது. அப்பொழுது யாதொரு ஆடம்பரமும் இல்லை. மணமக்கள் மோதிரமும் மாலையும் மாற்றிக் கொண்டனர். விருந்தினர்களுக்குத் தேநீர் விருந்து கொடுக்கப்பட்டது. தலைவர் மணமக்களை வாழ்த்தினார். திருமணம் முடிந்தது. செலவும், தொல்லையும் இல்லாமல் சிக்கனமாகத் திருமணம் நடத்தி நாட்டுக்கு வழிகாட்டினார் நாயுடு !

உயர்ந்த ஆசிரியர்

ஜி. டி. நாயுடு ஒரு அதிசயமான ஆசிரியர். அவர் தம் மாணவர்களிடம் அன்பாகவும், அதே நேரத்தில் கண்டிப்பாகவும் நடந்து கொள்வார். அவர் காலை, மாலை, இரவு ஆகிய எந்த நேரத்திலும் மாணவர்கட்கு வகுப்புக்கள் நடத்துவார். அவர் கல்லூரிகளையும் தொடங்குவார்; அதே சமயத்தில் ஆறுவாரப் பயிற்சி வகுப்புக்களையும் நடத்துவார்; அத்துடன் கண்காட்சிகளுக்கும் ஏற்பாடு செய்வார். கோவையில் பல **தொழிலியல் கண்காட்சிகளை** நடத்தியிருக்கிறார். 1949-இல் அவர் நடத்திய தொழிற் கண்காட்சி அனைத்துலகப் புகழ்பெற்றது ! அதற்குப் பல இலட்சம் மக்கள் வருகை தந்து, தொழிலறிவு பெற்றுச் சென்றனர். சுருங்கச் சொன்னால் அவரது "கோபால் பாக்" கட்டிடமே ஒரு சிறந்த கண்காட்சி சாலையாகும்.

அக்கட்டிடத்தின் எல்லாப் பகுதிகளும் பூமிக்கடியில் மின்சாரக் கம்பிகளின் மூலம் இணைக்கப்பட்டிருக்கின்றன.

கட்டிடத்தின் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலையில் இருப்போருடன் தொடர்பு கொள்ளலாம். அங்குள்ள நடு மண்டபம் 370 அடி நீளமும், 75 அடி அகலமும் உடையது. அங்கு எதிரொலி கேட்காது. வெளிச்சமும் காற்றும் நிறைய உண்டு. காலை மாலை எந்த நேரமும் நம் நிழல் அங்கு விழாது. அக் கட்டிடத்திற்குள் ஆகாய விமானம், ரோல்சுராய்சு மோட்டார்கார் முதலியவற்றின் விலையுயர்ந்த கருவிகள் எல்லாம் இருக்கின்றன. அவற்றின் இடையே உள்ள சிறு பொம்மை மோட்டார்கார் நம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் !

நாயுடு அவர்களின் உணவுக்கூடம் பார்க்கத் தக்கது. அங்குள்ள சுவரில் வெந்நீர்—தண்ணீர்க் குழாய்கள் காட்சி அளிக்கின்றன. ஒரு பக்கச் சுவர்மீது மனிதர்க்கு வேண்டிய சராசரி உணவுப் பொருள்கள் உணவுச் சத்து ஆகியவை பற்றிய விளக்கப் பலகைகள் இருக்கின்றன. நாயுடு ஒரு சிறந்த ஆசிரியராதலால் அவரிடம் மேற்கு ஜெர்மனிமுதலிய வெளிநாட்டைச்சேர்ந்த மாணவர்கள்கூடத் தொழில் பயிற்சி பெற்றுச் சென்றிருக்கின்றனர்.

சுற்றுப்பயணம்

ஜி டி. நாயுடுவுக்குச் சுற்றுப் பயணம் செய்வதில் ஆர்வம் மிகுதி ! அவர் பலமுறை உலகச் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருக்கிறார். 1950-ஆம் ஆண்டு மேத் திங்கள் 7-ஆம் நாள், அவர் நான்காம் முறையாக அயல்நாட்டு யாத்திரை மேற்கொண்டார். அப்பொழுது அவர் இங்கிலாந்து, நார்வே, சுவீடன், டென்மார்க், ஜெர்மனி, சுவிட்சர்லாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளுக்குச் சென்றார். சுவீடன் தலைநகரான **ஸ்டாக் ஹோமில்** நடந்த விவசாய மாநாட்டில் கலந்து கொண்டார். **கலிபோர்னி**

யாவில் உள்ள விவசாயப் பண்ணைகளைப் பார்வையிட்டார். பின்னர் 1958, 59, 61 ஆகிய ஆண்டுகளிலும் உலகத்தைச் சுற்றி வந்தார். மேற்கு ஜெர்மனியில் ஒரு விருந்தின்போது "உப்புமா" செய்து அனைவருக்கும் பரிமாறினார். ஜெர்மனியர்கள் அதைப் பெரிதும் சுவைத்தனர். எனவே அதைச் செய்யும் முறையை நாயுடு அவர்களுக்குக் கற்றுக் கொடுத்தார். அவர் எப்பொழுது வெளிநாடு போகிறார்? எப்போது திரும்புகிறார்? என்பதே யாருக்கும் தெரியாது. அந்த அளவுக்கு அவர் அயல் நாட்டுப் பயணங்களை முடித்துக் கொள்கிறார். அவரைப் பின்பற்றி நாமும் முடிந்த அளவு சுற்றுப் பயணங்களை மேற்கொண்டால் பெரும்பயன் அடைய முடியும்!

ஒப்புமை

ஜி. டி. நாயுடு அயராது உழைப்பதில் **நெப்போலியன்**; அறிவியல் அறிவில் **ஐன்ஸ்டீன்**; கொடை கொடுப்பதில் **நப்பீல்டு**; நாவல்களை வெறுப்பதில் **நார்த் கிளிப்** (Lord North cliffe); ஆட்களை அறிவதில் **ஜூலியஸ் சீசர்**; தத்துவம் பேசுவதில் **இராதாகிருஷ்ணன்**; கல்வி அறிவில் **பெர்னட்ஷா**; கருவிகளைக் கண்டுபிடிப்பதில் **எடிசன்**; எளிமையாக வாழ்வதில் **காந்தி**. இன்னும் உலகத் தலைவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு துறையில் நிகராக விளங்குகிறார் **நாயுடு!**

16. பாராட்டுக்கள்

சர். சி. வி. இராமன்

ஜி. டி. நாயுடுவின் பல்துறை அறிவை உலகத் தலைவர்கள் பலரும் பாராட்டியிருக்கின்றனர். அவர்களுள் முதலில் சர். சி. வி. இராமன் அவர்கள் தெரிவித்துள்ள பாராட்டுதலைப்பற்றிப் பார்ப்போம்...“குறிப்பிடத்தக்க மனிதரான திரு. ஜி. டி. நாயுடுவைப் பற்றியும், அவரது பண்புகளைப் பற்றியும், அவர் கண்டுள்ள மாபெரும் வெற்றிகளைக் குறித்தும் எழுதும் திறமை எனது பேனவுக்கு இல்லை என்று நினைக்கிறேன். இன்று காலைதான் நான் போத்தனூருக்கு அருகில் உள்ள அவரது விவசாயப் பண்ணையைப் பார்வையிட்டேன். அங்கே அவர் ஏராளமான விந்தைகளைச் செய்திருக்கிறார். அவர் ஒரு சிறந்த கல்விமான், பொறியியல் மேதை; தொழில்நுட்ப வல்லுநர்; அன்பான மனிதர். அவர் நாட்டு மக்களின் கண்ணீரைத் துடைக்க விரும்புகிறார். சுருங்கச் சொன்னால் ஜி. டி. நாயுடு ஆயிரத்தில் ஒருவர் அல்லர்; பத்து லட்சத்தில் ஒருவர்!—இதுகூட அவரது புகழுக்குப் பொருத்தமான வார்த்தையாகாது!”
சி. வி. இராமன். 9-4-1950.

வேறொரு சமயத்தில் நாயுடுவைப்பற்றி சர். சி. வி. இராமன் அவர்கள் கூறியதாவது..."நாயுடு ஒரு அதிசய மான மனிதர். அவர் பள்ளிக்குச் சென்று பாடம் படிக்க வில்லை. ஆனால் நாம் வியக்கத்தக்க அளவிற்கு அவரிடம் அறிவுத் திறன் மலிந்திருக்கிறது. அவர் எல்லாத் தொழிலை யும் நன்கறிந்தவர். நேற்றிரவு நான் அவருடைய கல்லூரி உணவு விடுதிக்குச் சென்றிருந்தேன். மாணவர்களில் ஒருவன் என்னிடம், "எப்படி ஐயா நீங்கள் வைரத்தில் துளை போடுகிறீர்கள்?" என்று கேட்டான். அதைச் சரி யாகச் சொல்ல எனக்கு நினைவு வரவில்லை. உடனே நாயுடு அம்முறை பற்றி மாணவர்கட்கு விளக்கிச் சொன்னார். அதைக் கேட்டதும் நானே அயர்ந்து போனேன். கோவை மக்கள், இப்படிப்பட்ட ஒரு மனிதரை தம்மிடையே பெற்றிருக்கப் பெரும்பேறு செய்திருக்க வேண்டும். நாயுடு அவர்கள் சிறந்த அறிஞர் மட்டுமல்லர். அமெரிக்கர்கள் கடைப்பிடிக்கும் "அறிவது எப்படி?" (How to know?) என்ற கொள்கை யையும் உடையவர். அவர் ஏதாவது ஒரு பொருளைக் கண்ணுற்றால் அதைப்பற்றித் தெளிவாகத் தெரிந்துகொள் கிறார். நம் நாட்டு மக்கள் ஒரு வேலையை எப்படிச் செய் வது என்பதைப்பற்றி உபன்னியாசம் செய்வார்கள். ஜி. டி. நாயுடு அதற்கு விதிவிலக்கு! இவரிடம் எடுத்த காரி யத்தைத் தொடுத்து முடிப்பதற்கேற்ற மனஉறுதி, ஊக்கம், விடா முயற்சி, "அறிவது எப்படி?" என்ற குறிக்கோள் ஆகிய அனைத்தும் அமைந்திருக்கின்றன. இவருக்குப் பழங் காலச் சம்பிரதாயங்களில் நம்பிக்கையில்லை. தற்காலத் திற்கு ஒத்த நவீனப் பண்பாட்டையே இவர் விரும்புகிறார். இன்று நண்பகலில் இவர் எனக்கு பௌதீகம், இரசாயனம் பொறியியல், மனையியல் முதலிய 60 விஞ்ஞானப் பிரிவு களைப் பற்றித் திரைப்படம் மூலம் தமிழில் கற்பித்தார். இவர் நம் நாட்டு மக்களின் திறமையை நடைமுறையில்

காட்டுகிருர். இவர் ஒரு அறிய மனிதர்! எதிர்காலத்தை அறியும் ஆற்றலும் திறமையும் உடையவர்! மற்ற மக்களின் உயர்ந்த வாழ்க்கைக்கு உதாரணமாக விளங்கக் கூடியவர்!

சர். ஆர். கே. சண்முகம் செட்டியார்

இந்தியாவின் முன்னுள் நிதியமைச்சராக இருந்த சர். ஆர். கே. சண்முகம் செட்டியார் அவர்கள் கூறுவதைக் கேளுங்கள்...''திரு. நாயுடு அவர்கள் ஒரு அமைச்சரை வரவேற்று, அவருக்குத் தேநீர் விருந்து கொடுத்து, அரசாங்கத்தை எப்படி நடத்தவேண்டுமென்று போதிக்கிருர், பல்கலைக் கழகத் துணைவேந்தரை அழைத்து, வரவேற்பளித்து, கல்வி நிலையங்களை எங்ஙனம் நடத்தவேண்டுமென்று விளக்குகிருர். ஒரு தொழில் வல்லுநரை அழைத்துப் பாராட்டி நம் நாட்டுத் தொழில்முறைபற்றி வர்ணிக்கிருர். ஜி. டி. நாயுடு அன்போடு தன் எண்ணத்தை எடுத்துரைக்கும் முறை, அவரது உயர்ந்த நட்புணர்ச்சியையும், விடா முயற்சியையும், அறிவின் ஆழத்தையும் நமக்கு எடுத்துக் காட்டுகிறது.''

சர். சி. பி. இராமசாமி ஐயர்

''ஜி. டி. நாயுடு தனக்கே உரிய முறையில் சிந்தித்துச் செயலாற்றுகிருர். அவருடைய முறை புதிய முறை! அதனுல் போற்றுதற்குரிய பல வெற்றிகளைக் கண்டிருக்கிருர். அவருடைய ஆர்வமும், திறமையும், தலைமையும் இதுவரை பாராட்டப்படாதது நமது துரதிர்ஷ்டமே ஆகும். அவரது தனித் திறமை பெருமளவில் பயன் படுத்தப்பட வேண்டும்!''

டாக்டர் பி. என். டே.

(தலைமைப் பொறியியல் வல்லுநர்; கல்கத்தா)

"ஜி. டி. நாயுடு ஒரு தனிப் பல்கலைக் கழகம்! அவரது நிர்வாக அமைப்பு, கண்காட்சி, விவசாயப் பண்ணை ஆகியவை விந்தையானவை. நான் உலகம் முழுதும் சுற்றியுள்ளேன். எனினும் இவற்றைப் போன்ற விந்தைகளை வேறெங்குமே கண்டதில்லை. ஜி. டி. நாயுடுவைப் பார்க்க வருவது ஒரு புனிதமான இடத்துக்கு யாத்திரை போவதற்கு ஒப்பாகும்!"

ஜெர்மன் பத்திரிகையாளர்

"ஸ்டட் கார்ட் செய்துங்" என்னும் ஜெர்மன் பத்திரிகையின் நிருபர் திரு. வில்லி ஸ்டூவர் வால்ட் என்பவர் எழுதுகிறார்..."எனது பத்திரிகை வாழ்வின் 25 ஆண்டுக் காலத்தில் நான் சந்தித்த மனிதர்களில் மிகவும் விந்தையானவர் ஜி. டி. நாயுடுதான்! அவருடைய கண்கள் காந்த சக்தி படைத்தவை! அவரோடு தொடர்புகொள்ளும் ஒவ்வொருவரையும் கவரக் கூடியவை! அவர் எந்தப் பொருளையும் கூர்மையாக உற்று நோக்குகிறார். அவரது கண்கள் குறிப்பின்றி அலைவதில்லை. அவர் ஒரு அதிசய மனிதர்!"

அமெரிக்கத் தொழிலதிபர்

சிகாகோ நகரைச் சேர்ந்த எப். டிரேப்பர் என்னும் அமெரிக்க மின்-தொழில் அதிபர் எழுதுகிறார்... "திரு. நாயுடு அவர்களே! தாங்கள் இங்கு வருகை தந்ததைப் பெரிதும் மதித்துப் பாராட்டுகிறேன். தங்களோடு நான் கழித்த சில மணி நேரத்தை என் வாழ்வின் பொன்னான நேரமாகக் கருதிப் பூரிப்படைகிறேன். உங்களிடமிருந்து நான் நிறை

யக் கற்றுக்கொண்டதாக உணர்கிறேன். உங்களுடைய வாழ்க்கைப் பாதையை ஒரு குறிப்பிட்ட அளவிற்காவது பின்பற்றக்கூடிய ஆற்றலும், மன உறுதியும் எனக்கு ஏற்படும் என்று நம்புகிறேன்.''

டாக்டர் மொகந்தி

(ஒரிசா மாகாண அரசின் திட்டத்துறைச் செயலாளர்; கட்டாக்.)

''நான் தங்களது கல்வி நிலையங்களைப் பார்வையிட்டு வந்தது முதல் தங்களிடம் மோட்டார், வானொலித் துறைகளில் ஆறுவாரப் பயிற்சி பெறுவதற்குச் சில மாணவர்களை இங்கிருந்து அனுப்ப வேண்டுமென்று எங்கள் அரசாங்கத்தை வற்புறுத்தி வந்தேன். அரசாங்கம் எனது வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு, மாணவர் சிலருக்கு உதவிச் சம்பளம் வழங்க முன்வந்திருக்கிறது. அத்துடன் உங்களால் எத்தனை மாணவர்களுக்கு இவ்வாண்டு பயிற்சிதர முடியும் என்பதையும் விசாரிக்கச் சொல்லியிருக்கிறது. ஒவ்வொரு பாடத்திற்கும் மூன்று மாணவர்கள் வீதம் அனுப்ப வேண்டும் என்பது எங்களது ஆசை. ஆனால் நீங்கள் எத்தனை இடம் ஒதுக்குவீர்களோ அத்துடன் திருப்தியடைவோம். உங்களிடம் பெறுவதைப் போன்ற ஒரு பயிற்சியை எங்கள் மாணவர்கள் இந்தியாவில் வேறெங்குமே பெற முடியாது என்பது எனது எண்ணம். நான் இந்தியாவில் உள்ள பல்வேறு கல்வி நிலையங்களைப் பார்வையிட்டிருக்கிறேன் ஆனால் தாங்கள் தரும் பயிற்சியும், பண்பாட்டு உணர்ச்சியும் அலாதியானவை என்பது எனது முடிவான கருத்து! அதனால்தான் எங்கள் மாணவர்களை உங்களிடம் அனுப்புகிறோம். நீங்கள் நிச்சயம் இடம் ஒதுக்கி ஆதரிப்பீர்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

டாக்டர் ஹுமாயூன் கபீர்

(இந்திய அமைச்சர்; டில்லி.)

"திரு. நாயுடுவைப் பார்ப்பதும், அவரோடு தொடர்பு கொள்வதும் நமக்கு இன்பத்தையும், கல்வி அறிவையும் ஊட்டுகின்றன. அவர் ஒரு இயந்திர வல்லுநர் மட்டுமல்லர்; அவரே ஒரு இயந்திரமும் ஆவார்! அவருடைய ஆற்றலும் ஆர்வமும் அழிவற்றவை! அவருடைய நிர்வாகத் திறமை நமக்கெல்லாம் ஒரு எடுத்துக்காட்டு! அவர் பல துறை களில் ஆராய்ச்சிகளும் சோதனைகளும் மேற்கொண்டு நாட் டிற்குப் பல வெற்றிகளைத் தந்துள்ளார். நாடு அவரைப் பெரிதும் நம்பியிருக்கிறது!"

திரு. வி. வி. கிரி

(கேரள கவர்னர்)

"ஜி. டி. நாயுடு எனது பழைய நண்பர். நாங்கள் 'அனைத்திந்தியத் திட்டக் குழு''வை முதலில் ஏற்படுத்திய பொழுது விஸ்வேஸ்வரய்யாவும், நானும், ஜி. டி. நாயுடு வுக்குத்தான் அக்குழுவில் முதலிடம் அளிக்க வேண்டும் என்று எண்ணினோம். ஜி. டி. நாயுடு இந்த நாட்டில் காண முடியாத ஓர் அரிய பொறியியல் மேதையாவர். அவ ருடைய இதயம் மிகவும் மென்மையானது. அவர் நடத்தும் குறுகிய காலப் பயிற்சி வகுப்புக்கள் புரட்சிகரமானவை! அவர் நாடு முழுதும் இதனை அமுல் நடத்தி எல்லோருக்கும் அந்த வாய்ப்பினை அளிக்க வேண்டும். அவர் மாணவர் களுக்குக் கல்வியோடு ஒழுக்கமும் கற்பிக்கிறார். அதுதான் இன்றைய இந்தியாவிற்குத் தேவை.''

இத்தாலி நாட்டு நண்பர்

ஜி. டி. நாயுடுவின் நீரிழிவு நீக்கும் மருந்தால் குண மடைந்த வெர்னர் ரியட்டர் விட்டேல்'' என்பவர் எழுதுகிறார். 9-7-1955...' உங்களை நான் இங்கு முதலில் சந்தித்தபொழுது உங்களது நிறுவனத்திற்கு ஏதேனும் நன்கொடை அளிக்க விரும்பினேன். ஆனால் நீங்கள் ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டீர்கள். பிறகு விசாரித்ததில் சில நண்பர்களிடமிருந்து நீங்கள் மைக்கிராஸ்கோப், மைக்ரோ புரொஜெக்டர், கார் முதலியவற்றை நன்கொடையாக வாங்கிக்கொண்டிருப்ப தாக அறிந்தேன். ஆகவே நீங்கள் என்னிடமிருந்தும் எதையாவது பெற்றுக்கொண்டே தீரவேண்டும். நீங்கள் ''பிளாக் பாரஸ்ட்'' கடையில் வாங்கியுள்ள எல்லாக் கடிகாரங்களுக்கும் உரிய விலையை நானே கொடுத்துவிடு கிறேன். உங்களுடைய அதிசயமான மருந்தால் காப்பாற்றப் பட்ட ஒரு உயிருக்கு இந்தத் தொகை சிறிதும் ஈடாகாது! உங்க ளுக்கு நான் என்றென்றும் கடமைப்பட்டிருக்கிறேன்.''

முடிவுரை

இங்ஙனம் அனைத்துலகும் புகழும் அறிஞரான ஜி. டி. நாயுடுவை நாம் அவரது வாழ்க்கைக் காலத்திலேயே நன்கு பயன்படுத்திக்கொண்டு பாராட்ட வேண்டும். அவர் நம் நாட்டின் தேசியச் சொத்து! கள்ளம் கபடமற்ற உள்ளம் படைத்த அவருக்கு நாம் என்ன கைம்மாறு செய்யமுடியும்? அவரைப் பாராட்டுவோமானால் அதன்மூலம் ஒரு புதிய விஞ்ஞானப் பரம்பரையை நம் நாட்டில் தோற்றுவிக்க வழி வகுத்தவர்களாவோம். அவருக்கு முதல் மனைவி செல்லம் மாள் மூலம் இரண்டு பெண் மக்களும், இரண்டாவது மனைவி அரங்கநாயகி அம்மையார் மூலம் ஒரு பையனும் உண்டு. அந்தப் பையனுக்குத் தம் தந்தையாரின் பெய

ராகிய "கோபால்" என்பதையே நாயுடு சூட்டியிருக்கிறார். அவர் நமக்கு வைத்திருக்கும் அறிவறிந்த மக்கட் செல்வம் இவ்வளவுதான்! ஆனால் அவர் தந்துள்ள விஞ்ஞானச் செல்வங்களும் காட்டியுள்ள வாழ்க்கை வழிகளும் கணக்கி லடங்கா! அவற்றை நாம் பயன்படுத்திக் கொள்வோமா, இல்லையா என்பதுதான் நம் முன்னுள்ள சிக்கல்! மாணவர் உலகம் நாயுடுவைப் பின்பற்றி அழியாப் புகழ்பெற வேண்டும் என்பதே கல்வியாளர்களின் ஆவல்!

வாழ்க தமிழ்! வளர்க விஞ்ஞான அறிவு!!

தமி493
1163

— o —

TAMIL ARCHIVES LIBRARY
No. 106799
EGMORE, MADRAS-600 008

[illegible]
4-117